# தமிழ் எழுத்துகளின் நுண்மை விளக்கம்

ஆங்கிலமூலம் :

திரு. பா. வே. மாணிக்க நாயகர், பி. இ.

தமிழாக்கம் :

க. ப. சந்தோசம், பி. ஏ., எல். டி.,

கழக வெளியீடு : [illegible]

# தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

(The Tamil Alphabet : Its Mystic Aspect)

★

ஆங்கிலமூலம் :

திரு பா வே மாணிக்க நாயகர், பி இ,

தமிழாக்கம் :

க ப சந்தோசம், பி ஏ, எல் டி.

★

திருநெல்வேலித் தென்னிந்திய
சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்.
திருநெல்வேலி - 6. சென்னை - 1.

1968

© பாகற்பட்டி. வேங்கடசாமி மாணிக்க நாயகர் (1871-1981)

1968 THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS PUBLISHING SOCIETY, TINNEVELLY, LTD.

Ed 1 May 1968

# THAMIZH EZHUTHUKKALIN NUNMAI VILAKKAM

Appar Achakam, Madras- 1. ( I )

CONNEMARA PUBLIC LIBRARY
6 - AUG 1968
MADRAS



திரு. பா. வே, மாணிக்க நாயகர், பி. இ.



திரு. க. ப. சந்தோசம், பி. ஏ., எல். டி.

(மகிழ்நன்)



தவத்திரு. சுத்தானந்த பாரதியார்

CONNEMARA PUBLIC LIBRARY
6 AUG 1968
MADRAS

# பதிப்புரை

உலகெலாம் ஒருங்கு போற்றி உளங்கொண்டு ஒழுகிவருதற்கு முற்றுந் துணையாக நிற்கும் ஒப்புயர்வில்லாத் தனித்தமிழ் மறைநூல் திருவள்ளுவ நாயனாரருளிய திருக்குறள் என்பது தெளிவு. அந்நூல் தோன்றுதற் கிடனாயமைந்துள்ள தமிழ் நாடும் தமிழ் மொழியும் எத்துணைத் தொன்மையும் அறிவியல் உண்மையும், மறைபியலுடன் தோன்றியன என்னும் மெய்ம்மையும் காணல் வேண்டும் என்னும் வேணவா யாவர்க்கும் எழும் என்பது இயல்பே.

அதனை நிரப்பும் வகையில் இந்நூல் அமைந்துள்ளது. அவ் வுண்மை இதன் பெயர் கொண்டே நன்கு தெளியலாம். அஃதாவது "தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்" (The Tamil Alphabet : Its Mystic Aspect) என்பதாம். இது திரு. பா. வே. மாணிக்க நாயகர் அவர்கள் ஆங்கிலத்தில் ஆற்றிய சொற்பொழிவாகும். இதன் மொழிபெயர்ப்பு செந்தமிழ்ச் செல்வி கசு - கரு ஆம் சிலம்புகளில் திரு க. ப. சந்தோசம் (மகிழ்நன்) பி. ஏ. எல். டி அவர்களால் வெளி வந்துள்ளது. அஃது இப்பொழுது தனிநூல் வடிவாக வெளிவரு கின்றது.

இந்நூல், தமிழ் எழுத்துக்கள் தோன்றிய காலத்தே மொழி இயல்போடு மட்டுமன்றி மறையியல் உண்மையோடும் தோன்றி யுள்ளன என்னும் வாய்மையை வகைப்படுத்தி வரையறுக்கின்றது. சுருங்கச் சொல்லின் உலகியலுடன் அருளியலும் பிரிப்பின்றி இணைந்திருக்கின்றது என்பதாம். "இத்தகைய அரியபெரிய முயற்சி எல்லாம் ஒருங்கமைந்த நனிமிகப் பெரியார் ஒருவரின் தனி முயற்சி யாலோ அல்லது அத்தகைய பெரியார் பலர் கூடிய குழுவினாலோ அமைந்திருக்க வேண்டும்" என்று நூலாசிரியர் கூறுகின்றார்.

அஃதாவது தமிழில் காணப்படும் "ஒ" என்னும் குறில் ஒன்றே 'அ, உ, ம்' என்னும் மூன்றினையும் உள்ளடக்கி நிற்பதொன்றாகும். இதுவே ஓங்காரம். ஓங்காரமே உலகத்தோற்றம், உயிர்களின் பிறப்

பின் தொடக்கமும் முடிவும், மந்திரங்களின் வடிவு. கடவுளின் ஐந் தொழில்களின் அமைவு அதற்குரிய கடவுள் வடிவங்கள் பலவும் என் பன தெள்ளத்தெளிய இதன்கண் விளக்கப்பட்டுள்ளன. இவற்றுக்கு மேற்கோள்களாகத் "தொல்காப்பியம், திருக்குறள், திருமந்திரம், சித் தாந்த நூல்கள், தாயுமானவர், கம்பர் முதலிய நூல்கள் பல எடுத்துக்காட்டப்பட்டுள்ளன.

தமிழகத்துச் சிவபெருமான் வழிபாடே மிகத் தொன்மை வாய்ந் ததும், நன்மை சார்ந்ததுமாம். உண்மையியலினைத் தனிநிலை அல்லது ஆய்தம் என்னும் முப்பாற் புள்ளியின் அமைவுகொண்டு உணரலாம் என விளக்கப்பட்டுள்ளது. அஃதாவது சிவபெருமானின் முக்கண் ணினையும் முப்பாற்புள்ளி உணர்த்தும் என்பதாம். மேலும் 'நமசிவய,' 'சரவணபவ.' 'ஓம்நமோநாராயணாய' என்னும் மந்திரங்கள் முறையே ஐந்தெழுத்து, ஆறெழுத்து, எட்டெழுத்தாலமைந்துள்ள இயல்பின எனினும் நமசிவய என்பது போன்று மற்றைய இரு மந்திரங்களும் நுண்ணிதின் ஆய்வார்க்கு ஐந்தெழுத்தா னமைந்த இயைபு நன்கு புலப்படும் எனக் காட்டப்பட்டுள்ளது. "நாராயணன்" என்னுந் திருப்பெயர் சிவபெருமானுக்குரிய காரணப்பெயர் என் பதும் அதனாலேயே பெண்பாற் பெயர் "நாராயணி" என வழங்கு கின்ற தென்பதும் மாதவச் சிவஞான முனிவரனால் தாமியற்றி யருளிய சிவஞானபோதப் பேருரைக்கண் தடைவிடைகளான் நாட்டப்பட்டுள்ளன. அவ்வுண்மையினை ஆண்டுக் காண்க. இதனால் திருமால் நெறியும் இம்முறைமை கொண்டு நோக்குவார்க்குச் சிவ நெறிச் சார்பென்பதுதானே விளங்கும்.

தமிழின் மேன்மையினையும் அதன் தொன்மையினையும், அம் மொழியமைப்பு கடவுள் உண்மையியல்பு மறையியல் முதலிய வற்றோடு தொடர்புள்ள தென்பதும், வேறு எம்மொழிக்கு மில்லாத தனிச்சிறப்பு அதற்குள்ள தென்பதும் சாந்தோக்கிய உபநிடதத்துள் நாரதர் சனற்குமாரருக்குக் கூறியுள்ளமை இதன்கண் காட்டப்பட் டுள்ளது. தாம் கூறிய கருத்துக்களை நூற்பாவாகவும் செய்யுளாகவும் நூலாசிரியரவர்களே யாத்துள்ளனர். தமிழ் நாட்டின் தொன்மையும் தமிழ்மொழியின் அமைப்பும் உலகத்துக்கே முன்னிடம் பெற்று வழி காட்டியாக நிற்குமுண்மை வரலாற்று உண்மைச் சான்றுகளுடன் வலியுறுத்தப் பட்டுள்ளது.

நூலாசிரியரவர்கட்கும், மொழிபெயர்ப்பாசிரியரவர்கட்கும் கழகத்தார் நன்றி உரித்தாகுக. இதன்கண் எழுத்துக்களை விளக்குங் குறிப்புப் படங்கள் பல சேர்க்கப்பட்டுள்ளன. இவற்றை அடிப்படையாக வைத்துப் பல ஆய்வுகள் வெளிவருதல் வேண்டும். இந்நூல் ஆய்வாளர், ஆசிரியர், மாணவர், தமிழன்பர் அனைவர்க்கும் இன்றியமையாத வொன்றாகும்.

சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தார்.

# முகவுரை

## [தவத்திரு யோகி சுத்தானந்த பாரதியார்.]

திருச்சிராப்பள்ளி கிளைவு-மாளிகையில் (Clives' House) 1919ஆம் ஆண்டு மாபெரும் தமிழ்ப்புலவர் மாநாடு நடந்தது. அதற்கு நானும் சென்று மாநாட்டிற் பங்குகொண்டு, பேசினேன், பாடினேன். தமிழகப் புலவர் இருநூறுபேருக்குமேல் மாநாட்டிற் கலந்து கொண்டனர். இரண்டாயிரம்பேர் அரங்கின்முன் அமர்ந்திருந்தனர். கரந்தை இராதாகிருட்டினர், உமாமகேசர், சைவசித்தாந்தக் கழகம் கா. சுப்பிரமணியபிள்ளை, திருச்சி வேங்கடசாமி நாட்டார், பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்கார், சவுரிராயர், மதுரை கார்மேகக்கோனூர் முதலிய புலவர் மணிகள் அவையில் அமர்ந்திருந்தனர். அனைவரும் அவைத் தலைவரை எதிர்பார்த்தனர்.

இதோ தலைவர் வருகிறூர்; அனைவரும் எழுந்து நின்றனர்: ஆறடி உயரம், நல்ல பருமன், பொன்னிறம், முகத்தில் நல்ல பொலிவு முழங்கால் மட்டும் நீண்ட கைகள், மலர்விழி, முத்துநகை, அச்சமற்ற சிங்கப்பார்வை, வெண்பட்டு உடுப்பு, கால்சராய், தலையில் சரிகைக் குல்லா - ஆள் அரசர்போலக் கவர்ச்சியாயிருக்கிறூர். சபையைக் கும்பிட்டுச் சுற்றிலும் கண்ணோடி, வெல்வெட்டு சோபாவில் அமர்ந்த அவரே புலவர் மாணிக்கம் பா. வே மாணிக்க நாயக்கர்.

அவர் என்னை நன்ருக அறிவார். நான் அப்போது விஞ்ஞான - ஆசிரியராகவும், சாரணத் தலைவராகவும் இருந்தேன். தமிழில் முதன் முதல் உடற்கூறு, உடல்நலம், உடலைப் பேணுதல், செடி நூல், உயிர்நூல், பொருள்நூல், வேதிநூல் எல்லாம் எழுதி வந்தேன். அரிய தமிழ் நாடகங்களும் எழுதி வந்தேன். அவற்றை பி. டி. ஸ்ரீநிவாச ஐயங்காரிடமும், மாணிக்க நாயக்கரிடமும் வாரா வாரம் படித்துக் காட்டிவந்தேன்: இருவரும் என்னை ஊக்கினர். கலைச் சொற்களுக்கு அவர் தனித்தமிழ் கோப்பது வியப்பாயிருக்கும். அவர் தூண்டுதலால் நான் அப்பர், மாணிக்கவாசகர், தாயுமானூர் முதலிய அருள் நாடகங்களை எழுதினேன்.

## கேண்மோ கேண்மோ !

தமிழ் மாநாட்டில் நான் ஒருநாள் விஞ்ஞானத்தைப் பற்றியும், வளரியல் (Evolution) பற்றியும் பேசினேன் - தனித்தமிழில் ; அப்போது ஒருவர் எழுந்து கடிகாரத்தைக் காட்டி இதற்கென்ன தமிழ் என்றார். நான் போதுகாட்டி யென்றேன். பிறகு (Clock) (கிளாக்) என்பதற்கு என்ன தமிழ் என்றார். மாணிக்க நாயக்கரே "சொல்லும் பாரதியாரே...சொல்லும்" என்று கையை ஆட்டினார்! நான் "போது ஆட்டி" என்றேன். "கேண்மோ! கேண்மோ!." என்று என்னைத் தட்டிக் கொடுத்தார். மற்றொருவர் பைபிளுக்குத் தமிழ் என்ன என்று கேட்டார். அவர் வடமொழியர். "நீர் சொல்லுமே" என்றேன். அவர் "நூதன புராதன மகிஷ சர்ம பந்தனக்ரந்தம்" என்றார். அவை முழுதும் "கொல்" என்று சிரித்து எக்களித்தது. மாணிக்கர் "இந்த பந்தனக் கிரந்தமும் மகிஷ சர்மமுமா பைபிள். பைபிள் என்றே சொல்லிவிடலாம். இன்றேல் அறநூல்" என்க என்றார்.

## தமிழ் விருந்து

மாணிக்க நாயக்கர் எல்லாப் புலவருக்கும் விருந்து வைத்தார்: அதிற் கலந்துகொண்ட அந்தணன் நான் ஒருவனே. ஆனால் என் உணவு கனி கடலையே. நான் எனக்குரிய உணவை அருந்தி விரைவில் எழுந்தேன். "பாரதியாரே எங்களை ஏமாற்றக் கூடாது. நீர் சோறுண்ணாவிட்டாலும் இரண்டு அப்பளம், நான்கு உளுந்துவடை, பாயசம், இவற்றையாவது உண்ண வேண்டும்" என்றார். நான் "பாயசத்திற்குத் தமிழ் சொன்னால் உண்கிறேன்" என்றேன். உடனே "வெல்லக் கஞ்சி" என்றார். நான் சிறிது உண்டு வாய் பூசி வந்தேன். அப்போது தனித்தமிழ் திருத்தம் முதலில் நமது அடுக்களையிலிருந்து வர வேண்டும். அன்னம், பட்சணம், போண்டா, அல்வா, லட்டு, பர்பி, மிட்டாய் - எல்லாம் வடநாடா யிருக்கின்றனவே..." என்றேன். புலவர்கள் அன்று கூடி நாம் வழங்கும் எல்லாப் பொருள்களுக்கும் தமிழ் கண்டனர். ரசகுல்லாவுக்கு நாயக்கர் "பாலுண்டை" சந்தேஷுக்குப் பாற்பிட்டு என்றதும் இலட்டுக்கு இனிப்புருண்டை என்றதும் புதுமையாயிருந்தன. நாவிருந்து தமிழ் விருந்தாக மாறியது.

## நீர் முதலியாரில்லை

அந்தக்காலம் நான் வெள்ளைக்காரர் போல உடையணிந்து மீசை முறுக்கிவிட்டு முறுக்காயிருந்தேன். மீசைமுறுக்கைப் பார்த்து விட்டு என்னை நாயக்கர் "முதலியார்" என்றே நினைத்தார். எனது விஞ்ஞானச் சுவடிகளைப் படித்துக் காட்ட அவரது பொன்மலை மாளிகைக்குச் செல்லுவதுண்டு. அவர் என்னைப் பலவாகப் போற்றி வரவேற்றுப் பயனுறப் பேசி என் ஆர்வத்திற்கு ஆக்கமளித்தார். மாணிக்க நாயக்கர் இல்லத்தை வெகு அழகாகப் பூமணக்கப் பசுமை பொலிய வைத்திருந்தார். மேலே மாடியிலிருந்து சுற்றிப் பார்ப்பார். யாராவது செடிகளைக் கிள்ளினால் உடனே சினப்பார். தோட்டத்தில் ஒரு தெள்ளூற்றிருந்தது; அதில் நீர் மொண்டு குளித்து நான் தியானம் செய்து கொண்டிருந்தேன்—மாலைப் பொன்னொளி என் முகத்தில் பளிச்சிட்டது. நாயக்கர் என்னையே குறிப்பாகப் பார்த்து அருகில் வந்து நின்றார். தியானம் முடிந்ததும் இப்படி உள்ளொருமை கொண்ட "நீர் முதலியாரில்லை, அந்தணர்" என்றார். பிறகு சாதி, ஊர் வளப்பங்களைக் கேட்டார்.

> என்னூர் தமிழகமே
> என்புலமை தமிழன்பே
> என்சாதி ஆண்சாதி
> என்னினமோ—உன்னினமாம்
> மானிடமே; என்சமயம்
> வாய்மையே; என்கடவுள்
> ஊனிடமே ஒன்றும் உயிர்.

என்றேன். "இந்தப் பரந்த மனப்பான்மையே இன்று மக்கள் மரபிற்கு வேண்டும். மக்கட் பண்பை வளர்த்தால் சாதிமதப் பிரிவுகள் தேவையில்லை" என்றார்.

## தமிழையே கருதீர்

மாணிக்க நாயக்கர் என் பாடல்களை இனிது பாடக்கேட்டு இன்புறுவார்; கூட்டங்களிற் பாடச் செய்வார். அந்தக்காலம் அவர்முன் பாடிய பாடல்கள் முன்னேற்றப் பாடல்களில் உள்ளன.

எண்ணுறும் போது தமிழையே எண்ணீர்
இசைத்துழி தமிழையே இசைப்பீர்
பண்ணுறும் போது தமிழ்ப் பணிதனையே
பழுதறப் பண்ணி யின்புறுவீர்
உண்ணுறும் போதும், உயிர்த்திடும் போதும்
உயிருளம் துடித்திடும் போதும்
கண்ணினும் இனிய தமிழையே கருதிக்
காரிய வுறுதிகொண் டெழுமின்!

என்ற பாட்டு அவருள்ளத்தைக் கவர்ந்தது.

## மூச்செல்லாம் முத்தமிழ்

மாணிக்க நாயக்கரின் பேச்செல்லாம் ஆராய்ச்சி, மூச்செல்லாம் முத்தமிழ்! எனக்கு விஞ்ஞானத் துறையில் பயிற்சியுண்டு; இருவரும் விஞ்ஞான ஆராய்ச்சி நடத்துவோம். கருத்தோற்றம்; குழந்தை வளர்ச்சி; பூச்சி, புழுக்கள், பறவை விலங்குகளின் பான்மை, மீன்களின் வளர்ச்சி, மூளையின் பான்மை-பொறிநுணுக்கம் முதலியவற்றை அவர் பேசும் போது நான் குறிப்பெடுத்துக் கொள்வதுண்டு. யோசேப்புக் கல்லூரி லாலிஹாலில் அவருடைய சொற்பொழிவுகள் நடந்தன. நான் அவர் பேச்சை ஆர்வமுடன் கேட்பதுண்டு. அவர் பேச்சிற்கும் பிறர் பேச்சுக்கும் நிரம்ப வேற்றுமையுண்டு. எல்லாத்துறைகளிலும் அவர் புலமை பெற்றவர்-முதன்மையாக உயிரியல் (Biology), கணக்கு, பொறியியல் இம்மூன்றிலும் அவரிடம் கட்டுக்கட்டாகக் கணக்கு ஆராய்ச்சிகள் குவிந்து கிடக்கும். கரியைக் கொண்டு மோட்டார் ஓட்டும் கணக்கை அவரே கண்டார். அவர் கணக்கியலில் ஒருமைப்பட்டுழைத்திருந்தால் நோபல் வெகுமதி வாங்கியிருப்பார். அவரே மேட்டூர் அணைக்கு வரை முறை வகுத்தார். செடிப்புணர்ச்சிகளால் கனிப்புதுமை செய்தார். மீனாராய்ச்சி செய்தார். தமிழ்ப்பேரகராதிக்கு (Tamil Lexicon) முன்னின்று ஆக்கமளித்தவர் அவரே.

மாணிக்கநாயக்கருக்கு நான் யோகாசனமும், பலவகைப் பிராணயாமங்களும், ஓங்காரப் பிராணயாமமும் செய்து காட்டுவதுண்டு. அவரும் பிராணயாமமும் சர்வாங்காசனமும் செய்தார்.

## செல்வத் திருவாளர்

மாணிக்கநாயக்கர் மாதம் ரூ. 2,500 பெறும் சிறப்ப முதல்வர் (Superintending Engineer). பாகற்பட்டி ஜமீந்தார் வேங்கடசாமி நாயக்கருக்கும், முத்தமிழ்ப் புலமைபெற்ற முத்தம்மையாருக்கும் பிறந்து செல்வமாக வளர்ந்தவர். அவர் தமயனார் பொன்னுச்சாமி தமிழ்ப் புலவர். மாணிக்கம் பொறியியலில் B. E. பட்டம் பெற்று, இங்கிலாந்து சென்று தம் ஆராய்ச்சிகளை விளக்கிப் புகழ் பெற்றவர். எந்தப்பொருள் பற்றியும் சொந்த ஆராய்ச்சியுடன் பேசும் தனிப் பெருந்தகைப் புலவர். மாணிக்க நாயக்கர் வீட்டில் வேங்கடாசலபதி வழிபாடு நடக்கும். நாமம் போடுவார்கள். ஆனால் மாணிக்கர், சம்பந்தர் பதிகம் பாடி மந்திரத் திருநீறே பூசுவார். தேவாரத்தை ஆர்வமுடன் ஓதுவார். திருமந்திரத்தை ஆழ்ந்து ஆராய்வார். முருகனை அன்புசெய்வார்; தம் இல்லத்தை "முருகன் தமிழகம்" என்பார். சைவமே தொல் பெரும் சமயம் என்பார். கலிங்கத்திற்குப் புதுப்பொருள் இசைப்பார். கம்பனில் அவருக்கு ஈடுபாடுண்டு. கம்பன் கவிதையுடன் மில்தனை ஒப்பிட்டுப் பார்ப்பார். ஆங்கிலத்தில் மிகத்தெளிவாகப் பேசுவார். தமிழில் உணர்ச்சிததும்ப உரையாடு வார்.

அவர் சிவபுரி ஜமீந்தார், செல்வச் சீமான் இத்தகைய பெரும் பெரும் செல்வப் புலவர்மணி எளிய வாழ்க்கையே வாழ்ந்தார். அவர் என்னுடன் பலமுறை கனியுணவு அருந்தியதுண்டு. வாழை, மா, ஆப்பிள் கனிகளைத் துண்டாக்கிப் போட்டு அதில் கமலாப் பழச்சாறு பிழிந்து, தேன் சேர்த்து, கடலை தூவி நான் உண்பதுண்டு. இந்த உணவை அவர் விரும்புவார். நாயக்கர் அலுவலகத்தில் ஐரோப்பிய உடையணிவார்; வீட்டில் தட்டாடையும் பனியனும் துண்டும் அணிவார். சிறு குழந்தைகளை அன்புடன் அழைத்துத் திருக்குறள் கற்பிப்பார்; அவர்கள் திருக்குறள் சொன்னால் இனிப்பும் கனியும் காசும் அளித்து மகிழ்வார். மாணவர்களுக்கு நூல்கள் அளிப்பார், பணந் தருவார்; புலவர்களைப் புன்னகையுடன் வரவேற்று விருந்தளித்துப் பயனுறப் பேசுவார். ஒருமுறை என்னுடன் ஒரு பெரும் புலவர் (பழனியப்பபிள்ளை) வந்தார். அவரிடம் கம்பராமாயணத்தில் எத்தனை வடமொழிச் சொற்கள், திருக்குறளில் எத்தனை என்று வினவினார். அவரே விடையும் அளித்தார். ஒரு

முறை திருச்சி கலெக்டரும், புகைவண்டி நிலைய முதல்வரும் அவரது கணித வரையை (Calculo Graph) பொறியியல் புதுமை - முதலிய வற்றைக் கண்டு கேட்டு "நிறை புலவர்" (Versatile genius), என்று போற்றினர்.

## எப்படி வாழ்ந்தார் !

மாணிக்கநாயக்கர் தோட்ட வேலைசெய்வார், துப்பாக்கிசுடுவார், கசரத், பஸ்கி எடுப்பார். துவரப்பசித்தே உண்பார். பிறர்மனம் நோகாமல் இனிமையாக நடப்பார்; ஆனல் தமிழுக்கோ தமிழருக்கோ சிறுமை தரும் எதையும் கண்டிப்பார். தமிழைப் பாதுகாப்பதில் அவர் வீரச்சிங்கம்.

## புதுப் பொதுக் கருத்து

மாணிக்க நாயக்கரின் பொதுக் கருத்து இவையே: தமிழ் உலகின் முன்மொழி ; தொன்மொழி ; ஒலியினிமை, மூச்சுச்செட்டு, நிறை, திரல், எழுத்துச் சிக்கனம் - எல்லாம் உடையது. ஹ்-ஷ்-ஸ் என்று மூச்சை வீணுக்காத மொழி தமிழ். தமிழின் தூய்மையைப் பாதுகாக்க வேண்டும். தனித்தமிழ்ச் சொற்களையே வழங்கவேண்டும். நீர் என்பதற்குப் பதிலாக ஜலம் என்ருல் "நீர்" என்ற சொல் வழக்கற்றுப் போகும். தமிழ் ஈன்ற கன்னடம், மலையாளம், தெலுங்கு முதலிய மொழிகளெல்லாம் இவ்வாறே வடமொழிக் கலப்பால் வேற்று மொழிகளாயின. தமிழ் தன்னியல்புடன் வழங்கவேண்டும். ஆங்கிலம் பிரெஞ்சு ஜெர்மன் மொழிகளைப் பேசுகிறபடியே எழுதுகிருர்கள். அவ்வாறே தமிழிலும் எழுதுகிறபடியே பேசவேண்டும்.

## பழம்பெரும் சமயம்

சைவசித்தாந்தம் பழம்பெரும் சமயம். அது விஞ்ஞானச் சிறப்புடையது, அறிவாராய்ச்சிக்குப் பொருந்தியது. இயல் வளர்ச்சியை இணைத்து விளங்குவது. இலிங்கம் அதன் சிறந்த அறிகுறியாகும்.... ஒலிலிருந்தே வரி வடிவங்கள் எழுந்தன. கருக்குழவி ஓவடிவே...... "இப்படி எத்தனையோ புதுக் கருத்துக்களை அவர் முத்து முத்தாகக் கேட்போர் வேட்ப உள்ளத்தில் வித்துவார். தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கத்தை (The Mystic Aspect of Tamil Alphabets) என்ற தலைப்பில் ஆங்கிலத்தில் பேசியதை நான் கேட்டதுண்டு.

நான் யோகசித்திக் குறள்களைத் தொகுத்தபோது.

ஓங்கார மாகி ஒளியாய் உயிர்க்குயிராய்
நீங்காதான் இன்ப நிறைவு

என்றதை முதலிற் போடச் சொன்னார். ஓங்காரத்திலேயே அ, உ, ம், இம்மூன்றும் அடங்கியுள்ளது, கருவடிவமும் சேய்வளர் உருவும் ஓம் என்று அவர் படம் போட்டு விளக்கினார்.

## ஓமொலித்துண்போம்

ஒரு தரம் நீதிபதி சதாசிவ ஐயர் தலைமையில் மீனம்பள்ளி ஜமீந்தார் கலப்புவிருந்தளித்தார். நாயக்கர் வந்திருந்தார். நானும் அவர் வரிசையில் அமர்ந்திருந்தேன். அப்போது "ஓமொலித்துண்போம்" என்று உண்ணத் தொடங்கினார். அதற்கு விளக்கமுந் தந்தார். நம் உடலே ஓ வடிவம் என்றார். உண்டபிறகு படம் எழுதித் தொல்காப்பியக் கோட்பாடுடன் தமிழ் வரிவடிவப் பெருமையை விளக்கினார்.

தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம் அவரது அரிய ஆராய்ச்சிக் கருவூலமாகும். அதை மாணவர் படிக்கும்படி ஆட்சியாளர் பாடம் வைத்தால் தமிழின் பெருமை ஓங்கும்.

# முன்னுரை*

தென்னிந்திய கழகத்தின் ஆண்டு நிறைவு விழாவில் திருவாளர் மாணிக்க நாயகர் அவர்கள் எனது தலைமையில் வாசித்தளித்த கட்டுரைக்கு முன்னுரை வழங்குவதில் யான் பெருமை யடைகின்றேன். விழாவின்போது இக்கட்டுரையில் சில பகுதிகள் மட்டும் படித்துக் காண்பிக்கப்பட்டன. இப்பொழுது முழு நூலும் வெளியிடப் படுகின்றது.

'அ' என்ற எழுத்தை 'ஒ' என்னும் எழுத்தாக மாற்றப் படுவது, அகரத்தை ஏனைய தமிழ் எழுத்துக்களாக மாற்றுவது, 'அ' என்னும் எழுத்தினால் மந்திர வடிவங்களைத் தோற்றுவிப்பது, பிரணவப் பொருளான 'ஒ' என்னும் எழுத்தைப் போல் இயற்கை வடிவங்களின் அமைப்பை எடுத்துக் காட்டுவது, தமிழ் எழுத்துக்களின் தெய்வத் தன்மையை விளக்குவதற்கு மேற்கோள்கள் காட்டுவது இவைகளெல்லாம் புதிய கண்டுபிடிப்புக்களாகவே காணப்படுகின்றன. இவ் ஆராய்ச்சியுரை நமக்குக் கவர்ச்சி யளிப்பதுடன் அறிவு புகட்டக் கூடியதாகவும் இருக்கின்றது.

இவ் ஆராய்ச்சிகளை அறிவு ஆர்வத்தினால் எழுந்த விந்தைப் பொருள்களென ஒதுக்கிவிட முடியாது. தற்செயலாகப் பொருந்தியவை யெனத் தள்ளிவிடவும் முடியாது. பல திறப்பட்ட பொருத்தங்கள் காட்டப் படுவதால் ஆசிரியரின் புதிய கொள்கையில் உண்மை இருப்பதாகவே தோன்றுகிறது. தமிழ் எழுத்துக்களை மெய் விளக்க முறையில் முற்றத்துறந்த முனிவரொருவர் திட்டமிட்டுச் செய்திருக்கலாம் என்று நம்புவதற்கு இடமிருக்கின்றது. ஆயினும் ஆசிரியர் தமது புதிய கொள்கைகளை அப்படியே ஏற்றுக் கொள்ளும்படி நம்மை வற்புறுத்தவில்லை. கருத்து வேற்றுமைகள் ஏற்படலாம் என்பதை உணர்ந்து அவர் தம் கொள்கைகளுக்கு

---

* உயர் நீதிமன்ற நடுவர். திரு. டி. சதாசிவ ஐயரவர்கள் ஆங்கிலத்தில் எழுதியதைத் திரு என் கே வேலனவர்கள் தமிழாக்கம் செய்தது.

அடிமையாகாமல் உள்ளத்தைத் திறந்து காட்டுகின்றார். அவருடைய அறிவாற்றல்களுக்கு ஏற்றபடி இப்பொழுது எடுத்துக் கொண்டிருக்கும் பொருள் மிகவும் அருமையானதாக இருக்கின்றது. கரு வளர்ச்சி நூல், நிலநூல், பழம்பொருள் ஆராய்ச்சி முதலியவற்றில் அவர் நல்ல தேர்ச்சியுடையவராயினும் தமது ஆராய்ச்சியில் சிறு பிழைகள் ஏற்படலாம் என எண்ணி அவற்றைச் சுட்டிக் காட்டும்படி மற்றவர்களை அழைக்கின்றார். டார்வின், நியூட்டன் போன்ற அறிஞர்களுக்கு அறிவு ஆற்றல்களுக்கு மேல் உள்ளுணர்வு ஒன்று ஏற்படுவதாகக் கூறுவர். அறிவியல் அறிஞர்கள் வேறு எண்ணங்களை மறந்து உண்மையைக் கண்டுபிடிப்பதிலேயே கண்ணும் கருத்துமாக இருப்பார்கள். நம் ஆசிரியர் அவர்களின் ஓயாத உழைப்பினாலும் அருமையான ஆராய்ச்சியினாலும் மெய்யுணர்வு பெற்று மறைபொருளான உண்மைகள் சிலவற்றை வெளியிட்டிருக்கின்றார்.

இந்நூலில் ஆசிரியர் பின்வரும் பொருள்களைப் பற்றிச் சுருக்கமாகக் கூறுகின்றார் :—

(1) தமிழ் ஒலி இலக்கணம் (2) தொல்காப்பியத்தின் பெருமை (3) தமிழ் மொழியின் தொன்மை (4) ஆரியரின் வருகை (5) தென்னாட்டு மக்களின் வாழ்க்கை முறை (6) தமிழ் வட்டெழுத்துக்களின் தன்மை - இவைகளைப் பற்றி ஆசிரியர் வெளியிடும் புதிய கருத்துக்கள் நமது மனத்தைக் கவர்கின்றன. அவர் தம் ஆராய்ச்சி நூல்களை விரைவில் வெளியிடுவார் என எதிர்பார்க்கிறேன்.

தமிழ்மொழியின் ஒலி இலக்கணம் இணையற்றதெனவும் குறையற்றதெனவும் நாயகர் பறைசாற்றுகின்றார். வெஸ்லி கல்லூரியில் பேசியபோது இதனைத் தெளிவுபடுத்தி இருக்கின்றார். தமிழ்மொழியின் அருமையைப்பற்றி அவர் கூறும் கருத்துக்கள் சரியானவை என நான் நம்புகின்றேன். அவர் தமிழன்னையை மிகவும் உயர்ந்த பீடத்தில் ஏற்றிவைத்துள்ளார். தமிழன்பர்கள் அவருடன் ஒத்துழைத்து அவருக்கு ஊக்கம் அளிப்பதுடன் அவருடைய அரிய நூல்களை வெளியிடுவதற்கும் உதவி புரிதல் வேண்டும். நாயகர் அவர்கள் கண்டுபிடித்த கணிதவரைக் கட்டம் (Calculo Graph) கணித முறைக்குப் புதிய விளக்கம் தருவதால் ஆங்கில அறிஞர்கள் அதனைப் போற்றிப் புகழ்ந்துள்ளனர். இவ்வாராய்ச்சிகளைச் செய்து முடிப்

பதற்கு அவரை இங்கிலாந்திற்கு அனுப்புவதற்கு இந்திய அரசினர் ஏற்பாடு செய்துள்ளனர் எனத் தெரிகின்றது. ஆசிரியர் புதியது புனையும் ஆற்றலுடையவர் என்பது இதிலிருந்து பெறப்படும்.

தமிழ் மக்களின் அருமையான மொழியைப்பற்றியும் அவர்களது உயர்ந்த நாகரிகத்தைப்பற்றியும் நாயகர் பல ஆராய்ச்சிகள் செய்திருப்பதால் அவர் இங்கு இருக்கும்பொழுதே அவருடைய நூல்கள் வெளிவந்தால் மக்களுக்குப் பெரிதும் பயன்படுமென நம்புகின்றேன். அவர் ஆங்கிலத்தில் எழுதும் நூல்களைத் தமிழிலும் வெளியிட்டால் மக்களுக்குத் தமிழ் உணர்ச்சி ஏற்படுமென எண்ணுகின்றேன். நாயகர் அவர்களுக்கு நீண்ட ஆயுளைக் கொடுத்தருளும் வண்ணம் எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொண்டு அவரது அருமையான நூலை மக்கள் முன்னிலையில் சமர்ப்பிக்கின்றேன். அவரது உழைப்பிற்கும் தமிழ்த் தொண்டிற்கும் நாம் பெரிதும் கடமைப்பட்டிருக்கின்றோம்.

சென்னை
1 - 5 - 1917

டி. சதாசிவஐயர்.

# ஆசிரியர் அவர்களது வாழ்க்கை வரலாறு

[என். கே. வேலன், பி. ஏ.]

திருவாளர் பா. வே. மாணிக்க நாயகர் அவர்கள், அற்புதமான ஆராய்ச்சிகள் செய்து தமிழ் மொழியின் அருமை பெருமைகளை உலகிற்கு எடுத்துக்காட்டியவர். தமிழ் எழுத்துக்களின் தெய்வத் தன்மைக்கு அறிவியல் முறைப்படி விளக்கம் தந்தவர். எம்மொழியி னும் நம் தமிழ் மொழியே சிறந்ததெனப் பறை சாற்றியவர். இப் பேரறிஞரின் வாழ்க்கை வரலாறும் அவரது நற்பண்புகளும் இந் நூலில் இடம்பெற வேண்டும் என்பது எனது அவா. ஆசிரியர் அவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு எனக்கு இருந்தது. ஆறு அடி உயரம், சிவந்த நிறம், முறுக்கிய மீசை, கூர்மையான கண்க ளுடன் தோற்றமளிப்பார்.

சேலத்திற்கு அடுத்த பாகற்பட்டியின் ஜமீன்தார் வேங்கடசாமி நாயகர் அவர்களுக்கும் அவர் துணைவி முத்தம்மையாருக்கும் இரண்டாவது மகனாகத் தோன்றினார். அன்னையார் தமிழறிவு பெற்றுக் கவிபாடும் திறமையுடன் விளங்கினார். மூத்த மகன் பொன்னுச்சாமி நாயகர் தமிழ்ப்புலவராக வீற்றிருந்தார். ஒரு முறை சேலத்தில் திருஞான சம்பந்தர் தமிழ்க் கழகத்தில் முத்தம்மை யாரும், பொன்னுச்சாமியும் மாணிக்கமும் ஒன்றாக அமர்ந்து விழா வைச் சிறப்பாக நடத்தி வைத்தனர். கழகத்தின் செயலாளர் அவர் களைப் பாராட்டிப் பேசியபோது பொன்னும், மணியும், முத்தும் சேர்ந்து அவையினை அழகுபடுத்துவதாகக் கூறினார்.

நாயகர் அவர்கள் சென்னையில் பொறி இயல் கல்லூரியில் பயின்று முதல் வகுப்பில் தேர்ச்சியடைந்து B. E. பட்டம் பெற்றார். அவருக்குப் பல்கலைக் கழகத்தின் பொற்பதக்கம் பரிசாகக் கிடைத்தது. கணித நூலில் அரிய ஆராய்ச்சிகள் செய்து புதிய நுணுக்கங்களைக் கண்டுபிடித்தார். ஐரோப்பிய நாடுகளில் சுற்றுப் பயணம் செய்து தாம் கண்டறிந்த உண்மைகளை விளக்கினார். அவரைக் கணித மேதையென ஆங்கில அறிஞர்கள் போற்றிப் புகழ்ந்தனர். மாதத்

ஒன்றுக்கு 2,500 ரூபாய் ஊதியம் பெற்று உயர்ந்த பதவியிலிருந்தும் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார்.

அரசினர் வேலைகளை முடித்துக்கொண்டு வீட்டிற்கு வந்ததும் அவருடைய தமிழ் ஆராய்ச்சி தொடங்கிவிடும். தமிழ் மாணுக்கர்கள் எப்பொழுதும் அவரைச் சூழ்ந்துகொண்டிருப்பர். அவர்களைச் சொந்தப் பிள்ளைகள் என்று அழைப்பார். நாயகர் அவர்களுடைய ஆராய்ச்சியுரைகள் கேட்பதற்கு இனிமையாக இருக்கும். நகைச் சுவையுடன் பேசுவார். நீண்ட விடுமுறை பெற்று ஊரூராகச் சென்று தமிழ் முழக்கம் செய்தார். சில வேளைகளில் என்னையும் உடனழைத்துச் செல்வார். பலகையில் படங்களை வரைந்து தமது கருத்துக்களை விளக்குவார். ஆங்கிலத்திலும் தமிழிலும் தட்டுத் தடையின்றிப் பேசிக் கேட்ட கேள்விகளுக்குத் தக்க விடையளிப்பார்.

நாயகர் அவர்களது குலதெய்வம் திருமாலாக இருப்பினும் திரு நீறணிந்து சைவப்பழமாக விளங்கினர். முருகப் பெருமானிடம் இடையருத பேரன்பு பூண்டு ஒழுகி வந்நார். தவமிருந்து பெற்ற ஒரே மகனுக்கு 'முருகன்' என்ற பெயரிட்டு அவரையும் தம்மைப் போல் பொறிவல்லுநராக உயர்த்தினர். விடம் நீங்குவதற்குத் தேவாரம் பாடித் திருநீறு பூசுவார். பாகற்பட்டியின் சுற்றுப் புறங் களிலிருந்து ஏராளமான மக்கள் அவரிடம் வந்து திருநீறு வாங்கிச் செல்வது வழக்கமாகப் போய்விட்டது. திருச்சியில் தங்கி இருந்த போது அவரது மாளிகைக்கு "முருகன் தமிழகம்" எனப் பெயரிட்டார். மறைமலையடிகளிடமும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகத்தின் முன்னுள் தலைவர் திருவரங்கனர் அவர்களிடமும் தோழமை பூண்டிருந்தார்.

பாகற்பட்டியில் நாயகர் அவர்களுடைய தலைமையில் பொங்கல் விழா மிகவும் சிறப்பாகக் கொண்டாடப்படும். கோவில்களில் வழி பாடுகள் நடைபெறும். குடியானவர்களுக்குப் புத்தாடைகள் வழங்கி விருந்தளிப்பார். தமிழ்க் கழகங்களில் சிவனடியார்களின் வாழ்க்கை வரலாறுகளை நாடகமாக நடித்துக் காண்பிக்கும்படி செய்வார். அதற்கு வேண்டிய உரையாடல்களைத் தாமே எழுதிக் கொடுப்பார். ஒரு முறை அப்பூதி அடிகள் நாடகத்தை எழுதிக் கொடுத்து என்னை அப்பராக நடிக்கும்படி செய்தார்.

குழந்தைகளிடம் மிகுந்த அன்பு காட்டுவார். ஏழை மாணவர்களுக்குப் புத்தகங்கள் அன்பளிப்பாகக் கொடுப்பார். அருட் பாடல்களை மனப்பாடம் செய்து பாடிக் காண்பிக்கும் குழந்தைகளுக்கு மிட்டாய் வழங்குவார். உயர்நிலைப் பள்ளி இறுதி வகுப்பில் யான் தேர்ச்சியடைந்தபோது நாயகர் அவர்கள் எனக்குத் திருக்குறள் பரிமேலழகர் உரை ஒன்று பரிசாக அளித்தார். "கம்பன் கவிதையில் திருக்குறள் புதைந்து கிடக்கின்றது. பொறுக்கி எடு பார்க்கலாம்" என்றார். அவரிடம் ஆங்கில நூல்களும் தமிழ் நூல்களும் ஏராளமாக இருந்தன. புத்தகங்களை நன்றாகப் பாதுகாத்து அழகாக அடுக்கி வைப்பார். ஒவ்வொரு வீட்டிலும் ஒரு நூல் நிலையம் இருக்கவேண்டுமெனக் கூறுவார்.

அவர் இயல்பாகவே புதியது புனையும் ஆற்றலுடையவர். மேட்டூர் அணைக்குத் திட்டம் போட்டுக் கொடுத்தவர் தம் பெருந் திருமகனார் நாயகர் அவர்களே ஆவார். ஒரு நிமிடம் கூட வீண் பொழுது போக்கமாட்டார். கடிகாரத்தை வைத்துக் கொண்டு எதையும் காலம் தவறாமல் குறிப்பிட்ட நேரத்தில் செய்து முடிப்பார். பாகற்பட்டியில் மின்சாரம் வருவதற்கு முன்னால் காற்றாடி இயந்திரம் ஒன்று செய்தார். அது மின்கலங்களின் உதவியால் இயங்கியது. அதனுடன் காற்றாடியை இணைத்து அதன் தகடுகள் சுழலும்படி செய்தார், நன்றாகக் காற்று வீசினாலும் அதில் ஓசை மிகுந்திருக்கும். அஃது எங்களுக்கு ஒரு விளையாட்டுப் பொருளாக இருந்தது.

நாயகர் அவர்கள் சிறிது காலம் செடி கொடி ஆராய்ச்சியில் ஈடுபட்டிருந்தார். மா, பலா, கொய்யா, எலுமிச்சை முதலிய மரங்களைப் பயிர் செய்தார். ஒட்டு முறையில் ஓர் அற்புதமான மாமரத்தை உண்டாக்கினார். அதில் விளைந்த மல்கோவா மாம்பழம் நாம் கண்டறியாத அளவு பெரிதாகவும் சுவையுள்ளதாகவும் இருந்தது. சீத்தாப் பழச் செடியில் வேறு செடியை இணைத்து ஒரு புது வகையான செடியைத் தோற்றுவித்தார். அதில் கிடைத்த பழத்திற்கு 'இராம சீத்தா' எனப் பெயர் சூட்டினார் அப்பழம் அழகிய நிறத்துடன் சுவை மிகுந்திருந்தது.

அவர் அஞ்சா நெஞ்சம் படைத்த ஆண் சிங்கம்போல் விளங்கினார். ஒவ்வொரு நாளும் உடற்பயிற்சி செய்வார். தண்ணீரில்

நீந்தும்போது மணிக்கணக்காக அசையாமல் மிதந்துகொண்டிருப்பார். மூச்சை அடக்கும் வித்தைகள் அவருக்குத் தெரிந்திருந்தது. குதிரை ஏற்றத்திலும் வேட்டையாடுவதிலும் வல்லவராக இருந்தார். நாய்களை வளர்த்து அவைகளுக்கு வித்தைகள் கற்றுக்கொடுப்பார். வீணை, புல்லாங்குழல் முதலிய இசைக்கருவிகளில் நல்ல பயிற்சி பெற்றிருந்தார். சித்திரம் வரைதலும் படம் பிடித்தலும் அவருக்குப் பொழுதுபோக்குத் தொழில்களாக அமைந்திருந்தன. வான நூலாராய்ச்சியிலும் சோதிடம் கணிப்பதிலும் திறமை பெற்றிருந்தார். அரசாங்க வேலையிலிருந்து ஓய்வுபெற்ற பிறகு சிவபுரம் ஜமீன்தாராக ஆட்சி செலுத்தினர்.

பின்னர்க் குன்னூரிலும் சென்னையிலும் தங்கி இருந்து தமிழ் ஆராய்ச்சிகள் நடத்தி வந்தார். ஒலி இலக்கணத்தைப்பற்றிய ஆராய்ச்சிகளும் நடைபெற்றுவந்தன. அவருடைய அருமையான ஆராய்ச்சிகள் முடிவதற்குள் தமது அறுபதாம் அகவையில் சிவபதம் அடைந்தார். தமிழுக்காகவே வாழ்ந்த இப்பேரறிஞரை நாம் என்றும் மறக்க முடியாது.

# [1]தமிழ் எழுத்துக்களின் நுண்மை விளக்கம்

## (The Tamil Alphabet: Its Mystic Aspect)

---

முளை எழுத்தென்றும் பிரணவ எழுத்தென்றுங் கூறப்படுகின்ற குறில் உயிராகிய ஒகரம் ஏனைய தமிழ் எழுத்துக்கள் எல்லாவற்றையும்விடச் சிறப்பாய்க் கருதுதற்குரியது. எழுத்துக்களின் உருவ வளர்ச்சியை உணர்ந்தோரும், பழைமையாராய்ச்சிக்காரரும், கல், பட்டயம், நாணயம் முதலியவற்றிற் செதுக்கப்பட்ட சொற்களுக்குப் பொருள் காண்போரும் இவ்வெழுத் தெங்ஙனந் தோன்றிற்றென்று கூறவியலாதவர்களா யிருக்கின்றனர். இவ்வெழுத்தின் உருவம் பண்டையிலிருந்தவாறே இன்றுமுளது. வேறுபடவில்லை; தமிழ் எழுத்துக்கள் வேறு சிலவற்றின் உருவத்தைப்பற்றிக் கருத்து வேறுபாடு உண்டு. காலம் வாய்ப்பின் இதுபற்றிப் பின்னர்க் கூறுவேன்.

முதன்முதல், முளை எழுத்தாகிய மாறுத ஒகரம் பல்வேறு வகையில் உருமாறி அகரவெழுத்தாவதையும், பிறகு வேறு எழுத்துக்களாகி, அடிப்படையான அடையாளங்களால் (எழுத்துக்களால்) அமைந்த மூலமந்திரங்களைத் தோற்றுவிப்பதையும், இளஞ்சிறுர்க்குக் கல்வி புகட்டுந் துறையில் ஆளப்படுகின்ற முறையைப் பின்பற்றி எடுத்துக்காட்டியபின், மூலமந்திரங்களின் உண்மை இயலை விரித்துக் கூறுவேன்.

---

1. திரு பா. வே. மாணிக்க நாய்க்கர் அவர்கள் ஆங்கிலத்தில் எழுதியதைத் திரு க. ப. சந்தோஷம் அவர்கள் தமிழாக்கஞ் செய்தது.




(படம். 1)

முதற் படத்தில் ஒகரத்தின் இயற்கை வடிவம் தடித்த கோடுகளால் வரையப்பட்டிருக்கின்றது. இதில் மூன்று பகுதிகள் உள. இவற்றுள் அ, ப, ந என்று குறிப்பிட்ட வளைவு கருப்பையினுட் கிடக்கும் முதிராக்குழவியின் உருவத்தை யொத்தது. ந என்ற மையத்திலிருந்து ந, ச என்ற ஒரு சாய்வு கோடு வருகின்றது. இது குழவியின் தொப்புளை யொத்தது. மூன்றுவது பகுதி த, ச, ய என்ற குறுக்கே செல்லுங் கோடு. இது கருப்பையின் நஞ்சை யொத்தது. இங்ஙனம் அமையும் ஒகர வடிவத்தின் வளைந்த பகுதி இருந்தவாறே இருப்ப, ந, ச என்ற சாய்வு கோட்டை யும், த, ச, ய என்ற குறுக்கு வரியையும் நேரே எதிர்ப்பக்கம் (180 டிக்கிரி) செல்லுமாறு சுழற்றுவோமாயின், ஒகரக் குறில் அகரக் குறிலாக மாறுகின்றது. இதை நோக்கு மிடத்து, ஒகரத்தில் கீழ்நோக்கியும் குறுக்காகவும் செல்லு கின்ற வரிகள் அகரமாகும்போது வேறு இடங்களில் அமை

கின்றன என்பதைத் தவிர்த்து, அகரத்திற்கும் ஒகரத்திற்கும் பிற வேற்றுமை ஒன்றுமில்லை என்பது புலனும்.




(படம். 2)

இரண்டாவது படத்தில் அகரத்தை அ, உ, ம், எனும் முப்பகுதிகளாகக் காட்டியிருக்கின்றது. ஒவ்வொரு பகுதியும் தெற்றெனத் தெரியுமாறு அவற்றிற்கிடையே சிறு இடைவெளிகள் விடப்பட்டிருக்கின்றன. (படம் பார்க்க) இங்ஙனம் பெற்ற மூன்று பகுதிகளையும் மற்றொரு வகையில் எடுத்தடுக்குவோமாயின், அவை ஒகரமாகின்றன. (படம் பார்க்க) அகரமென்று குறிப்பிடப்பெற்ற பகுதி ஒகரத்தின் மேலே வந்து நிற்கின்றது. இங்ஙனம் மேலே பெறப்படுங் குறியுடன் தோன்றுவதே ஒகரக் குறிலுக்கு வடிவமாகும்; அஃதில்லாவிடின், ஓகாரமாகும். தொல்காப்பியம் முதல் நன்னூல் வரையிலுள்ள எல்லாவிலக்கணங்களும் இதைக் கூறுகின்றன. தொல்காப்பியத்தில் இதுபற்றிக் கூறும் விதிகள் இரண்டு. இவற்றுள் முதலாவது :—

'மெய்யினியல்பு புள்ளியொடு நிலையல்' என்பது.

**இரண்டாவது :—**

'எகர ஒகரத் தியற்கையு மற்றே' என்பது. இவற்றால் எகர ஒகரமாகிய குறிலுயிர்கள் இவற்றால் புள்ளியுடன் தோன்ற வேண்டுமென்பது பெறப்படுகின்றது. இது குறித்து நன்னூல்,

'தொல்லை வடிவின வெல்லா வெழுத்துமாண்
டெய்து மெகர வொகரமெய் புள்ளி'

என்று கூறுகின்றது. மெய்யெழுத்துக்களைப் போன்றே எகர ஒகரங்கள் புள்ளிபெற வேண்டுமென்பது இலக்கண நூலார் அனைவரும் ஏற்றுக்கொண்ட தொன்றே.

இப்பொழுது வழக்கிலிருக்கின்ற புள்ளி வட்ட வடிவ மானது. ஆதலின், இலக்கணத்திற் கூறப்பட்டது இவ் வட்ட வடிவினதுதானோ, அன்றி ஈண்டு நாம் கண்ட நீண்ட வடிவினதோ, அன்றி இருவடிவுங் கொண்ட ஒன்றோ என்ற கேள்வி பிறக்கின்றது. புள்ளி என்ற சொல் 'புள்' என்ற முதனிலையிலிருந்து வருவது. புள்ளைப் போன்றிருப் பது என்பது அதன் பொருளாகும். புள் என்ற அடிக்குப் பறவை என்றாவது பிள்ளைகள் விளையாடுவதற்கு வழங்கும் ஒரு சிறு கட்டை என்றாவது பொருள் கொள்ளலாம். இச் சிறு கட்டை ஒகரத்தின்மேல் அமைகின்ற நீண்ட வடிவினது. இக்கட்டையை ஏற்றவாறு கீழே வைத்து, நீண்ட கோல் கொண்டு ஒரு முனையைத் தட்டிச் சிறுவர்கள் விளையாடு கின்றார்கள். இங்ஙனந் தட்டுங்காற் சிறுகட்டை பறக் கின்றது. இது குறித்துப் பறவைக்கும் இச்சிறுகட்டைக்கும் புள் என்ற பொதுப்பெயர் வந்திருக்கலாம். புள்ளி என்பது வட்ட வடிவத்தையுங் குறிக்கும். ஆதலின் இவ்விரு புள்ளி களில் எதை எவ்விடத்தில் வழங்க வேண்டுமென்பதை ஆராய வேண்டும்.

பழைய கல்வெட்டுக்களில் தோன்றுகின்ற புள்ளி ஈண்டு நாம் பார்க்கும், தலைவிரிந்து அடி குறுகிய வடிவினது. ஒன்பதாம் நூற்றாண்டின் முற்பகுதியில் நந்தி விக்ரவர்மன் காலத்தில் எழுந்த கல்வெட்டுக்கள் இதற்குச் சான்றாகும். எனினும், இதன்பிறகு எட்டு நூற்றாண்டளவு புள்ளி என்பது மறைந்துபோய் இக்காலத்தில் வட்டவடிவினதாய்த் தோன்றியுளது. ஆதலின், பழந்தமிழர் மெய்யெழுத்திற்கு இட்ட புள்ளி நீண்ட இலிங்க உருவினதே என்று காணக் கிடக்கின்றது. இன்று எழுத்துக்களின் வடிவ மாறுதலை உங்களுக்கு யான் எடுத்துக்காட்டு முறையிலும் இந்த இலிங்க வடிவமே தோன்றுகின்றது. இதுகாறும், ஒகரம் அகரமாதலையும், அகரம் ஒகரமாதலையும் எடுத்துக் காட்டியுளேன்.













(படம். 3)

மூன்ருவது படத்தில் அகர உயிர் முன் பகுக்கப்பட்டவாறன்றி, வேறு மூன்று பகுதிகளாகப் பிளக்கப்பட்டுளது. பகுதிகள் செவ்வனம் விளங்குமாறு இடை வெளிகள் அமைக்கப்பட்டுள்ளன. இந்த மூன்று பகுதிகளையும் பிரித்தெடுக்குங்கால், இலிங்க வடிவமும் உ, ம என்ற எழுத்துக்களுந் தோன்றுகின்றன. உ, ம என்பது பார்வதியைக் குறிக்கும். இதனுல், அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களையுந் தன்னிலடக்கிய ஓரெழுத்தாய் அகரம் விளங்குகின்றதைப் பார்க்கின்ரேம். முழு எழுத்தும் அகரமாகின்றது; அதன் மேற்பாகம் உகரமாகின்றது: கீழ்ப்பாகம் தலைகீழா யமைக்கப்பட்ட மகரமாகின்றது. அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களும் பிரணவமாகிய ஓகரத்தின் பகுதிகளாதலால் அகரம் பிரணவத்தின் பகுதிகளைச் சற்றுங் குறையாது தன்னகத்தே கொண்டு நின்று, மூன்றில் ஒன்றும், ஒன்றில் மூன்றும் இலங்குவதைக் காட்டுவது போலுளது. அகரத்தினின்றும் நாமெடுத்த உகர மகரங்களாகிய எழுத்துக்களை மற்றும் பிரிப்போமாயின், உ, ம், அ என்பவை தோன்றும். (ம=ம்+அ) இங்ஙனம், பிரணவத்தில் அ, உ, ம என்ற முறையிருக்க, உ, ம என்ற எழுத்துக்களிலிருந்து மேற்குறித்த மூன்று எழுத்துக்களே வேருெரு வரிசையில் உ, ம், அ என வருகின்றன. முதல் வரிசை மகர ஒற்றில் முற்றுப்பெற்று, சிவனுடைய ஆறியிருக்கும் நிலையையும், இரண்டாம் வரிசை அகர உயிரில் முற்றுப் பெற்றுச் சக்தி அல்லது உமையின் இயங்குகின்ற நிலையையும் காட்டுவன போல் தெரிகின்றன. அகரத்திலிருந்து பெறப்பட்ட உகர மகரங்களாகிய எழுத்துக்களைப் பிரித்தெடுத்த பின், இலிங்க வடிவினதாகிய புள்ளி மிகுந்து நிற்கின்றது. இதை எடுத்து மகரத்தின்மேல் வைப்போமாயின் மகர ஒற்றுத் தோன்றுகின்றது. இதனுல், மகரம் அல்லது மாயை, சிவன் முன் ஆற்றலொடுங்கி அடங்கிவிடுமென்பது காட்டப்படுகின்றது.

சக்தி, மாயை என்ற இரண்டும் இரு தலைகளும் ஒருடம்பும் கொண்ட பேருருவமென்று நூல்கள் கூறுகின்றன. இதனால் இவற்றின் இணைபிரியாமை வற்புறுத்தப்படுகின்றது. இக்கருத்து அகரத்தில் உகர மகரங்கள் இரு தலைகளுடனும், ஒருடம்புடனும் அமைக்கப்பட்டிருத்தலால் விளக்கமுறுகின்றது.

உகரத்தையும் மகரத்தையும் பிரிக்க வேண்டுமாயின், அகர வெழுத்துக் குறுக்கே வெட்டப்பட வேண்டுமென்பதைப் படத்திற் கண்டுகொள்க.

ஈண்டு நாம் கண்டவற்றில் எழுத்துக்கள் எவ்வாறு மாறினும் இலிங்க வடிவமுடைய புள்ளி தனியே திரிபின்றி நிற்பதைக் காண்கின்றோம். சிவம் அல்லது பதியின் மாறுமை, அழியாமை, தானாயிருக்குந் தன்மை, ஒன்றேயாகும் பண்பு ஆகியவை இதனாற் குறிக்கப்படுகின்றன. எங்ஙனம் எழுத்துக்களைப் பிரித்தெடுத்துக் கூட்டினும், இலிங்க வடிவினதாகிய புள்ளியின் அடி (பாதம்) ஒன்றே மற்ற எழுத்துக்களோடு சேர்கின்றதென்பதை நாம் கருத்தில் வைக்க வேண்டும். அகரத்தின் பிற பகுதிகள் இத்தன்மைய வல்ல.

பின்வரும் நான்காவது படத்தில் ஐந்து அகர எழுத்துக்களிருக்கின்றன. இவை பல்வேறு பகுதிகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. முதலில் வருகின்ற அகரவெழுத்து அ, உ, ம என்று குறிப்பிடப்பெற்ற மூன்று பகுதிகளாயுளது. அதற்கடுத்த அகரம் 1. என்ற எண்ணால் குறிக்கப்பட்டுப் பகுக்கப்படாது நிற்கின்றது. அடுத்தது 2, 3 என்ற எண்களால் குறிக்கப்படுகின்ற இரண்டு பகுதிகளை உடையதாயுளது. நான்காவதாகிய அகரம் 4, 5, 6 என்ற எண்களால் காட்டப்படும் மூன்று பிரிவுகளையுடையது. இறுதியிலுள்ள



படம் 4



படம் 5

அகரம் 7, 8, 9, 10 எனும் எண்கள் கொண்ட நான்கு பிரிவுகளையுடையதாய் நிற்கின்றது. இங்ஙனம் பெறப்பட்ட பகுதிகளை எடுத்து வேறு வகையில் புணர்த்துவதால் (ஓ, ந, ம, சி, வ, ய என்ற) மூல மந்திரம் தோன்றுகின்றது. அ, உ, ம என்ற எழுத்துக்களால் குறிக்கப்படும் முதல் அகரத்தின் மூன்று பகுதிகளும், மந்திரத்திலுள்ள ஓகரத்தைத் தோற்றுவிக்கின்றன. மிகுந்த நான்கு அகரங்களும் பற்பல வகையில் பத்துப் பிரிவுகளாய் நின்று பஞ்சாக்கரம் அல்லது ஐந்து எழுத்தாகிய 'ந, ம, சி, வ, ய' என்ற எழுத்துக்களைத் தோற்றுவிக்கின்றன. ந, ம, சி, வ, ய என்ற எழுத்துக்கள் ஐந்து; சிவனுடைய முகங்கள் ஐந்து; இவ்வைந்தெழுத்துக்களும் பத்துப் பிரிவுகளாலாயவை; சிவனுடைய கரங்கள் பத்தாம்; இவ்வொற்றுமை கருதற்பாலது. ஐந்து அகரவெழுத்துக்களை எடுத்து இவற்றைப் பகுதிகளாக வகுத்து ந, ம, சி, வ, ய என்ற ஐந்தெழுத்துக்களைப் பெறுகின்றோம். இங்ஙனமாயினும், பிரணவமாகிய ஓகரவெழுத்து இவற்றிலமையாது அதிகப்பட்டு நிற்கின்றது. இஃது இறைவனின் மாறுத நிலையைக் குறிக்கும். ந, ம, சி, வ, ய என்ற எழுத்துக்கள் சிவனுடைய ஐந்தொழில்களாகிய சிருட்டி, திதி, சங்காரம், த்ரோபவம், அநுக்ரகம் என்பவற்றின் குறியீடுகளாம். ந, ம, சி, வ, ய என்ற எழுத்துக்களின் தத்துவம் அல்லது உண்மை இயல், முதலெழுத்தாகிய ஓகரம் அல்லது அகரத்தின் எவ்வெப் பகுதியிலிருந்து இவ்வெழுத்துக்கள் ஆக்கப்படுகின்றனவென்பதை நன்கு நோக்குவதால் தெளியப்படும். இதைக் கூறப்புகின், எடுத்துக்கொண்ட பொருள் இடர்ப்படுமாறு நீண்ட சொற்பொழிவொன்றுற்ற வேண்டுமாதலின், இதை விடுத்து மற்றொரு மூலமந்திரத்தை எடுத்துக்கொள்கின்றேன்.

ஐந்தாவது படத்தின் மேற்பகுதியில் வெவ்வேறு பிரிவுகளையுடையனவாய் ஐந்து அகர வெழுத்துக்களிருக்கின்றன. முதல் அகரவெழுத்து, அ, உ, ம என்ற குறிகளையுடைய மூன்று பகுதிகளாலாயது. மிகுந்த நான்கு அகர வெழுத்துக்களும், பன்னிரண்டு பிரிவுகளாக வகுக்கப்பட்டிருக்கின்றன. ஒன்றுமுதற் பன்னிரண்டுவரையிலுள்ள எண்களால் இப்பிரிவுகள் குறிப்பிடப் பெற்றிருக்கின்றன. தலைப்பிலுள்ள அகரத்தின் மூன்று பிரிவுகளுந் திருப்பியெடுக்கப்பட்டு மூலையெழுத்தாகிய ஓகரத்தின் வடிவம் பெறுகின்றன. எஞ்சிய நான்கு அகரவெழுத்துக்களின் பன்னிரண்டு பகுதிகளும் சடாக்கரமாகிய "சரவணபவ" என்ற மூலமந்திரத்தின் எழுத்துக்களைத் தோற்றுவிக்கின்றன. "சரவணபவ" என்பதிலுள்ள எழுத்துக்கள் ஆறு; முருகனின் முகங்கள் ஆறு; "சரவணபவ" என்பதிலுள்ள ஆறு எழுத்துக்களும் பன்னிரண்டு பிரிவுகளாக பகுக்கப்பட்ட நான்கு அகரவெழுத்துக்களிலிருந்து பிறக்கின்றன; முருகனின் கரங்கள் பன்னிரண்டு; இவை உற்று நோக்கற்பாலன. முன்கண்டவாறே ஈண்டும் மூலையெழுத்தாகிய ஓகரம் ஆறு எழுத்துக்களோடு ஒன்றிவிடாது பிரிந்து நின்று ஈசுவரனுடைய திரிபின்மையைக் குறிக்கின்றது. இம்மந்திரத்திலடங்கிய தனித்தனி எழுத்துக்களின் தத்துவமும், அட்டக்கிரியைகள் என்ற கருத்தை இவ்வெழுத்துக்கள் எங்ஙனம் விளக்குகின்றன என்பதும், மூல எழுத்தின் எவ்வெப் பகுதிகளினின்றும் இவை ஆக்கப்பெறுகின்றன என்பதை நோக்குவதால் தெளிவாகும்.

பஞ்சாக்கரம், சடாக்கரமாகிய இருமந்திரங்களும் ஐந்து அகரவெழுத்துக்களி லிருந்தே பிறக்கின்றன வென்பதைக் கருத்தில் வைக்கவேண்டும். இம்மந்திரங்களாற் குறிக்கப்படுகின்ற சிவனும் முருகனும், (சாத்திரங்கள் கூறு



(படம் 6)



(படம் 7)

மாறு) ஒரே இறைவனின் இரண்டு வடிவங்களே என்ற உண்மை இதனால் வெளியாகின்றது. ஐந்து பிரணவ அகரங்களிலிருந்து இரு மந்திரங்களுந் தோன்றுவதுகொண்டு முருகனுஞ் சிவனும் ஒருவரே எனல் புதிதன்று. இருவருடைய முகங்கள், கைகள், கண்கள் ஆகியவற்றைக் கூட்டி எண்ணி, சாத்திரங்களே இருவரும் ஒருவரென விளம்புகின்றனவென்று திருப்பாதிரிப்புலியூர் ஞானியார் சுவாமிகள் எடுத்துக்காட்டியிருக்கின்றார்கள். சிவனுடைய ஐந்து முகங்களும் பத்துக் கைகளும் பதினைந்து கண்களுஞ் சேர்ந்த தொகை முப்பது. முருகனுடைய ஆறு முகங்களும் பன்னிரண்டு கரங்களும் பன்னிரண்டு கண்களுஞ்சேர்ந்த தொகை முப்பது. சிவனை நோக்குமளவில், கண்களின் தொகை பெரிது முருகனைப் பார்க்கும்பொழுது, கரங்களின் தொகை உயர்ந்தது. இதனால் முருக மந்திரமாகிய சடாக்கரம், அக்கடக்கிரியைகளுக்குச் சிவமந்திரத்தைவிட வாய்ப்புடைத்தென்பது காட்டப்படுகின்றது.

ஆறாவது படத்தில் பத்து அகரவெழுத்துக்கள் முப்பத்துநான்கு பகுதிகளாக வகுத்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இந்த முப்பத்துநான்கு பகுதிகளும் திருப்பியமைக்கப்பட்டு, "ஓ நமோ நாராயணாய" என்ற எட்டெழுத்தாகிய மூலமந்திரமா யமைவது அடுத்த படத்தில் காட்டப்பட்டிருக்கின்றது. ஈண்டுப் பிரணவ எழுத்தாகிய ஓகரம் தனித்து நிற்கவில்லை. எட்டெழுத்துக்களில் அதுவும் ஒன்றாகின்றது. அன்றியும், முப்பத்துநான்கு பகுதிகள் என்ற கணக்கில் ஓகரத்தின் மூன்று பகுதிகளும் அடங்கியிருக்கின்றன. அட்டாக்கரத்தின் மிகச் சிக்கலான வடிவத்திலும் எழுத்துக்கள் தெளிவாகவும் மிக ஒழுங்காகவும் அமைதி பெறுகின்றன. அட்டாக்கரத்தை உண்டாக்கு

வதற்கு வேண்டப்படும் பிரணவ எழுத்துக்கள் பத்து; விட்டுணுவின் அவதாரங்கள்பத்து ;இப் பத்தவதாரங்களும், கருக்குழியில் தோன்ருத ஐந்து தேவ அவதாரங்களாகவும், கருக்குழியில் தோன்றிய ஐந்து மனித அவதாரங்களாகவும் பகுக்கப்படும். இப்பத்து அவதாரங்களும் பராபரை என்ற தெய்வத்தின் பத்து முகங்களிலிருந்து தோன்றின வென்றும், இவற்றில் தேவ அவதாரங்கள் ஐந்தும் பரத்தின் ஐந்து முகங்களிலிருந்தும், மனித அவதாரங்கள் ஐந்தும் பரையின் ஐந்து முகங்களிலிருந்தும் பிறந்தனவென்று சொல்வது ஒருசாரார் கொள்கையாம்.

அட்டாக்கரத்தைத் தோற்றுவிக்கின்ற பத்து மூலப் பிரணவ அகரங்களும் முப்பத்துநான்கு பிரிவினையுடையவை ; பத்து அவதாரங்களுடைய கைகளின் தொகையும் முப்பத்து நான்கு ஆகும். ஐந்து தேவ அவதாரங்களாகிய மச்ச, கூர்ம, வராக, கற்கி, நரசிம்ம உருவங்கள் ஒவ்வொன்றும் நான்கு கரங்களை யுடையனவா யிருந்தன; கரங்களின் மொத்தத் தொகை இருபது. மனித அவதாரங்களில் மூன்றை இராமர், பரசுராமர், பலராமர் எனச் சில வைணவர்களும், இராமர், பரசுராமர், பௌத்தர் என்று வேறு சில வைணவர்களுங் கூறுவார்கள். இவர்கள் ஒவ்வொருவருக்குங் கைகள் இரண்டு. ஆக மூன்று மனித அவதாரங்களின் கைகள் ஆறு; வாமன அவதாரத்தில் பிறக்கும் பொழுது கைகள் இரண்டு, விசுவரூபமெடுத்தகாலையில் இவை நான்காயின. இது பாகவத புராணத்திற் கண்டது. கிருட்டிணன் கருவினின்று தோன்றிடினும் பிறக்கும் பொழுது நான்கு கைகளையுடையவனு யிருந்து இவற்றுள் இரண்டைப் பிறகு இழுத்துக் கொண்டானென்று மேற் குறித்த புராணமே கூறுகின்றது. இங்ஙனம், இவ்விரண்டு

அவதாரங்களுக்கும் கைகள் எட்டு. எல்லா அவதாரங்களை யும் சேர்த்தெண்ணுவதால் பெறப்படும் தொகை முப் பத்து நான்கு (20+6+8).

அட்டாக்கரத்தைத் தோற்றுவிக்கும் பத்து அகர வெழுத்துக்களின் பகுதிகள் முப்பத்துநான்கு. பத்து அவ தாரங்களுடைய கரங்களின் தொகை முப்பத்துநான்கு. இஃதொரு வியத்தகு ஒற்றுமை யன்றோ? இப்பொழுது, இந்திய புராணங்களிற் கூறப்படும் தெய்வங்களைப் பற்றிய கதைகள், தமிழ் எழுத்துக்களின் வடிவங்களை யொட்டி அமைக்கப்பட்டனவா? அல்லது, கதைகளை ஒட்டி எழுத் துக்கள் வகுக்கப்பட்டனவா? என்ற கேள்வி பிறக்கின்றது. இதுபற்றி, ஆராய்வது இப்பொழுது எனது நோக்கமன்று.

மூல மந்திரங்களெல்லாம் பஞ்சாக்கரத்தையே அடிப் படையாகக் கொண்டனவென்றும், பஞ்சாக்கரம் முளை யெழுத்தாகிய ஓகரத்தை அடிப்படையாகக்கொண்டதென் றும் சாத்திரங்களில் மறைபொருளாகக் கூறப்பட்டுளது. இதை நாம் பார்த்த எழுத்து வடிவங்களின் துணைகொண்டு விளக்கலாம். எல்லா மந்திரங்களும் பிரணவமாகிய ஓகரத்தி லிருந்து பிறக்கின்றன வென்பது, ஓகரம் அகரமாகக்கூடிய உருவம் பெற்றிருப்பதாலும், அகரத்திலிருந்தே எல்லா மந் திரங்களும் தோன்றுவதாலும் விளக்கமுறுகின்றது. மகா மந்திரங்களெல்லாம் பஞ்சாக்கரமே என்பதை மூன்று வெவ்வேறு வகைகளிற் காணலாம்:—முதலாவது, "ஓ—நமசிவய" என்ற பஞ்சாக்கரம் ஐந்து பிரணவ அகரங்களி லிருந்து தோன்றுகிறது; "ஓ—சரவணபவ" என்ற சடாக் கரமும் ஐந்து பிரணவ அகரங்களிலிருந்தே பிறக்கின்றது; "ஓ—நமோ நாராயணய" என்ற அட்டாக்கரம் ஈரைந்து பிரணவ அகரங்களிலிருந்து உதிக்கின்றது. இரண்டாவது;

அட்டாக்கரத்தில், தெளிவாய் இரண்டு பகுதிகளுள: "ஓ—நமோ" என்பது ஒன்று; மற்ருென்று "நாராயணுய" என்பது; இவற்றுட் பிந்தியது ஐந்தெழுத்தாலாயது; மற்றுமிது "நமசிவய" எனும் பஞ்சாக்கரத்தைப் போலவே நகரத்தில் தொடங்கி யகரத்தில் முடிகின்றது: "ஓ நமோ" என்ற முதற் பகுதியில் மூன்றெழுத்துக்களே யுளவேனும், ஓகரத்தை அதிலடங்கி நிற்கும் அ, உ, ம என்ற மூன்றெழுத்துக்களாக விரிப்போமாயின், ஈண்டும் ஐந்தெழுத்துக்களைப் பெறுகின்ருேம். மூன்ருவது வகை இவற்றைவிட நய முடையது; இஃதென்னவெனின், மந்திரங்களில் இரட்டிக்கும் எழுத்துக்களை நீக்கி எண்ணுவதாகும். மூன்று மந்திரங்களுக்கும் பிரணவமாகிய ஓகரம் பொது. இதை விடுத்து மற்ற வெழுத்துக்களை எடுத்துக்கொள்வோம். பஞ்சாக்கரத்தில் ஓரெழுத்தும் இரட்டிக்கவில்லை. சடாக்கரத்தில் வகரமாகிய ஓரெழுத்து இருமுறை வருகின்றது. இவற்றிலொன்றை நீக்குவோமாயின், சடாக்கரம் பஞ்சாக்கரமே யாகும். ஓகரத்தை விடுத்தபின் அட்டாக்கரத்தில் இருப்பன "நமோ நாராயணுய" என்ற ஏழு எழுத்துக்களே. இவற்றில் நகரமும் யகரமும் இரட்டித்து நிற்கின்றன. இவற்றுள் ஒவ்வொன்றை விலக்குவோமாயின், எஞ்சி நிற்பன ஐந்தெழுத்துக்களே.

இனி, ஏழாவது படத்தைப் பார்ப்போம். இங்கே நான்கு அகரஎழுத்துக்களையுடைய இரண்டு தொகுதிகளுள. முதலில் நிற்கும் நான்கு அகரங்கள் பத்துப் பிரிவுகளாகவும், இரண்டாவதுநிற்கும் நான்கு அகரங்கள் பதின்மூன்றுபிரிவுகளாகவும் வகுக்கப்பட்டு, முறையே "அரிசுவடி," "நூல்மரபு" என்ற சொற்களைப் பயக்கின்றன. தமிழ்மொழியிலுள்ள வேறெல்லாச் சொற்களைக் காட்டிலும் இம்மொழிகள்

தனிப்பெருஞ் சிறப்பின. இது பின்னர்க் கூறப்படும். ஈண்டு இவ்விரண்டு சொற்றொடர்களும் பஞ்சாக்கரத்தைப் போலவே ஐந்தெழுத்துக்களுடையன வென்பதைக் குறித்தல் சாலும். நான்கு அகர வெழுத்துக்களிலிருந்து "அரிசுவடி" "நூல்மரபு" என்ற இரு வேறு சொற்களுந் தோன்றுகின்றன. நான்கு பிரணவ எழுத்துக்களிலிருந்து வேதங்கள் பிறந்தன வென்பர். நான்கு பிரணவ எழுத்துக்களிலிருந்து வேதங்கள் வந்தன வென்பதற்கும், நான்கு அகர எழுத்துக்களிலிருந்து மேற்குறித்த இரண்டு சொற்றொடர்களும் பிறப்பதற்குமுள்ள ஒற்றுமையை நீங்கள் கவனிக்க வேண்டும். "அரிசுவடி" யிலும், "நூல்மரபு" என்ற தொல்காப்பியப் பகுதியிலும் விளக்கப்படும் பொருள் தமிழ் எழுத்துக்களே. தமிழ் எழுத்துக்கள் இவ்விரண்டிலும் நான்கினங்களாக வகுக்கப்படுகின்றன. உயிரெழுத்து அல்லது சீவாத்மா எழுத்துக்களென்பது ஓரினம்; மெய்யெழுத்து அல்லது மாயை எழுத்துக்களென்பது மற்றொன்று; உயிர்மெய் யெழுத்து அல்லது சீவாத்மா மாயையிற் புகுந்து நிற்கு மெழுத்துக்கள் என்பது மூன்றாவது இனம்; நான்காவது, மாறுத ஓரெழுத்து என்று பொருள்படும் 'தனிநிலை' அல்லது "ஆய்தம்." இது குறித்து விரிவாய்ப் பின் கூறுதும்.

முளையெழுத்து அல்லது பிரணவமாகிய ஓகரம் பல்வேறுவகையில் உருமாறி மூலமந்திரங்களையும் இறுதியிற் கூறிய இரண்டு சொற்றொடர்களையுந் தோற்றுவிப்பதை விளக்கும். இப்பகுதியை முடிப்பதற்கு முன், ஈண்டு நாம் கண்டவற்றில் முக்கியமானவற்றைத் தொகுத்துக் காட்டுதும்.

கீழ்ப் பகுதியை நூற்றெண்பது திக்கிரி சுழலச் செய்வதால் ஓகரம் அகரமாக மாறும். இங்ஙனந் தோன்றும்

அகரத்திலிருந்து வேறு எழுத்துக்கள் பிறக்கின்றன. பிற வெழுத்துக்கள் பிறப்பதற்கு நிலைக்களமாயுள்ள அகரத்தின் வடிவமும் அளவும் ஒன்றே. (வெவ்வேறெழுத்துக்கள் பிறப்பதன் பொருட்டு அதன் வடிவத்தையும் அளவையும் நாம் யாண்டும் மாற்றவில்லை.) அகரத்தைப் பகுதிகளாக்கு வதிலும் அதன் உருவத்தைச் சிதைக்காமல், அதன் வளைவு களுக் கிணங்க வகுத்திருக்கிறோம். மூலமந்திரங்களும் இறு தியிற் குறித்த இரண்டு சொற்றொடர்களும் எழிலமைந்த வடிவங்களை யுடைய எழுத்துக்களா லமைந்திருக்கின்றன. ஓரெழுத்து இரட்டித்து வருமாயின், முதலெழுத்து அக ரத்தின் எப்பகுதிகளாலாயதோ, அப்பகுதிகளாலேயே இரண்டாவது எழுத்தும் அடைகின்றது. பகுதிகளின் தொகையும் எழுத்துக்களும் மூலமந்திரங்களைப் பற்றிய புராணக் கதைகளைக் குறிப்பனவா யிருக்கின்றன. மாற்றி யமைக்கப்பட்ட எழுத்துக்களின் வடிவம் அவ்வெழுத்துக் களின் மறைபொருளைக் காட்டுகின்றது. மந்திரங்களும் சொற்றொடர்களும் குறைந்த அகரப்பகுதிகளாலாயவை. இப்பகுதிகளின் தொகையை இன்னும் குறைக்க முயல்வது வீணாகின்றது.

மந்திரங்களையும் சொற்றொடர்களையும் உண்டாக்கு வதில் எடுத்துக்கொண்ட அகரங்களின் எல்லாப் பகுதிகளும் பயன்படுத்தப்படுகின்றன. வேறு எல்லாத் தமிழ்ச் சொற் களும் இவ்வாறே அகரப் பகுதிகளினின்றும் பெறப்படுதல் கூடுமாயினும், எடுத்துக்கொண்ட அகர எழுத்துக்களின் எல்லாப் பகுதிகளையும் ஒன்றையும் விடாமல் உபயோகித்துக் கொள்ளக்கூடிய சொற்கள் மிகமிகச் சிலவே. ஈண்டுக் கூறிய நுண்மையைச் சோதித்துப் பார்த்தறிந்து கொள்க.

ஈண்டெடுத்துக் காட்டிய ஒற்றுமைகள் எதிர்பாராத வகைகளில் நிகழ்வனவே யன்றி இவற்றில் ஒழுங்கும் முறையு மில்லை என்போமாயின், அது பெரிதும் வியத்தற்குரிய தொன்றாகும். ஏனெனின், அறிவின் எத்துறையிலும் இத் தகைய நிகழ்ச்சி காணலரிதாகலின் என்க. இதுகாறுங் கூறிய ஒற்றுமைகள் இன்னும் நாமெடுத்துக் காட்டக் கூடிய ஒற்றுமைகளின் ஒரு சிறு பகுதியே யாகும். கால மின்மை பற்றியும் வேறு காரணங்களாலும் விரிவாய் இவற்றை ஈண்டுக் கூறாது விடுத்தேன்.

இதுகாறும் முகவுரையாகக் கூறியதை நிறுத்தித் தமிழ் எழுத்துக்களும் அவற்றின் நுண்மை விளக்கமும் என்ற பொருளை எடுத்துக்கொள்ளுகிறேன். தமிழ்மொழியிலே மறைத்தன்மையவாகிய பகுதிகள் நிரம்பிக் கிடக்கின்றன. மறைத்தன்மையவாகிய இப்பகுதிகளைத் தமிழ் இலக்கியத்தி லிருந்து நீக்கிவிடுவோமாயின், இக்காலத் தெழுதப்படு கின்ற நாவல்களைத் தவிர வேறொன்றும் எஞ்சாது. முப்பது நாற்பதி யாண்டுகளுக்குமுன் மொழியின் தோற்றத்தையும் பயனையும் பற்றிப் பல்வேறு கருத்துக்களிருந்தில. ஓரே ஒரு கருத்துத்தா னிருந்தது. அக்கருத்தென்னவெனின். தொடங்கற்கண் சிவபிரான் அகத்தியருக்கு மொழியை யளித்தார்; அகத்தியர் அதைத் தென்னிந்தியாவிலுள்ள மக்களுக்கீந்தார்; அதன் பயன் கடவுளையடைவதே என்ப தாம். இதைத் திருவள்ளுவர் தமது குறளில் வற்புறுத்து கின்றார்:—

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅ ரெனின்.

ஒருமைக்கட் டான்கற்ற கல்வி யொருவர்க்
கெழுமையு மேமாப் புடைத்து.

> *நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து*
> *மறைமொழி காட்டி விடும்"*

இக்காலத்து உலோகாயதக் கொள்கையினர் மொழியைப் பற்றிய இக்கருத்து அறியாமையின்பாற் படுமென்று இகழ்ந்துரைப்பர்.

இக்காலத்தில் மொழியைப்பற்றித் தமது கருத்தை வெளியிடுகின்ற பழைமை யாராய்ச்சிக்காரர், கல்வெட்டுக்களையும் நாணயங்களையும் ஆராய்பவர், மக்கட் பகுப்பை ஆராய்பவர், முன்னிருந்து மாண்ட உயிர் வகைகளை ஆராய்பவர் ஆகிய பலரும் காரணமின்றி ஒன்றையும் ஏற்றுக்கொள்ள இசைகின்றிலர். பொது அறிவிற் குடன்பட்டதையே அவர்கள் காணக்கூடியவர்களாதலின் நமது நாட்டுப் பழைய ஆசிரியர்கள் நுட்ப அறிவினாற் கண்டவற்றை இவர்கள் மதியார். பொது அறிவென்பது இத்தன்மையதென்று வரையறுக்கப்பட்டதொன்றன்று; அது காலத்திற்கு மிடத்திற்கு மேற்றவாறு மாறுந்தன்மையது; வெவ்வேறு மக்களில் வெவ்வேறு அளவுடையதாயிருப்பது; ஒரு மகனே ஒரு பொழுதில் சிறந்த அறிவுடையவனாகவும்; மற்றொருபொழுதில் குறைந்த அறிவுடையவனாகவும் விளங்கலாம். முன்னிருந்த ஆசிரியர்கள் மொழியைப்பற்றி ஒரே கருத்துடையவராயிருந்தனர். இப்பொழுது மொழிகளையொட்டிய பத்து ஆராய்ச்சித்துறைகளிருந்தால் இவ்வாராய்ச்சித் துறையிலுள்ளவர்கள் மொழியின் தோற்றத்தைப் பற்றிப் பதிற்றுப்பத்துக் கருத்துடையவர்களாயிருக்கிறார்கள். வடமொழி ஆராய்ச்சியாளர் வடமொழியிலிருந்தே எல்லாந் தோன்றின வென்பர்; கீழ்நாட்டார், எல்லாம் கிழக்கிலிருந்தே பிறந்தன வென்பர்; கிறித்தவர்கள் பழைய பாபிலன் நாடே எல்லாவற்றிற்குந் தோற்றுவா

யென்பர்; இந்துக்கள் குருசேத்திரத்தை யாவற்றிற்குந் தாயகமாக்குவர்; என்னைப்போன்ற தமிழர்கள் யாவுந் தமிழி லிருந்துந் தென்னிந்தியாவிலிருந்துமே வந்தன வென்பர்.

இங்ஙனங் கூறப்படுகின்றன வெல்லாம் ஒக்க உண்மை யாயிருத்தல் கூடாது; எல்லாந் தவறாயிருக்கலாம். மொழி இறைவனிடத்திருந்து வந்ததென்ற கொள்கை பன்னெடுங் காலம் எதிர்ப்பின்றி ஏற்றுக்கொள்ளப்பட்டது. தக்கவை எஞ்சும் மற்றவை அழியும் என்ற கொள்கையைப் பின் பற்றுகின்ற இக்காலத்து ஆராய்ச்சியாளர் மேற்குறித்த கொள்கை மிக நீண்டகாலம் மக்களுளத்தில் ஆட்சிபெற்ற தற்குத் தகுந்த காரணங்கள் இருக்க வேண்டுமென்பதை ஒத்துக்கொள்ள வேண்டும். அக்கொள்கை அறியாமை யாற் பிறந்ததென்பது ஒவ்வாது. வானநூல், இசை, மருந்து, உண்மைநூல், இலக்கணம் முதலியவற்றை நன் கறிந்த நம்முடைய பண்டைப் புலவர்கள் மொழி என்ற இவ்வொரு பகுதியில் மாத்திரம் அறியாமைக்காளானார் கள் என்பது பொருந்துவதொன்றன்று.

மொழி என்பது மக்களை இறைவனிடத்துச் செலுத் துங் கருவி என்ற கொள்கையைப் புறக்கணித்தொதுக்கு கின்ற இக்காலத்துப் புலவர் பண்டைக்காலத்துக் கருத்துக் களில் இது பதர், இது மணி என்பதை ஆராய்ந்திருக்க வேண்டும். இவ்வாறவர்கள் செய்யாது முழுவதையும் அவர்கள் இகழ்ந்துரையாடுகின்றனர்.

மொழியைப்பற்றி முன்னோர் கூறியதனுண்மையைக் கண்டு பிடிப்பது முப்பதியாண்டு எனது வேலையாயிருந்தது. அதை முற்றும் யான் கண்டுவிட்டேனென்று சொல்லொணு தாயினும் இத்துறையில் இன்னுமாராய்ச்சி செய்யுந்திறமை யுடையவர்க்குப் பயன்படக்கூடியவற்றைத் தொகுத்து

வைத்திருக்கின்றேன். கணக்கு முதலிய மற்ற அறிவுத் துறைகளைப் போலவே இத்துறையும் வளருந்தன்மையது. ஆகவே, இதன் எளியவான பகுதிகளைக் கூறுது நுட்ப மானவற்றிற்குச் செல்லுதலியலாது. ஈண்டுக் குழுமி யிருக்குங் கற்ருேரவையில் இத்துறையின் எளியன வற்றையே யான் எடுத்துரைத்தல் கூடும்.

எழுத்துக்களைப்பற்றிப் பொதுமுறையிலாவது, நுட்ப முறையிலாவது பேசுதற்கு அவற்றின் இயலை இரண்டாக வகுத்தல் வேண்டும். இவை ஒலியியல், வடிவியல் என்பன வாம். இன்று எழுத்துக்களின் வடிவமைதியைப் பற்றிச் சில படங்கள் காட்ட விரும்புகின்றேனுதலின், ஒலியியலைப் பற்றி விரிவாய்க் கூறுதற்கில்லை. தமிழ் எழுத்துக்களின் ஒலி அல்லது உச்சரிப்பு எங்ஙனமிருக்க வேண்டுமென்று பழைய தொல்காப்பிய முதல் நேற்றுத்தோன்றிய சிறு நூல் வரையிலுள்ள எல்லா இலக்கணங்களாலும், மிக நுட்பமாகவும் அறிவியலுக்கொத்த வகையிலும் கூறப்பட் டிருக்கின்றது. இந்த விதிகள் இக்காலத்திற்குப் பொருந்தா வென்று தள்ளப்படவில்லை. என்ருலும், மகாமகோ பாத்தியாயர் முதல் பேர்பெரிய திண்ணைச் சட்டம்பியார் வரையில் எல்லோரும் இவ்வெழுத்துக்களின் ஒலியைத் தவருக எழுப்புவதிற் பிடிவாதமாயிருக்கிருர்கள். தமிழ் எழுத்துக்களின் செவ்விய ஒலி இம்மாகாணத்திலுள்ள கல்வியில்லாதவரென்று கருதப்படுகின்ற தமிழ் மக்க ளிடத்தும், இலங்கைத் தீவின் வடபகுதியிலுள்ள படித்த தமிழரிடத்துங் கேட்கப்படுகின்றது.

இப்பொழுது தமிழகராதி தொகுப்பதற்குக் கூட்டப் பட்ட குழுவினர், தாங்கள் தொகுக்கப் போகின்ற அகராதி யில் தமிழ் எழுத்துக்களின் தவருன உச்சரிப்பைச் சரி என்று

பதிவு செய்யப்போவதால் அறிவியல் முறைக்கொத்த வகையில் திருத்தமாக வகுக்கப்பட்ட தமிழ் ஒலியியலுக்குக் கல்வி இல்லாதவரைக் காட்டிலும் பெருங்கேடு விளைப்பாரென்பது திண்ணம். தமிழ்ச் சொற்களின் உச்சரிப்பை ஆங்கிலவெழுத்தில் தவருக அமைத்துக்காட்டாது விட்டு விடுவாராயின் அதுவே அவர்கள் தமிழுக்குச் செய்யுமோர் உதவியாகும். தவருன உச்சரிப்பைத் தக்கதென்று அகராதியிற் காட்டல் தமிழ்மொழியின் அடிப்படையை, உண்மை என்ற அதன் அடிப்படையை தாக்குவதாகும்.[1] தமிழ் எழுத்துக்கள் உண்மை இயலை அடிப்படையாகக் கொண்டவை. தமிழ் இலக்கணங்களில் வகுக்கப்பட்டிருக்கும் ஒலியியல், அறிவியல் முறையைத் தழுவியது. இம்முறையில் வகுக்கப்பட்ட அவ்வொலியியலை நாம் வழங்குவோமாயின் உலகிலுள்ள எம்மொழியையுந் தமிழில் (வேறு எழுத்துக்களைக் கடன் வாங்காமல்) வரைவதற்குப் போதிய எழுத்துக்களிருக்கின்றன. இதைவிட எளியதுந் திருந்தியதுமான முறையொன்று கருதற்கரிது. தமிழ் ஒலி முறையின் இயலையும் அஃது எவ்வொலியையும் வரைந்து காட்டுந் திறமை யுடையது என்பதையும் உவெஸ்லி கலாசாலைக்கூட்டத்தில் 1917 ஆம் ஆண்டு பெப்ரு

---

[1] சென்னைப் பல்கலைக் கழகத்தாரால் நீண்டகாலந் தொகுக்கப்பட்டு அண்மையில் முற்றுப்பெற்ற தமிழகராதியில் தமிழ்ச் சொற்களை ஆங்கிலத்தில் எழுதிக் காட்டியிருப்பது இழுக்குடைத்தென்பதை அப்பெரிய அகராதியின் ஒரு பகுதியைப் பார்த்த எவரும் தெற்றெனக் காணலாம். இது குறித்து மாணிக்க நாயக்கர் சொல்வது ஒருபுறமிருக்க, இந்த மாதத் தொடக்கத்தில் (1947 ஆகஸ்டு. 9) வெளிவந்த 'இந்து'ப்பத்திரிகை ஞாயிற்றுக்கிழமைப் பதிப்பில் திரு. சக்கரவாத்தி இராசகோபாலாச்சாரியாரவர்கள் தமிழகராதியில் தமிழ்ச்சொற்களை ஆங்கில எழுத்தில் பெயர்த்துக் காட்டியிருப்பதன் குறைகளை எடுத்துரைத்துள்ளார்.

வேண்டியதாயிருக்கிறது. தொல்காப்பிய வாயிலாய் காணக் கிடக்கின்ற இவ்வுண்மைகள் முன்னுளிலிருந்த ஒழுங்கு பட்ட அறிவையும், தமிழ்மொழியின் மறைப்பகுதியை அறியவேண்டிய முறையையும் நமக்கு நன்கு விளக்கு கின்றன. மறைத்தன்மையே தமிழின் அடிப்படையாகு மென்பதைத் தெற்றெனக் காண்கின்றோம். மறைத் தன்மை என்பதை நாமுற்றுநோக்கிப் படிப்படியாய் அதை அறியத் தொடங்கும்பொழுது மறை என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்ற திரை நீங்கி அது நுண்ணிய இயற்கை முறைகளைக் குறிக்கும் என்பது வெளியாகும்.

உண்மை இயலை அடிப்படையாகக்கொண்டே தமிழ் மொழியுந் தமிழ் இலக்கணமும் வந்தன.

பண்டை இலக்கண நூலாகிய தொல்காப்பியத்தைச் சிறிதேனுங் கற்றவர் அதில் வழங்கப்படும் இலக்கணக் குறி யீடுகள் உயிரைப்பற்றிய உண்மைகளை வெளியிடுவதற்கு வேண்டிய குறியீடுகளாமென்பதை எளிதிலறிவர். இலக் கணத்திற் கூறப்படும் எழுத்து, சொல், வாக்கியம் என்பவற்றிற்குப் பதிலாக உண்மை இயலில் இவற்றிற் கொத்திருப்பவற்றைப் புகுத்துவோமாயின் தொல்காப் பியத்திற் கூறப்பட்ட விதிகள் மொழியிலக்கணத்திற்குப் பதிலாய் உயிரிலக்கணத்தை விரிக்கின்றன வென்பது தெளிவாம். பின்வருவன கொண்டு இதை யறியலாம்:-

தாமே இயங்கும் ஆற்றலுடைய எழுத்துக்கள் தமிழில் உயிர் அல்லது ஆவி என்று கூறப்படுகின்றன. உயிர், ஆவி என்பன சீவாத்மாவைக் குறிக்கும், உயிரோடு கலந்தா லன்றித் தாமே இயங்கலாற்ருத எழுத்துக்கள் உடல் அல்லது மெய் என்று பெயர் பெறுகின்றன. உடல், மெய் என்பன திரிமலகோசம் அல்லது சடத்தைக் குறிக்கும்.

தானே இயங்கும் எழுத்தும், இயங்கலாற்ரு வெழுத்தும் கூடிப்பிறக்கு மொலியைக் குறிக்குமெழுத்தும், உயிர் மெய் யென்று பேர் பெறுகின்றது. உயிர் மெய் யென்பது உடம்பில் உயிர் அடைபட்ட நிலையைக் குறிக்கும். இது திரிமல கோசத்தில் சீவாத்மா இயங்குவதாகும். திண்ணிய ஓசையையுடைய எழுத்துக்கள் வல்லின மெய் யெனப்பட்டுத் தானென்ற அகங்காரத்தின் உருவத்தைக் குறிக்கும். இஃது ஆணவமல கோசமாகும். திண்மை மென்மையாகிய இரண்டிற்குமிடையேயுள்ள ஓசை நிலையைக் குறிக்கு மெழுத்துக்கள் இடையினமெனப் பெயர்கொண்டு, மயக்கத்தைக் குறிக்கும். இது மாயா மல கோசமாகும். மென்மைத் தன்மையவாய ஓசையைக் குறிக்குமெழுத்துக்கள் மெல்லினமெனக் குறிக்கப்பெற்று, உயிரைப் பல்வகையில் ஈர்க்கும் அவாக்களைக் குறிக்கும். இது காமியமல கோசமாகும்.

ஒற்றெழுத்துக்கள் ஒன்ரூடொன்று கூடுவதைக் கூறுமதிகாரம் புள்ளி மயங்கியல் அல்லது மெய்மயங்கியல் எனத் தலைப்புப் பெற்று உடம்பு அல்லது திரிமல கோசத்தில் மயங்குவதை விளக்கும். (மயக்கம் = மாயை)

உயிர்கள் ஒன்ரூடொன்று கூடுமியல்பை விரிக்கின்ற அதிகாரம் உயிர்மயங்கியல் என்று பெயர்பெற்று உயிருக்கு நேரும் மயக்கத்தை விளக்கும்.

எழுத்துக்களின் ஒலியை வரையறுக்கின்ற அதிகாரம் பிறப்பியல் என நின்று பிறப்பின் முறையைக் காட்டும். பிறப்பென்பது சனனம், சன்மம்.

எழுத்துக்கள் அடைகின்ற எடுத்தல், நலிதல், படுத்தல் என்ற மாறுதல்கள் சிருட்டி, திதி, சங்காரம் என்ற முத் தொழிலைக் குறிக்கும். வகர யகரங்களாகிய இரண்டெழுத்

துக்களும் உடம்படு மெய்யெனப் பெயர் பெறுகின்றன. உடம்படு மெய்யென்பதற்கு ஒருயிருடன் மற்றோருயிரை இணைக்கும் மெய் என்றாவது, பிறப்பை யழிக்கும் மெய் யென்றாவது பொருள் கொள்ளலாம். வகர யகரங்கள் மந்திரங்களில் அருளையும் உயிரை (சீவாத்மாவை)யுங் குறிக்கும் எழுத்துக்களாய் நின்று, பிறப்பறுத்து உயிர் வீடு பெறுவதைக் காட்டுகின்றன. தொழிலை விளக்குஞ் சொற்கள் வினை எனப் பெயர்பெற்றுக் கர்மம் என்பதனைக் காட்டும். பிறவினை என்பது மற்றவர்களுடைய கர்ம மாகும். தன்வினை என்பது தான் செய்யுங் கர்மமாகும். குன்றிய வினை, வினையெச்சமெனப் பெயர்பெற்று, முற்றுப் பெறாத கர்மத்தை விளக்கும். முடிந்த வினை முற்றுவினை யெனப் பெயர்கொண்டு தீர்ந்த கர்மத்தைக் காட்டும். குறிப்பு வினை என்பது, தெரியாக் கர்மமாம். தெரிநிலை வினையாவது தெரிந்த கர்மமாம். உடன்பாட்டு வினை அல்லது விதி வினை என்பது மாற்றமில் கர்மமாம். எதிர் கால வினையாவது ஆகாமிய கர்மம். நிகழ்கால வினையாவது பிராரத்வ கர்மம். இறந்தகால வினையாவது சஞ்சித கர்மம். பெயர்களடையும் மாறுதல்கள் வேற்றுமை எனப்படும். இது வினைக்கேற்ப சன்மம் வாய்ப்பதைக் காட்டும்.

இங்ஙனம், இலக்கணச் சொற்றொடர்கள் உண்மை இயலை வெளிப்படுத்தும் திறமை வாய்ந்தனவாய் இருக்குந் தன்மையை விளக்குதற்கு எடுத்துக் காட்டுகள் மற்றும் பல கூறலாம். இதை விடுத்து, உண்மை இயலை எளிதாக எவருங் காணக்கூடிய முறையிற் கூறுகின்ற சில தொல் காப்பிய விதிகளை ஈண்டுக் கூறுதும் :—

"வேற்றுமை தாமே யேழெென மொழிப"

என்பது வேற்றுமை இயலில் முதற் சூத்திரமாகும்.

பொதுவாக உயிர்களுக்குக் கர்மத்தால் விளைகின்ற ஏழ்பிறப்பிற்கும், இதிற் கூறப்படும் ஏழு வேற்றுமைகட்கும் இங்கு ஓரொற்றுமை காணலாம்.

"வினையெனப் படுவது வேற்றுமை கொள்ளாது
நினையுங் காலைக் காலமொடு தோன்றும்"

இது வினையியலின் முதற்சூத்திரம், (வினையியலென்பது கர்மத்தின் கூறு). இச்சூத்திரத்தாற் குறிக்கப்படும் உண்மை யாதெனின், உயிர் எடுக்கின்ற பல பிறவிகளோடே கர்மமென்பது மாறுவதில்லை. அது மாருது அடங்கி நின்று ஆகாமிய பிராரத்வ சஞ்சித என்ற மூவகையில் எதைச் சார்ந்ததோ அதற்கேற்பக் காலம் பார்த்து நிற்கும் என்பது.

இதையொத்த கருத்து, "வேற்றுமை வழிய பெயர் புணர் நிலையே," என்ற புணரியற் சூத்திரத்தால் வெளியிடப்படுகின்றது.

"மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே"

இது முதலதிகாரத்திலுள்ள சூத்திரங்களிலொன்ருகும். இலக்கணமுறையில் இதன் பொருள் வெளிப்படை. இதனுற் குறிக்கப்படும் உயிர்பற்றிய உண்மையுங் காண்பதற் கெளிதே. உயிர்களை நோக்குங்கால் அவைகளுக்குள்ள வேற்றுமை உடம்பைக் கொண்டல்லது வேறு வகையில் அறியப்படாது. க் என்ற மெய்யெழுத்து ஒரு குயிலின் உடலைக் குறிப்பதாக வைத்துக்கொள்வோம். இதில் 'ஊ' என்ற உயிரை ஏறச்செய்வோம். இதனுல் பெறப்படுகின்ற உயிர்மெய 'கூ' என்பது. ஈண்டுக் குயில் கூவு மென்பதைப் பார்க்கின்ருேம். மகர ஒற்றை ஒரு பூனையின் உடம்பாக வைத்துக்கொள்வோம், இதில் நாம் முன் னெடுத்துக்கொண்ட ஊகார உயிர் ஏறுமாயின் மூ என்று

உயிர்மெய் பிறக்கின்றது. இரண்டிடத்திலும் ஊகாரமே உயிராயினும், புகு முடலிற்கேற்ப அது வேறுபடுகின்றது.

உயிர் அல்லது சீவாத்மா உடம்பின் வழியடங்குவதை, "மெய்யின் வழிய துயிர்தோன்று நிலையே" என்றுரைப்பதைக் காட்டிலும் தெளியக் கூறலாங்கொல்? இவை எதிர்பாராது நேரும் ஒற்றுமைகளல்ல.

"புள்ளியீற்று முன்னுயிர் தனித்தியலாது
மெய்யொடுஞ் சிவணு மவ்வியல் கெடுத்தே"

"மெய்யுயிர் நீங்கிற் றன்னுரு வாகும்".

இவை உயிரொடு உயிரும், உயிரொடு மெய்யும், மெய்யொடு மெய்யும் சேர்கின்ற விதிகளைக் கூறும் புணரியலிற் காணப்படும் சூத்திரங்கள். இவற்றால் குறிக்கப்படுகின்ற உயிரை யொட்டிய உண்மைகளையும் நாம் தெற்றெனக் காணலாம். யாண்டாயினும் உயிர் உடம்பிற் புகுமாயின், அது தன்னியல்பு கெடாது காத்தலரிது, உடம்போடு ஒன்றாகும். உயிர் உடம்பை விட்டு நீங்கிடுங்கால் உடம்பு தன் பழைய நிலையை அடையும்.

இலக்கண வகையில் எழுத்துக்களுக்குக் கூறப்படும் விதிகள், மந்திர வகையில் அவ்வெழுத்துக்களுக்குக் கூறப்படும் விதிகளோடு பொருந்தியிருப்பதை விளக்கச் சில எடுத்துக்காட்டுகள் கூற வேண்டியதாகின்றது.

"எல்லா மொழிக்கு முயிர்வரு வழியே
யுடம்படு மெய்யி னுருவுகொளல் வரையார்"

இது நிலைமொழி ஈற்றிலும், வருமொழி முதலிலும் உயிரிருந்தால் அவ்விரண்டு சொற்களும் புணருந் தன்மையைக் கூறுமொரு சூத்திரமாகும். வருமொழி முதலிலுள்ள உயிர், நிலைமொழியீற் றுயிர்முன் மாறாது நிற்றல் கூடு

மாயினும், வருமொழி முதலிலுள்ள உயிர் யகர வகரங்களாகிய உடம்படு மெய்களிற் புகுவதை மேலோர் விலக்கார் என்பது இலக்கண வகையிலிதன் பொருள். உயிரைப்பற்றிய உண்மை கூறும் வகையில் இதன் பொருள் யாதென்று பார்ப்போம். ஈண்டு வருமொழி முதலுயிர் சீவாத்மா அல்லது பசுவைக் காட்டுவதாகும். நிலைமொழி ஈற்றுயிர் பரமாத்மா அல்லது பதியைக் குறிப்பதாகும். பதிமுன் பசு தன்னியல்பு கெடாவண்ணம் நிற்றல் கூடுமாயினும், வருமுயிராகிய சீவாத்மாவை நிலையுயிராகிய பரமாத்மா அல்லது பதியொடு புணர்த்தவல்ல யகர வகரங்களாகிய உடம்படு மெய்கள் அல்லது தனியுடம்புகளில் அது புகுதல் விலக்கப்படாது. இங்கே உடம்படு மெய்யென்ற சொற்றொடர் இலக்கணத்திலும் உண்மையியலிலும் எப்பொருளில் வழங்கப்படுகிறதென்பதையும் விளக்க வேண்டியதாகின்றது. உடம்படு மெய்யென்பது 'உடன்படு மெய்' என்பதோடொன்றாகி நிலைமொழியீற்றுயிரையும் வருமொழி முதலுயிரையும் உடன்படுத்தும் மெய்யாகுமென்று பொதுவாகப் பொருள் கூறுவர். இவ்விரண்டெழுத்துக்களும் மந்திர வகையில் கொள்ளும் பொருளைக் கருதுங்கால் உடம்படு மெய்யென்ற சொற்றொடரின் மற்றொரு பொருள் தோன்றுகின்றது. உடம்படு மெய்யென்பது உடம்பு—அடும்—மெய் எனப் பிரிந்துநின்று இலக்கண வகையில், மற்ற மெய்களை அழிக்கும் மெய் யென்றும், உண்மையியல் வகையில், பிறப்பறுக்கும் வடிவமென்றும் பொருள்படும்.

உயிர்கள் எடுக்கின்ற பல பிறப்புக்கள் அல்லது உடம்புகள் திரிமலகோசமென்றும், மாயையின் வடிவமென்றுங் கூறப்படுகின்றன. இங்ஙனமாயினும், தேவர்,

நரர், மிருகம், பட்சி, கீடம் என்ற பல பிறப்புக்களில் மக்களுருவமே எல்லாவற்றினும், வானோர் வடிவம் பெறுவதினும் சிறந்ததாகக் கருதப்படுகின்றது. தாயுமானார் பாடல்களில் பின்வருவது மேற்கூறியதற் குதாரணமாகும்.

" எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதா
னியாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினு லெப்பிறவி வாய்க்குமோ
ஏது வருமோ அறிகிலேன்
கண்ணகி நிலத்துநா னுள்ளபொழுதே யருட்
ககனவட் டத்தி னின்று
காலூன்றி நின்றுபொழி யானந்த முகிலொடு
கலந்து மதியவச முறவே
பண்ணுவது நன்மை......................"

மக்கட் பிறப்பு எல்லாவற்றினும் சிறந்ததாய் எண்ணப்படுவதற்குக் காரணம் தேவ வடிவம் நிலையற்ற இன்பத்தை நுகர்வதற்கே ஏற்ற ஒரு கருவி என்பதும், விலங்கு, பறவை, புழுவினுருவங்கள் கடவுளை யறிதலாகிய ஞானம் பெறாதவை என்பதுந்தான். மக்கள் வடிவந்தான் உள்ளிருக்கும் உயிர் வீடுபெறத் துணை செய்யும் வடிவமாம். உயிர்கள் தாங்குகின்ற வடிவங்கள் மொழிகளில் வழங்குகின்ற ஒற்றெழுத்துக்களை யொத்திருக்கின்றன. திரிமல கோசங்களில் மக்களுடம்பு சிறந்து விளங்குவதுபோல் மந்திரங்களில் வகர யகர மெய்கள் மற்ற மெய்களினின்றும் தனித்து நிற்கின்றன. உயிர் வீடுபெறக் கருதிக் கூறப்படும் மந்திரங்களில் இவ்விரண் டெழுத்துக்களும்—சிவாத்மாவைக் குறிக்கும். யகரமும் அதற்குத் துணையாய் நிற்கும் கடவுளருளைக் காட்டும் வகரமும்—தனிச் சிறப்புடையனவாய் மிளிர்கின்றன. ஈண்டு இவ்விரண்டெழுத்துக்களும் மொழியிலக்கணத்தில் உடம்படு மெய்யென்ற வகையில் சித்தொழி

லியற்றுகின்றனவோ, அதற்கிணையான தொழிலை மந்திரங்களிலும் இயற்றுகின்றன வென்பதைக் காட்டுவது அவசியமாகின்றது.

இறைவனதருளின் பெருமை 'திருவருட்பயன்' என்ற நூலில் பின்வருமாறு விளக்கப்பட்டுளது.

" அருளிற் பெரிய தகிலத்து வேண்டும்
பொருளிற் றலையிலது போல் "

ஒருவன் கருதிய பொருளினும் பெரிது உலகில் வேறில்லாததுபோல் உயிர்கட் கிறைவன தருளைக்காட்டிலும் பெரிது வேறில்லை.

யகரத்தின் பொருள் சீவாத்மாவென்பது மேற்குறித்த நூலின் மற்றொரு சூத்திரத்திற் கூறப்படுகின்றது.

„ விரியமனமே வியவ்வை மீளவிடா சித்தம்
பெரியவினை தீரப் பெறும் "

இதனுரை :—

" மகார நகாரமாகிய மலமுந் திரோதமும் மிகவும் இறுகப் புணர்ந்து யகாரமாகிய உயிர்களைத் திரும்பவிடா; அவ்வுயிர்கள் தம்பெரிய பிணியாகிய மலவிருள் தீருங்கால் சிகாரமாகிய சிவத்தினை யடையும்."

வகரத்தின் பொருள் இறைவனதருளென்பதைத் 'திருவருட்பய'னின் மற்றொரு செய்யுள் கூறுகின்றது.

" வாசி யருளியதை வாழ்விக்கு மற்றதுவே
யாசி லுருவமுமா மங்கு "

உரை :—

வகாரமாகிய அருள் சிகாரமாகிய சிவத்தினைக் காட்டி, யகாரமாகிய உயிரினை வீட்டின்பத்திலே இருத்தும். அன்றி

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூற்றொன்பது, இரண்டாயிரம் முதலிய எண்ணுப் பெயர்களுள. ஆங்கிலத்தில், ஒன், டூ, த்ரீ, ஃபோர், ஃபைவ், ஃசிக்ஃச், எய்ட், ட்வெண்டி, தௌஃசன்ட்ஃ, முதலியவற்றைப் பார்க்கின்றோம். ஹிந்துஸ்தானியில் ஏக், தோ, தீன், சார், பாஞ்ச், செ, சாத், ஆட், நௌ, தஃச் முதலிய எண்ணுப் பெயர்களுண்டு.

ஆங்கிலத்தில் ஒன் என்பது தவிர மற்றைய எண்ணுப் பெயர்கள் வடமொழியோடு தொடர்புடையவை.

| | |
|---|---|
| டூ = two—twice, twain, த்வே ; | |
| த்ரீ = three | த்ரீணி |
| ஃபோர் = Four | சத்வாரி (லத்தீன் மொழியிலுள்ள quater என்பதோடு ஒப்பிட இது விளங்கும்.) |
| ஃபைவ் = Five | பஞ்ச |
| ஃசிக்ஃச் = Six | ஷட் |
| ஃசெவன் = Seven | சப்த (லத்தீனில் ஏழு பக்கங்களுடைய ஒருருவத்திற்கு செப்டகன் என்று பெயர் வருதல் காண்க.) |
| எய்ட் = Eight | அஷ்ட |
| நைன் = Nine | நவ |
| டென் = Ten | தச |

ஹிந்துஸ்தானியிலுள்ள எண்ணுப் பெயர்கள் சிறிது மாறிய வடமொழிப் பெயர்களே என்பது விளங்கும்.

தோ = த்வே　　நௌ = நவ
தீன் = த்ரீணி　　தஸ் = தஸ
சார் = சத்வாரி
பாஞ்ச் = பஞ்ச
செ = ஷட்
சாத் = சப்த
ஆட் = அஷ்ட

ஆங்கிலத்திலும் ஹிந்துஸ்தானியிலும் எண்ணுப்பெயர்கள் முறையின்றி உயிரீறும் மெய்யீறும் பெறுகின்றன; தமிழிலோ எண்ணுப்பெயர்கள் உகரவிறுதி பெறுகின்றன. ஆயிரம் என்பதில் மாத்திரம் மகரவீற்றைப் பார்க்கின்றோம். உகரமும் மகரவொற்றும் நாம் நன்கறிந்த எழுத்துக்கள். பிரணவத்தின் முப்பகுதிகளாய அ, உ, ம் என்பவற்றில் இடையுங் கடையும் முறையே உகரமும் மகரவொற்றுமாம். இவற்றுள், அகரம் எங்கும் நிறைகின்ற உயிராகிய இறைவனையும், உகரம் தனித்தனி உயிர்களையும், மகரம் உயிரைப்பற்றி நிற்கும் மலத்தையுங் குறிக்குமென்று முன்னே கண்டோம். அகரத்தாற் குறிக்கப்படுகின்ற பதி அல்லது இறைவன், எண்ணிற் கடங்கானென்பது கூற வேண்டுவதில்லை. உகரத்தாற் குறிக்கப்படுகின்ற ஆன்மா அல்லது உயிர் மல நீங்கிய நிலையில் உருவுடையதன்றாதலின் அதுவும் எண்ணலளவைக்குட் படாது. மகரவொற்றால் விளக்கப்படும் மலங்களும் நுண்ணிய நிலையில் புலனுணர்வு கடந்தவையாதலின், எண்ணப் பெறா. பசு அல்லது சீவாத்மாவாகிய உகரம் பாசத்தாற் கட்டுண்டபொழுது உற்றுணரக்கூடிய வடிவமதற்குண்டு. ஆதலின், அஃது எண்ணற்கடங்கும். உகரமாகிய உயிர் திரிமலகோசமாகிய மெய்யெழுத்தில் புகும்பொழுது அஃது எண்ணலளவைக் குட்படும். இங்ஙனமாயின், ஒன்று என்பதற்கு ஓர் உகர

மென்றும், பத்து என்பதற்கு எட்டிரண்டு உகரங்க ளென்றும் பொருள் செய்யலாங்கொல்? இஃதுண்மையா யின், ஆயிரம் எனுஞ்சொல்லின் ஈற்றிலுள்ள மகரவொற் றின் பொருளைப் பின்வருந் திருமந்திரச் செய்யுள்களுட் காணலாம்.

*"அணுவு ளவனு மவனு ளணுவும்*
*கணுவற நிறை கலப்ப துணரார்*
*இணையி லீசனவ னெங்கு மாகி (த்)*
*தணிவற நின்ற சராசரந் தானே"*

*"அணுவி லணுவினை யாதிப் பிரானை*
*அணுவி லணுவினை யாயிரங் கூறிட்*
*டணுவி லணுவை யணுகவல் லார்கட்*
*கணுவி லணுவை யணுகலு மாமே"*

இவ்வாறாயின், தமிழ் எண் ணுப் பெயர்களில் அமைந்து கிடக்கு முண்மையைக் கீழ்க் கண்டவாறு நவிலலாங்கொல்?

*"பதிபசு பாச மெனுமுப் பொருள்களுள்*
*முதல திலக்கில விடையுங் கடையும்*
*புணர்வுழி யெண்ண லளவைக் கிணங்கலின்*
*எண்ணுப் பெயர்கள் எண்ணு முகரத்தையே"*

பெரியீர், யான் புனையுமாற்றல் கொண்டு (கற்பனு சக்தி) இவ்வாறு பேசுகின்றேனென நினைப்பீர்களாயின், பொறுத்திடுமாறு உங்களை வேண்டுகின்றேன். எடுத்துக் கொண்ட பொருளை நன்கறிவதற்கு இத்திறமை பெரிதும் வேண்டப்படுவதொன்றே. விந்தை மிக்க இம்மொழி யைக் கற்பதற்கு வழங்கப்படும் இத்திறம் வீண்போகாது.

தமிழ்மொழியி னமைப்பிற்கு அடிப்படையாய் நிற்கும் செவ்விய முறையை அதன் மெய்யெழுத்துக்களில் எளி தாய்க் காணலாம். இம்மொழியின் மெய்யெழுத்துக்கள் இம்மொழியின் சிறப்புக்களி லொன்றும். இவை பகுக்க

வொண்ணு எளிய ஒலிகள். ஆறெழுத்துக்கள் சேர்ந்து மூன்று பகுப்பினை யுடையனவாய் இவை விளங்குகின்றன. இவற்றிற்கு உடம்பு, மெய், உடல் (திரிமலகோசம்) என்று பெயர். மேற்கூறிய மூன்று பகுப்புகளும் முறையே வல்லினமெய், இடையினமெய், மெல்லினமெய் எனப் பெயர்பெறும். இப்பெயர்களே மொழியின் உண்மை இயலைத் தழுவிய அடிப்படையை விளக்குந் தகையவா யிருக்கின்றன. நமசிவய என்ற பஞ்சாட்சரத்தில் ந, ம, என்ற இரண்டு மெல்லின வெழுத்துக்கள் உள. இவ்விரண் டெழுத்துக்களால் குறிக்கப்படுவன த்ரோதமும்(மறைப்பு) மலமுமாம். எஞ்சி நிற்கும் சி, வ, ய என்ற மூன்றெழுத் துக்களில் வகர யகரங்கள் இடையினமெய்கள். இவை யிரண்டும் வீடளிக்கும் எழுத்துக்கள் என்று மதிக்கப்படு கின்றன. சிகரவெழுத்து மொழிவகையில் வல்லினமெய் யாயினும், மந்திரங்களில் இதை முக்கூறுடைய ஓரெழுத் தாகக் கூறவேண்டும். இதில், ஆய்தவெழுத்தென்றும், திரிநேத்ரவெழுத்தென்றும், சிவவெழுத்தென்றும் சொல் லப்படுவதாகிய ஃ முதலில் வரவேண்டும். எங்ஙனமெனின், ஃ—ச்—இ=சி. இங்ஙனம் கூறப்படுங்கால் இது வல்லின மாகாமை காண்க. ஆதலின், பஞ்சாட்சரத்தில் சிகரமும் ஓர் இடையின வெழுத்தாகின்றது. ஐந்தெழுத்துக்களில் மூன்றெழுத்துக்கள் இடையினத்தையும், இரண்டெழுத் துக்கள் மெல்லினத்தையுஞ் சேர்ந்தவை. அகராதியி லுள்ள சொற்களை நோக்குங்கால் இடையினத்தில் தொடங்கு கின்ற ஒரு சொல்லுக்கு, மெல்லினத்தில் தொடங்குகின்ற சொல் இரண்டும், வல்லினத்தில் தொடங்குகின்ற சொல் எட்டும் உளவென்பது வெளியாகின்றது. பொதுவான வற்றைப் பேசும் ஒரு தமிழ் நூலை எடுத்துக்கொண்டு அதி லுள்ள இடையின மெல்லின வல்லின வெழுத்துக்களை

எண்ணுவோமாயின், இடையின வெழுத்துக்கள் தொகையில் மிகச் சுருங்கியும், வல்லின வெழுத்துக்கள் நனி பெருகியு மிருக்கக் காணலாம். இது கொண்டு நாமறிவ தென்னையெனின், மகாமந்திரங்களில் எவ்வெழுத்துக்கள் பெருகித் தோன்றுகின்றனவோ, அவை பொது மொழியில் அருகித் தோன்றுகின்றன; மந்திரங்களில் அருகியுள்ளவை பொதுமொழியில் பெருகிக்கிடக்கின்றன. பொதுமொழியிலுங்கூடச் சிறப்பாக ஒரு பொருள் எடுத்து நுவலப்படுங்கால் அப்பொருளின் தன்மைக்கேற்ப மெல்லினம், இடையினம், வல்லினம் என்ற மாயா, காமிய, ஆணவ எழுத்துக்களின் தொகை முற்கூறிய முறைபிறழ வருகின்றன. ஒரு நூலின் ஒரு பகுதியில் வெளிப்படும் ஆணவ மலத்தினளவை அப்பகுதியிலுள்ள வல்லின மெய்களின் தொகையைக்கொண்டு கணக்கியல் வகையில் திருத்தமாகச் சொல்லி விடலாம்.

கம்பராமாயணத்தில் சடாயு உயிர்நீத்த படலத்தில் இராவணன் சடாயுவைப் பெருமிதத்துடன் நோக்கிக் கூறுஞ் செய்யுளை உதாரணமாக எடுத்துக் கொள்வோம்.

> "கேட்டா னிருதர்க் கிறைகேழ் கிளர்தன்
> வாட்டாரை நெருப்புக வாய் மடியா
> ஓட்டா யினிநீ யுரைசெய் குநரைக்
> காட்டாய் கடிதென் றுகனன் றுரையா"

இதில் வல்லினமெய் நூற்றிற் கைம்பத்து மூன்றும்; மெல்லின இடையின மெய்யிரண்டும் சேர்ந்து நூற்றுக்கு நாற்பத்தேழும் வந்தன.

கம்பராமாயணத்தில் வாலி வதைப்படலத்தில் சுக்கிரீவன் வாலியைப் போர்க் கழைக்குமிடத்தில் ஆணவம் முன்னினும் மிகுந்து வெளிப்படுவதால் வல்லின மெய்களின் தொகை மேலுமுயர்கின்றது.

"இடித்துரப் பிவந்துபோ ரெதிர்த்தியே லடர்ப்பனென்
றடித்தலங்கள் கொட்டிவாய் மடித்தடுத் தலங்கு தோள்
புடைத்து நின்றுளைத்த பூசல் புக்கதென் பயிக்கிடம்
துடிப்பவங் குறங்கு வாலிதிண் செவித்தொளைக்கணே"

ஈண்டு ஆணவ எழுத்துக்களாகிய வல்லினங்களின் தொகை நூற்றுக் கறுபத்துநாலு வரையிலேறி நிற்க, மற்றைய் இரண்டினங்களின் தொகை நூற்றுக்கு முப்பத்தாருகக் குறைந்து நிற்கின்றது.

கம்பராமாயணம், மாயா சனகப்படலத்தில் சீதையை இராவணன் தன் காமத்திற்கிணங்க வேண்டுகின்ற செய்யுளில் காமிய எழுத்துக்களாகிய மெல்லின மெய்களின் எண்ணிக்கை பெருக, ஆணவ, வல்லின மெய்யெழுத்துக்களின் எண்ணிக்கை குறைவதைப் பார்க்கலாம்.

"வஞ்சனே னெனக்கு நானே மாதரார் வடிவு கொண்ட
நஞ்சுதோ யமுத முண்பா னச்சினே நாளுந் தேய்ந்து
நெஞ்சுநே ரான தும்மை நினைப்புவிட் டாவி நீக்க
அஞ்சினே னடிய னேனும் மடைக்கல மமுதின் வந்தீர்"

இதில் காமிய மெல்லெழுத்துக்கள் நூற்றுக்கு நாற்பத்தேழு வீதமும், ஆணவ வல்லெழுத்துக்கள் முப்பத்தாறு வீதமும் இடையினம் பதினேழு வீதமும் வந்தமை காண்க.

இஃதிங்ஙனமாக, நுவலப்படும் பொருள் நுண்ணியதாய்த் தூயதாயிருக்குமாயின், வேண்டப்படுவது வீடாயின் யாதாயினுமொன்று கருதி அகங்குழைந் திறைஞ்சுவதாயின், வீடுபே றளிக்கும் எழுத்துக்களைத் தம்மகத்திற் கொண்ட இடையின வெழுத்துக்கள் தொகையிற் பெருகுவதற்கு ஓருதாரணமாயினுங் காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

"எழுவா யெவர்க்கு முதலாகி யீறே டிடையாகி
யெங்கு முளையாய்

வழுவா தவர்க்கும் வரமீய வல்லை யவரால்
வரங்கள் பெறுவாய்
தொழுவா யுணர்ச்சி தொடராத தன்மை யுருவாய்
மறைந்து துயரால்
அழுவா யொருத்த னுளைபோலு மாரில் வதிரேக
மாயை யறிவார்."

இராமன் மூர்ச்சையடைந்தபொழுது கருடன் இராமனை மன முருகிப்போற்றிய இச்செய்யுள் கம்பராமாயணம் நாக பாசப் படலத்தில் வருகின்றது. ஈண்டு, ஆணவ வெழுத்துக்கள் தமது இயற்கை வீதங் குன்றி, நூற்றுக்கு இருபத் தொன்பதாகவும், காமிய வெழுத்துக்கள் அதனினுங் குறுகிப் பதின்மூன்றாகவும், இடையினவெழுத்துக்கள் வியத்தகுவண்ணம் நூற்றுக்கு ஐம்பத்தொன்பதாகவுந் தோன்றுகின்றன.

மந்திர விதியின்படி இடையின வெழுத்துக்கள் ஆறில் ய, ர, வ என்ற மூன்றுமே வீடுதரும் திறமைவாய்ந்தன. மேலெடுத்துக் காட்டிய செய்யுள் சிதம்பரத்திலொரு குழந்தை யிறந்த காலை, மீண்டும் அஃதுயிர் பெற்றெழும் பொருட்டுக் கம்பன் பகர்ந்த இருபத்துநான்கு விருத்தங் களில் ஒன்றென்பர். இச்செய்யுளை மேலுங்கூர்ந்து நோக்கி, ஈண்டு நாம் காணும் இடையின வெழுத்துக் களுக்கும், யகர, ரகர, வகரங்களுக்குமுள்ள வீதப் பொருத்தமென்னவென் றாராய்வோமாயின், அது நூற் றுக்கு எழுபத்தொன்றாகின்றது. இவ்வெழுத்துக்களின் எண்ணிக்கையை விடுத்து, மாத்திரை வகையில் இவை என்ன வீதம் பெறுகின்றனவென்று பார்த்தால் நூற்றுக்கு எண்பதாகின்றது. பொதுவாக வழங்கப்படும் மொழியில் இடையின வெழுத்துக்கள் தோன்றும் வீதத்தை மாற்றி, வேண்டுமென்றே கம்பர் இத்தகைய செய்யுட்களில் அவற்

றின் தொகையைப்பெருக்கினுரென்று சொல்லவியலாதாயி னும், இச்செய்யுட்களில் நவிலப்பெறும் சுவைக்கும், பாம்பு கடித்துமாண்டபிள்ளைமீண்டதென்னுங் கதைக்கும், இடையின வெழுத்துக்களுக்கும் உண்டாகுந் தொடர்பு பெரிதும் வியத்தற்குரியதே. பெரியீர், பொதுவறிவின் வரம்பைக் கடந்து நிற்குமொரு கருத்தை யுங்களிற் புகுத்த யான் முயல்கின்றேனென்று நீங்கள் தவருக நினைத்தல்கூடும். அஃதென் நோக்க மன்றென்று திண்ணமாய்க் கூறுகின்றேன். யான் விளக்க முயல்வது, தமிழ்மொழியி னமைப்பில் மறைந்து கிடக்கும் ஒரு முறைமையால் தூண்டப்பெற்று, அம் மொழியை வழங்குகின்றவர்கள், மலக்கட்டினின்றும் உயிர் நீங்கவேண்டுமென்ற விருப்பத்தோடு தொடர்புடைய உணர்ச்சிகளை வெளியிடுங்கால் இடையின வெழுத்துக் களைப் பெரிதும் பயன் படுத்துகின்றுர்கள் என்பதாம். இங்ஙனம், மெய்யெழுத்துக்களின் ஒளியோடு ஒன்றி நிற்கும் உணர்ச்சி யொழுங்கு கொண்டு செய்யுட்களில் வெளிப்படும் சுவைகளை அளக்கப் புகுங்கால் ஒருவகை யுணர்ச்சி மற்ருரு ணர்ச்சியின் வடிவந் தாங்கி வருகின்றதோ வென்று ஆராய்தல் வேண்டும். எங்ஙனமெனின், ஓரடியவன் வீடுபேறு வேண்டித் தான் வழிபடுந் தெய்வத்தை இறைஞ்சுகின்ருன்; இது செய்யுங்கால் வீடுபேறடைவதற்குத் தனக்குரிமையுண் டென்றவன் உளத்தடிப்புடையவனுகின்ருன். ஈண்டு உரிமை யென்ற திட்பம் வருதலின், ஆணவமென்ற மலமுந் தோன்றுகின்றது. ஆதலின், இத்தகைய உணர்ச்சி வெளிப் படுதற் கேற்ப வல்லெழுத்துக்களே யாண்டு பெரிதும் வந் தேறும் என்பதறிக. மற்ருேரடியவன் தன்னை யொரு மங்கையாக நினைத்துத் தான் வழிபடு கடவுளைக் காதலனுய்க் கருதி வேண்டுகின்ருன். ஈண்டும் விடுதலையே பொருளெனினும், காதலென்னும் சுவை வெளிப்படுதலால் அவன்

வழங்கும் மொழியில் மெல்லெழுத்துக்கள் மிகும். இவ்வாறு பல்வேறு வகையில் சுவைகள் மொழியில் வெளிப்படுமாயி னும் முன்கூறிய எழுத்து முறை பிழைபடாதென்க.

பெரியவற்றிலும் சிறியவற்றிலும், யாண்டும், இம் மொழியில் ஒழுங்கும் முறையுமே காணக்கிடக்கின்றன. க், ம், ன் முதலிய மெய்கள் எழுத்தாய் ஒலிபெறுதற்கு ஓருயிரின் துணை வேண்டப்படுகின்றது. இங்ஙனம் வேண் டப்படும் உயிர் எல்லாவிடத்தும் இகரமே யாகின்றது, இக், இம், இய் என்பவற்றால் இஃதறியப்படும். முப்பாற் புள்ளி யாகிய ஆய்தவெழுத்தையு மியக்குதற்கோர் உயிர்வேண்டும். ஆனால், ஈண்டு இகரம் வருவதில்லை; அகரந் தோன்றும். ஆய்தத்தை, அஃகன்னா அல்லது அஃகேனா என்று சொல் கின்றோம். கூர்ந்து பார்க்குந் திறனுடைய எவரையும் ஈர்க்குந் தகையதாகிய இம்முறை, தமிழ் எழுத்துக்கள் மறையியல்பற்றி வகுக்கப்பட்டன வென்பதைக் காட்டும். உண்மையியலையொட்டித் தமிழ் எழுத்துக்கள் மூன்று வகைப்படும். இம்மூன்று வகைகளும் சிவ, சத்தி, மாயா அல்லது பதி, பசு, பாச எழுத்துக்களெனப் பெயர் பெறும். சிவ அல்லது பதி எழுத்தாவது, ஆய்தம் அல்லது தனிநிலை எனப்படும் ஃ; பசுவெழுத்துக்களாவன, உயிர் பன்னிரண் டும்; பதினெட்டு மெய்யும் பாசவெழுத்துக்களாம். இங்ஙன மிவற்றைக் கூறுசெய்வது பெருவகுப்பெனக் கொள்க. ஒவ் வொரு வகுப்பும் இங்ஙனமே முக்கூறு படும். எங்ஙன மெனின், பதிஎழுத்தாகிய ஆய்தம், பதியிற் பதி, பதியிற் பசு, பதியிற் பாசம் என முக்கூறாகும். இந்த முக்கூறும் ஆய்தத்தின் மூன்று புள்ளிகளாற் குறிக்கப்படும். மேற் புள்ளி பதியிற்பதி, வலப்பாற்புள்ளி பதியிற்பசு, இடப்பாற் புள்ளி பதியிற்பாசம். இங்ஙனம் வகைசெய்தலின் அமைதி

ஆய்தத்தின் மூன்று புள்ளிகளும் சிவபிரானின் மூன்று கண்களுக்கும் அறிகுறியாதல்கொண்டு தெளியப்படும்; முக்கண்களில் உயர்ந்து நடுவிலிருப்பது ஒளியையும்,வலப்பாலது ஆற்றலின் ஊற்ருகிய கதிரவனையும், இடப்பாலது மாயை அல்லது காமியத்திற்கு உறைவிடமாகிய நிலவையுங்காட்டும்.

இவ்வாறே பசு அல்லது சக்தி எழுத்துக்களாகிய பன்னிரண்டு உயிர்களும் பசுவிற் பதி, பசுவிற் பசு, பசுவிற் பாசம் என முக்கூருகும். இந்த உட்பிரிவில் வரும் மூன்று எழுத்துக்களில், அகரம் பசுவிற் பதி, உகரம் பசுவிற் பசு, இகரம் பசுவிற் பாசம். இதை யகத்திற்கொண்டு எழுத்துக்களை நோக்குவோமாயின், மெய் யெழுத்துக்களை இயக்குவதற்கு இகரவுயிரும், ஆய்தத்தைத் தொடங்குவதற்கு அகரவுயிரும் வேண்டப்படுங் காரணம் நமக்கு விளங்கும். மெய்யெழுத்துக்களெல்லாம் பெருவகுப்பில் மல அல்லது பாச வெழுத்துக்கள். இவைகளை இயக்குவதற் குயி ரொன்று வேண்டுமாயின், அதற்கியைந்த உயிர் இகரமே யாகும். எற்றிற்கெனின், உயிரெழுத்துக்களின் உட்பிரிவில் இகரம் பாசத்தோடு தொடர்புடையது. இதுபற்றி மெய் யெழுத்துக்கள் இக்கன்னு, இம்மன்னு, இய்யன்னு என் ருேசை பெறுகின்றன. இக்காரணத்தைக்கொண்டே பதி எழுத்தாகிய ஆய்தத்தின் முன், உயிரெழுத்துக்களிற் பதியைக் குறிக்கும் அகரம் வேண்டப்படுகின்றது. அஃகன்னு, அஃகேன்னு வென்பதும் இதனுலேயே. ஈண்டு நாம் காணும் ஒழுங்கைப் பின்வருமாறு தொகுத்துக் கூறல் சாலாது கொல்?

" மும்மல வெழுத்தாம் மூவாறு மெய்யையும்
தனித்தியக்கு முயிர் இகார மென்க
தனிநிலை தானே யியங்கா தமரில்
தனித்தியக்கு முயிர் ஆகார மென்க."

இதிலிருந்து, மொழியின் அமைப்பில் தோன்றும் வேறு சில ஒழுங்குகளைக் காணப்புகுவோம். தமிழில் அ, இ, உ என்ற மூன்று சுட்டெழுத்துக்க ளுளவென் றறிவோம். இவற்றுள் அகரச்சுட்டு ஆங்கிலச் சொல்லாகிய That என்பதன் பொருளது; இகரச்சுட்டு This என்பதன் பொருளது; உகரச் சுட்டு இவையிரண்டிற்கு மிடைப்பட்டது. இதன் பொருளைக் குறிக்க ஆங்கிலத்தில் தனிமொழி யொன்றுமில்லை. ஆங்கிலத்தில் That என்னுஞ் சொல் அகரவுயிர் பெற்று அகல விருக்கும் பொருளைச் சுட்டுவதும், This எனுஞ் சொல் இகரவுயிர்பெற்று அண்மையிலுள்ளதைச் சுட்டுவதும் கருதத் தக்கனவாம். (வடமொழியில் அயம், இயம் என்பவற்றை நோக்குக.) சுட்டெழுத்துக்கள் மூன்றுந் தமிழ்க்கே சிறப்பா யுரியன. இவை மூன்றும் உயிரெழுத்துக்களின் உட்பிரிவில் பதி, பசு, பாசத்தைக் குறிக்குமெழுத்துக்களாயின. இவற்றுள் இகரஉயிர் மலவெழுத்துக்களாகிய பதினெட்டு மெய்களையும் இயக்குதற்கு வேண்டப் படுகின்றது. ஓ என்ற பிரணவத்தில் மலவெழுத்துக்களைக் குறிப்பது மகர வொற்றாகும். ஆதலின், இகரத்தை நீக்கி மகரத்தை வைப்போமாயின், பதி, பசு, பாசத்திற் கறிகுறியாகும் பிரணவத்தின் மூன்று பகுதிகளாய அ, உ, ம் என்பவை தோன்றுகின்றன. இந்த மூன்று சுட்டுக்களின் பொருள் இவற்றால் குறிக்கப்படும் பதி, பசு, பாசத் தன்மைகளோடு ஒத்திருக்கின்றது. பதி என்பது கருத வொணாதது அணுகவொணாததுமாய் நின்று, அகரத்தாற் குறிக்கப் படுமாறே, சுட்டகரமும் சேய்மைப்பொருளைக் குறிக்கின்றது. பாசம், திரிமலகோசம் அல்லது உடம்பு அண்மையிலுள்ளதும், நானென்ற உணர்ச்சியொடு தவறாக ஒன்று படக் கூடியதும், இதுவென்று சுட்டப்படக் கூடியதுமாகிய தன்மைகளை யுடையது. இதற்கிசையவே உண்மையியலில்

பாசத்தைக் காட்டுகின்ற இகரம், மொழிவகையில் அண்மையி லுள்ளதைச் சுட்டும் எழுத்தாகின்றது. பசு அல்லது சீவாத்மா அல்லது உயிர், பதி அல்லது பரமாத்மா வைப்போல் அறியவொணு தொன்றுமன்று; பாசம் அல்லது உடம்பைப்போல் இதுவென்று சுட்டப்பட்டு எளிதில் உணரக் கூடியதுமன்று; ஆதலின், உயிர் பதியைப்போல் அவ்வளவு சேய்மையதுமன்று; உடம்பைப்போல் அத்துணை அண்மையதுமன்று. இதுபற்றி அது, இது என்ற சேய்மை யண்மை நிலைகளுக்கு இடைப்பட்டு நிற்பதாகிய உயிர் அல்லது சீவாத்மா உகரத்தால் குறிக்கப்பெறுவ தாயிற்று. தமிழ்ச் சுட்டெழுத்துக்களாகிய அகர இகர உகரங்களின் பொருளை மறைப்பு வகையில் கூறுகிறேனென்று நீங்கள் நினைக்கலாகாது. எனது நோக்கமதுவன்று. சுட்டெழுத்துக்களைச் சூழ்ந்த மறைப்பை நீக்கவே யான் முயல்கின்றேன். சுட்டெழுத்துக்களைப்பற்றித் தொல்காப்பியச் சூத்திரம் பின்வருமாறு:—" அ, இ, உ அம்மூன்றுஞ் சுட்டு" இதற் குரைவகுத்த இளம்பூரணனர், "குற்றெழுத்தெனப் பட்ட அம்மூன்றுஞ் சுட்டென்னுங் குறியவென்றவாறு" என்று கூறுகிருர். நச்சிஞர்க்கினியரும் இவ்வாறே உரை செய்து ஒரு குறிப்புஞ் சேர்க்கின்ருர். அஃதென்னவெனின், "இதுவும் ஆட்சியும் காரணமும் நோக்கியதொரு குறி, சுட்டி யறியப்படும் பொருளை யுணர்த்தலின்." அறிவையும் ஆட்சியையுங் குறிப்பதற்கோர் அடையாளமாகச் சுட்டென்னும் பெயர் வந்தது. ஏனெனின், அறிவதற்குரிய பொருள் களையே சுட்டென்பது குறிக்கின்றது. இளம்பூரணரும் நச்சிஞர்க்கினியரும் கூறியவற்றை ஈண்டெடுத்துக் காட்டிப் பின்னவர் கூறிய குறிப்பிற்கொரு விளக்கமுந் தந்ததெற்றிற் கெனின், சுட்டெழுத்தென்று சொல்லப்படுவனவற்றின் பெயர்க்காரணம், மறைத்தன்மையின்பாலதென்று இவ்விரு

வுரைகாரரும் நினைத்தனரென்று காட்டுதற்கே. சுட்டு என்னும் பெயர்க்குரிய மறைத்தன்மையையும் முதன்மையையும் இலக்கணத்திலன்றி வெளியிலுங் காணலாம். "பிறராற் பெருஞ்சுட்டு வேண்டுவான்" என்பது பொதுவழக்கில் மற்ருேரால் புகழப்பட விரும்புபவனைக் குறிக்கும். ஈண்டுச் சுட்டென்பது புகழ். மற்றும், பொதுவழக்கில் சுட்டுப் பொருளென்பது, வழிபடு மொருவன் தன்னுள்ளத்திலமைத்துக்கொள்ளும் கடவுளுருவத்தைக் காட்டும்; அக்கடவுள் வழிபடுவோனின் பக்குவத்திற் கிணங்கக் குருவடிவாய்க் கட்புலனுகவாயினும் உணர்ச்சிவாயிலாக வாயினுந் தோன்றுமென்பர். இங்ஙனமே, "சுட்டுவைக்க" என்ற தொடர், புலன்களை யடக்கிக்கொண்டு வணக்கத்திற்குரிய ஒரு கடவுள் வடிவத்தை யமைக்க, என்று பொருள்படும்.

இதுகாறும் சுட்டெழுத்துக்களைப்பற்றி யாம் கூறியவற்றைப் பின்வருமாறு விளக்கியுந் தொகுத்துங் கூறலாம்:—

"சுட்டத் தகுபொருள் மூலமுப் பொருளே
அவையுட் பதிதான் அகார மாகும்
உகாரம் பசுவாம் மகார மெய்ப்பாசமாம்
மகார மெய்யை யியக்கும் இகரத்துடன்
அ, இ, உ அம்மூன்றுஞ் சுட்டே."

தமிழ்மொழியின் அமைப்பிற் காணக்கிடக்கும் வியத்தகு முறையினை மற்ருேர் உதாரணத்தாற் காட்டுதும். எம்மொழியிலும் ஒற்றெழுத்தை முதலிலுடைய ஒரு சொல்லை உச்சரிப்பதிலும், தமிழொழிந்த பிற மொழிகளில் இத்தகைய சொற்கள் சிறந்தவற்றையும் இழிந்தவற்றையும் குறிப்பதற்குப் பெருவாரியாக வெடுத்தாளப்படுகின்றன. ஆங்கிலத்தில் Christ, Crime, Druid, Drunkard, Friar, Fret என்ற சொற்கள் ஒற்றெழுத்தை முதலிலுடையவாய்

சிறந்தவற்றையும் இழிந்தவற்றையுங் குறிக்கின்றன. வடமொழியில் ஸ்ரீ, ஸ்ரார்த்த, க்ருபா, க்ரூர, ப்ரார்த்தன, ப்ராயஸ்சித்த, ப்ரஹ்ம, ப்ரஷ்ட என்பவற்றைக் காண்கின்றோம். ஒற்றெழுத்தை முதலிலுடைய வொரு சொல்லை உச்சரிக்க முடியாதவர்களாய்த் தமிழரிருந்தார்கொல்? இல்லையெனின், "உயிர்மெய் யல்லன மொழிமுத லாகா" என்ற விலக்கொணு விதியை வகுக்க அவர்களைத் தூண்டியது யாது? இவ்விதியைத் தமிழர் தம் மொழிக்கேயன்றிப் பிறமொழிக்கு மேற்றுகின்றனர். பிற மொழிகளிலிருந்து ஒற்றை முதலிலுடைய ஒரு சொல்லைக் கடன்வாங்குங்கால், அச்சொல்லைத் தமிழ்மொழியில் சேர்ப்பதற்குமுன் கழுவாய் (பிராயச்சித்தம்) தேடுகின்றனர். இதன் பயனுகத் தமிழில் வந்தேறும் ஒற்றெழுத்தை முதலிலுடைய சொல்லின் தலையில் ஒருயிரெழுத் தேறுகின்றது. எங்ஙனமெனின், க்ருப என்ற வடமொழி தமிழில் வரவேண்டுமாயின், கிருப அல்லது கிருபை என்று உயிரெழுத்தைத் தலையிலேற்க வேண்டும். ம்ருக என்ற வடமொழி மிருக வென்று தமிழில்-வரவேண்டும். நம்மைச் சூழ்ந்துள்ள உயிர்த்திரளை நோக்குவோமாயின், செத்த உடம்பு ஒழுங்குபட்ட ஒரு தொகுதிக்கு முன்னிற்காதென்பது நமக்கு விளங்குகின்றது. தமிழிலக்கண நூலார் ஒற்றெழுத்துக்களைச் செத்த வுடம்பென்று கருதி அவற்றிற்கு உடலென்றும், இவற்றை யியக்கு மெழுத்துக்களை ஆவியென்று கருதி உயிரென்றும் பெயரிட்டனர். உயிர் வகையில் நாம் காண்கின்ற முறையே மொழியிலுமிருக்க வேண்டுமென்ற கருத்து அவர்களுக்கு இல்லா திருப்பின், "உயிர்மெய் யல்லன மொழிமுதலாகா" என்றவர்களிட்ட கட்டளைக்குக் காரணங் காணலரிது.

தமிழிலக்கணங்களில் முதன்மை பெற்றன வெல்லாம் பொருளிலக்கண மென்ற ஓரின்றியமையாப் பகுதியை யுடை

யனவாகத் திகழ்கின்றன வென்பதைப்பற்றி ஈண்டுக்கூறுதல் மிகையாகாது. பொருளிலக்கணமென்பது மக்கள் கருதுவ தற் குரியனவும், அடைய முயல்வதற் குரியனவு மாகியவற் றின் இலக்கணமாம். தமிழிலக்கணங்களில் இஃது ஒரு பகுதியா யமைந்தது, பிற மொழியினின்று தமிழை ஒரு தனி நிலைக் குயர்த்துகின்றது. மக்கள் கருதுவதற் குரியனவும் அடைய முயல்வதற் குரியனவு மாகியவற்றை இலக்கணத்தி லொரு பகுதியாக்கியது, வாழ்க்கையின் விதிகளை மொழியின் விதிகளோடு ஒன்றுபடுத்த வேண்டுமென்ற நோக்கம் தமி ழிலக்கண நூலார்க் கிருந்ததென்பதைத் தெற்றென விளக்கு கின்றது. இறையனாரகப் பொருளென்ற நூல் சங்ககாலத்தி லெழுதப்பட்ட பழைய நூலென்பது எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதை ஆக்கியோன் சிவனே என்று நூல்வரலாறு கூறுகின்றது. எங்ஙன மிந்நூலெழுந்த தென்பதைப்பற்றிச் சங்கப் புலவரும் அதனுரைகாரருமாகிய நக்கீரர் கூறுவதை ஈண்டெடுத்துரைப்போம். "அரசனும் புடைபடக் கவன்று 'என்னை? எழுத்துஞ் சொல்லும் யாப் பும் ஆராய்வது பொருளதிகாரத்தின் பொருட்டன்றே! பொருளதிகாரம் பெறேமேயெனின், இவை பெற்றும் பெற்றிலேம்' எனச் சொல்லாநிற்ப, மதுரை ஆலவாயின் அழனிறக்கடவுள் சிந்திப்பான்; 'என்ன பாவம்! அரசற்குக் கவற்சி பெரிதாயிற்று. அதுதானும் ஞானத்திடையதாக லான் யாமதனைத் தீர்க்கற்பாலம்' என்று இவ்வறுபது சூத்திரத்தையும் செய்து, மூன்று செப்பிதழகத் தெழுதிப் பீடத்தின் கீழிட்டான்."

நக்கீரரது உரை பிற்காலத்தி லெழுதிச் சேர்க்கப்பட்ட இடைச் செருகலுடையதென்று தோன்றுகின்றது. ஆயி னும் மேற்கூறப்பட்ட கதை இடைச்செருகலென்று நினைக்க

விடமில்லை. வரலாற்றாசிரியர்க்கு இக்கதை பயனிலா தொழியினும், பண்டைத் தமிழர்கள் சரியாகவாதல் தவறாக வாதல் வையக வாழ்க்கையின் விதிகளுக்கிணங்க மொழி யமைக்கப்பட வேண்டுமென்ற கொள்கையுடையரா யிருந் தனரென்பதை விளக்குவதற்கு இது மற்றோரெடுத்துக் காட்டா யிலங்குகின்றதன்றோ?

## இயற்கை வடிவங்களோடு ஓகரம் ஒத்திருத்தல்

இதுகாறும், எழுத்துக்களின் உருமாற்றமும் மொழியி னமைப்பும் எங்ஙனம் இந்துக்களின் மறைத்தன்மை வாய்ந்த உண்மையியலோடு ஒத்திருக்கின்றன என்பதை எடுத்துக் கூறினேன். எழுத்துக்களும், மொழியும், மறைப் பகுதியும், உண்மையியலுமாகிய வெல்லாம் மக்களால் தோற்றுவிக்கப் பட்டன வென்றே கருதப்படுகின்றன. இப் பொழுது, மக்களால் தோற்றுவிக்கப் பட்டனவென்று கருதப்படுகின்ற இவை, இயற்கையால் அல்லது கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட வடிவங்களோடு ஒத்திருப்பதைக் காட்டப்போகின்றேன். கல்வெட்டுக்களில் மாறாதிருப் பதும், மறைப்பகுதியின் புகலிடமுமாகிய ஓகரம், இயற்கை வடிவங்களோடு ஒத்திருப்பதை விளங்கவைப்பதே இப் பொழுது எனது நோக்கமாகும். மக்கள் உடம்பிலுள்ள கருவிகளை நுட்பமாய் நோக்குவோமாயின், அவற்றுளோர் ஒற்றுமையும் அமைதியு மிருக்கப் பார்க்கலாம். அடுத்த பக்கத்தில், மக்களுடம்பிலுள்ள சில தலையாய கருவிகளின் உருவங்களைக் காணலாம். இவை மக்களது உடற் கூற்றை நுண்ணிதின் ஆராய்ந்து வெளியிடும் நூல்களிலிருந்தெடுக் கப்பட்டன. (பக்கம் 55 இல்) முதலாவது படம் மக்களது மூளையை மேலிருந்து கீழே இருகூறாய் வகுத்துக் காட்டுவ தாகும். இவ்வடிவத்தின் வெளிப்பகுதியை இடப்புற



1

மூளையை இருகூறாக வகுத்துக் காட்டுவது



2 மூளையை நேர் குறுக்கே வகுத்துக் காட்டுவது



3 முதுகெலும்பினுள் மூளையைப் பாதியாய்த் தறித்துக் காட்டுவது



4

காதின் உட்பகுதியும் வெளிப்பகுதியும் சேர்த்துக் காட்டுவது




6

ஈரல், வயிறு குடல்களை ஒரு தொகுதியாய்க் காட்டுவது



5

குண்டிக் காயை இருபிளவாக்கிக் காட்டுவது

மிருந்து வலப்புறம் செல்கின்ற முறையில் உற்று நோக்குவோமாயின், எழில் நிறைந்த ஓர் ஒகர எழுத்துப் புலப்படுகின்றது. உள்ளிருக்கும் பகுதிகளிலும் ஒகரத்தின் தலையாய கூறுகள் வெளிப்படுகின்றன. இரண்டாவது படம், மூளையை நேர் குறுக்கே வகுத்துக் காட்டுகின்றது. இதிலும் ஒகர வடிவத்தை நாம் காணலாம். மூன்றாவது படம், முதுகெலும்பிலுள்ளிருக்கும் மூளையைப் பாதி யாய்த் தறித்துக் காண்பிக்கின்றது. ஈண்டும் ஒகரத்தின் வடிவம் கருதத்தகும் வகையில் வெளிப்படுவதை நோக்குக.

நான்காவது படம், மக்களுடைய காதின் உட்பகுதியும் வெளிப்பகுதியும் சேர்த்துக் காட்டப்பட்டிருக்கின்றன. இவ்வடிவத்தின் விளிம்புக்கோட்டை இடப்புறமிருந்து வலப்புறமாகத் தொடர்ந்து செல்வோமாயின், அழகிய ஒகரம் ஒன்று தோன்றுகின்றது.

ஐந்தாவது படம், மக்களது குண்டிக்காயை (சிறுநீர் முதலிய அழுக்குகளை வெளிப்படுத்துங் கருவி) அதன் வளைவு சிதையாமல் இரு பிளவாக்கி, ஒரு பிளவைக் காண்பிக் கின்றது. இஃது ஒகர வடிவத்தோடு ஒத்திருப்பது காணற் கெளிது. இதுபோன்றே, வெவ்வேறு தொழில்களியற்று மின்ற நுரையீரல், மண்ணீரல் முதலிய கருவிகள் ஒகரவடிவ முடையனவாயிருக்கின்றன. ஆறாவது செரிப்பு முக்கருவிக ளாகிய ஈரல், வயிறு, குடல்கள் ஆகியவற்றின் உருவங்கள் ஒரு தொகுதியாக வரையப்பட் டிருக்கின்றன. பொதுவாக இவை உண்டதைச் செரிக்கச் செய்யுந் தொழிலியற்றுவன வாயினும், ஒவ்வொன்றும் செரிப்பு நிகழ்வதில் வெவ்வேறு பணி செய்கிறது. ஈரலின் வடிவம் ஒருவாறு ஒகரத்தின் வடிவத்தை யொக்கும். வயிற்றின் வடிவம் தலைகீழாய் வரையப்படும் ஒகரத்தைப் போன்றது. குடல்கள் ஒழுங்கு

செய்யப்பட்டிருக்கும் முறை பெரிதும் கவனிக்கத்தக்கது. முப்பது அடிக்கு மேல் நீளமுள்ளதும், குழைந்த தன்மையதும், சிறுகுடல் பெருங்குடல் என இருபிரிவினதுமாகிய இப்பகுதி எவ்வாறேனும் குவிந்திருத்தல் கூடுமென்று நாம் நினைக்கலாம். ஆனால், அஃது உடலின் பிற்பகுதியில் ஒரு முறையைத் தழுவி நிறுவப்பட்டுள்ளது. ஓகரத்தின் சுழியை யொப்பச் சிறு குடல்கள் திரண்டு நடுவிலிருக்கின்றன. பெருங்குடலில் மேலே செல்கின்ற பகுதியும், குறுக்கே போகின்ற பகுதியும், கீழிறங்கும் பகுதியும் உள் வளைந்து எருவாய்க்குச் செல்லும் பகுதியும், ஓகர வடிவத்தை முற்றுப்பெறச் செய்கின்றன.

அறிவியல் ஆராய்ச்சியாளர், மக்களுடைய உறுப்புக்களுக்கும், பிற உயிர்களின் உறுப்புக்களுக்கு முள்ள ஒற்றுமையை ஐயமற நிறுவி யிருக்கின்றனர். மற்று மவர்கள், உயிர்வகைகளின் வடிவம் மக்கள் உருவத்திற்கிசைய நெருங்கி வர வர, அவ்வொற்றுமை வளர்கின்றதென்று காட்டியிருக்கின்றனர். ஆதலின், மக்களுட்பட எல்லாம் விலங்குகளுடைய உறுப்புக்களின் அடிப்படையான வடிவம் ஓகரத்தை யொத்த தென்பதைக் கண்டு கொள்க. இவ்வொற்றுமை, உயிர்கள் மக்க ளுருவத்தை யணுகி வர வர அதிகப்படுமென்பதையு மறிந்துகொள்க.

இவ்வொற்றுமை இத்துடன் முடிவதன்று. கருக்கொண்டது முதல் பிறக்கும் வரையில் ஒரு மகள் வயிற்றிற் குழவி பெறுகின்ற வளர்ச்சியை அடுத்த பக்கத்திற் காண்க. இவற்றில் ஓகர வடிவந்தோன்றிச் சிறிது சிறிதாய் முற்றுப் பெறுகின்ற வகை எவரது கருத்தையும் ஈர்க்குந் தகையது. காட்டியிருக்கின்ற ஏழு படங்களில், முதல் ஆறும் பார்க்கர் (Parker) என்பவர் எழுதியவற்றிலிருந்து எடுக்கப்பட்டன.


1
2
3
4
5
6
7

கருவளர வளர ஓகர வடிவந் தெற்றென விளங்குகின்றது. குழவியின் தலை ஓகரத்தின் சுழியோடுகூடிய வளைவிற்கும், தொப்பூழ்க் கொடியும் நஞ்சும் ஓகரத்தின் எஞ்சிய பகுதிகளுக்கும் ஒத்திருக்கின்றமை எளிதில் விளங்கும். முதற் படத்தில் தொப்பூழ்க் குழாய் இடம் முழுவதையும் அடைத்துக்கொண்டிருக்கிறது. இரண்டு மூன்று நான்காவது படங்களில் இது குறைந்துகொண்டே வருகிறது. ஐந்தாவது படத்தில் இஃதின்னுந் தெளிவாய்த் தோன்றுகின்றது. ஆறுவது படத்தில் தொப்பூழ்க் குழாயும் நஞ்சுமே மிகுந்து நிற்கின்றன.

இங்ஙனம், ஓகரவடிவத்தோடு கருப்பையில் வளர்கின்ற குழவி, பிறந்தபின் வளைவுநீங்கி நேராயிருப்பினும், நெடுநாள் வாழ்ந்து கிழத்தன்மை எய்திடின் மீண்டும் ஓகரவடிவம் அடையுந் தன்மையதாகின்றது. முதலில், வயது முதிர்ந்தவர்களுடைய உருவம் சிறிது வளைந்து, வரவர முதுகு கூனடைந்து, ஓகரவடிவந் தோன்றுவதை ஏழாவது படத்திற் பார்க்கலாம்.

கருவாராய்ச்சிக்காரர், மக்கள், விலங்கு முதலிய எல்லா உயிர்களின் கருக்களும் தொடக்கத்தில் ஒன்றுபோலவேயிருக்கின்றன என்ற உண்மையை நிலைநாட்டியிருக்கின்றனர். ஆதலின் அறிவியலார் எல்லா உயிர்களுக்குமுள்ள ஒற்றுமையைக் காட்டுவதற்கு எடுத்தாளும் காரணங்களெல்லாம் ஓகரத்தின் வடிவத்தோடு ஒன்றுபடுவதைக் காணுமாறு உங்களைக் கேட்டுக்கொள்ளுகிறேன்.

62 ஆம் பக்கத்தில் ஒரு பறவைக்கரு முட்டையில் வளர்ச்சிபெறும் வகை காட்டப்படுகின்றது. முதலாவது நிலையில் ஓகரவடிவம் அவ்வளவு தெளிவாகத் தோன்றாவிடினும், இரண்டாம், மூன்றும் நிலைகளில் ஐயமற அவ்வடிவம் விளங்குவதைக் காணலாம்.




III மீன்
III ஓந்தி
III ஆமை
III கோழிக் குஞ்சு


I
I
I
I
II
II
II
II
III
பன்றிக் குட்டி
III
பசுவின் கன்று
III
குழிமுயற் குட்டி
III
மக்கட் குழவி


1
2
3

60, 61 ஆம் பக்கங்களில் மீன், ஓந்தி, ஆமை, கோழிக் குஞ்சு, பன்றிக்குட்டி, பசுவின் கன்று, குழிமுயற் குட்டி, மக்கட்குழவி ஆகிய எட்டு முதிராக் கருக்களின் மூன்று வெவ்வேறு நிலைகளைக் காணலாம். இவற்றுள் அடியிலுள்ள மூன்றாவது நிலையில் உயிர் வகைகளின் வேற்றுமை நன்கு புலப்படுகின்றது. முதலாவது இரண்டாவது நிலைகளில் தோற்றத்தைக்கொண்டு இஃதிவ்விலங்கென்று காட்டுதல் கூடாது. முதல் நிலையில் எல்லாம் ஒன்றுபோலவே தோன்றுகின்றன. அவைகளில் நாம் காணும் ஓகரவடிவமுந் தெளிவாய்த் தெரிகின்றது. தொப்பூழ்க்கொடியைப் படத்திற் காட்டாததினால் ஓகரவடிவத்திற்கும் இவற்றிற்குமுள்ள ஒற்றுமை முற்றுப் பெறவில்லை.

ஈண்டு நாம் காணும் கருக்களின் கழுத்தில் தோன்றும் மடிப்புக்களின் தொகையும் பஞ்சாட்சரத்திலுள்ள எழுத்துக்களின் தொகையும் ஒன்றுபடுவது மற்றோர் ஒற்றுமையாகும். சாத்திரங்களுக் கிணங்க, உடல் ஆறு கூறுகளாக வகுக்கப்படுகின்றது. இவற்றிற்கு ஆதாரங்களென்று பெயர். இவ்வாறாதாரங்களும் ஓ நமசிவய என்ற மறை எழுத்துக்களால் ஆளப்படுகின்றன என்பது கொள்கை நாம் கண்ட கருக்களின் கழுத்திலுள்ள ஐந்து மடிப்புக் களும் ந ம சி வ ய என்ற ஐந்தெழுத்துக்களால் ஆளப்படுகின்ற உடற்பகுதிகளாக விரிகின்றமை நோக்கத்தக்கது.

ஆண், பெண் என்ற பால் வகுப்புடையனவாய்ப் புணர்ச்சியின் துணைகொண்டு கருத்தரிக்கும் உயிர்களில் ஓகரவடிவமே மூலவடிவம் என்று நாம் சொல்வதை விலங்கு நூலார் ஏற்றுக்கொள்வது கூடுமாயினும், புணர்ச்சியின்றி ஒன்று இரண்டாகப் பிரிவதனால் பெருகுகின்ற உயிர் வகைகளுக்கு இஃதொவ்வாதென்று அவர்கள் கூறினும்

கூறலாம். இத்தகைய உயிர்கள் பல விருக்கின்றன. இவற்றை ஒதுக்குதல் கூடாது.

ஒன்றிரண்டாகப் பிரிந்து பெருகுகின்ற உயிர்களிலும், ஒருவாறு ஓகரவடிவந் தோன்றுகின்றதென்பதைக் காட்டுதல் கூடும். ஆண்பெண் ஆகிய இருதன்மையையுந் தம்மிலுடைய பூக்கள் முதலியவற்றில் ஒன்றிற்கொன்று எதிராயமைந்து நிற்கும் இரு ஓகர வடிவங்களைக் காணலாம். விலைத்திணை யுயிர்களில் ஓகர வடிவந் தோன்றுவதைப் பற்றிய பல செய்திகளுள. காலமின்மை கருதி அவற்றை ஈண்டுக் கூற முடியவில்லை.

இதுகாறும் உயிருடையவை என்று நினைக்கப்படுகின்றவற்றையே கருதினோம். பிறவற்றையும் பற்றிக் கருதக் கடமைப்பட்டுள்ளோம். கோள்கள், (செவ்வாய், வியாழன், வெள்ளி முதலியவை) எங்ஙனந் தோன்றின வென்பது பற்றிப் பற்பல கருத்துக்க ளிருக்கின்றன. இவை ஒன்றிற்கொன்று வேறுபட்டிருப்பினும், இரண்டு செய்திகளில் ஒற்றுமை யுடையனவாயிருக்கின்றன:—முதலாவது, ஞாயிறும் அதைச் சுற்றி வருங் கோள்களுந் தொடங்கற்கண் ஒரு பெருந்திரளா யிருந்தன. இரண்டாவது, கோள்கள் இதனினின்றும் பிரிந்து பற்பல நூறுயிரமாண்டுகள் செல்லச் செல்லச் சுருங்கி, இறுகி, இப்பொழுதுள்ள வடிவங்களைப் பெற்றன. இங்ஙனமாயின் ஒவ்வொரு கோளும் பிரிந்து செல்லும்போது ஓகரத்தின் சுழியை யொத்த வடிவத்தோடு ஞாயிற்றை விட்டுப் பெயர்ந்திருக்க வேண்டுமென்று கணக்கியல் முறையில் நிறுவுதல் கூடும்.

இனி, பருப்பொருள்களிலுள்ள அணுக்களில், கோள்கள் ஞாயிற்றைச் சுற்றுவதுபோல் அணுக்கூறுகள் சுற்றுகின்றனவென்று அண்மையில் நிகழ்ந்த அறிவியலாராய்ச்சி

நமக்கு விளம்புகின்றது. இதிலும் ஒகர வடிவம் ஒருவாறுண்டாகுமென்று நாம் கருதலாம்.

சுருங்கச்சொல்லின், ஆண் பெண் என்ற பகுப்புத் தனித்தனியே விளங்குகின்ற உயிர்களெல்லாம் ஒகரவடிவத்திலே உருவம் பெறுகின்றன; ஆண் பெண் என்ற இரு பகுப்பின் தன்மையையும் தம்பாற்கொண்ட உயிர்களில் மேலொன்று கீழொன்று எதிரெதிராய் நிற்கும் இரண்டு ஒகர வடிவங்கள் தோன்றுகின்றன; உயிரற்றவை என்று கருதப்படுகின்றவற்றிலெல்லாம் ஒகரவடிவத்தின் ஒரு கூறு வெளிப்படுகின்றது.

ஈண்டு யானெடுத்துக்காட்டிய பல்வேறு ஒற்றுமைகளின் பயனாக, அறிவியல் வகையில் மட்டும் யாவற்றையும் உற்றுநோக்குந் தன்மையுடையாரின் உளத்தில் சில ஐயங்கள் எழுமென்றும், யான் கூறியவற்றின் உண்மையைத் தெளிவாக்குதற் பொருட்டுக் குறுக்குக் கேள்விகள் அத்தகையோர் பாலிருந்து வருமென்றும் நம்புகின்றேன். எனது பேரெண்ணமிதுவே. யான் ஆராய்ந்து காட்டியவற்றில் பிறர் தங்கள் கருத்தைப் புகுத்தத் தூண்டப்படுவாராயின், இத்துறையில் யான் உழைத்தமைக்குக் கைம்மாறும் களிப்பாற்றுதலும் அதுவேயாம்.

தமிழ்மொழியின் மறைத்தன்மையின் பாலதாகிய உண்மையியலைப்பற்றிய பல செய்திகளை எடுத்துக் கூறினேன். இவை நமது இலக்கிய முறைகளுக்கு ஒத்திருப்பினும் யாண்டும் வெளிப்படையாய்க் கூறப்படவில்லை. அற்றாதலின், மறைத்தன்மையின் பாலதாகிய உண்மையியலைத் தழுவித் தமிழ்மொழி வகுக்கப்பட்டதென்ற உண்மையைத் தமிழர் அறிந்திருந்தார்கொல்? எனும் இவ்வினையுடைய கேள்வியை நான் எதிர்பார்க்கலாமன்றோ?

இவ்வுண்மையைத் தமிழர் அறிந்திருந்தார் என்பதற்கு அழிக்கொணுச் சான்றுகள் உள. மறைப்பாலன, பெரிதுந் தூய்மை யுடையனவாகக் கருதப்பட்டமையின் நம் தமிழ்ப் பெரியார் அவற்றைத் தகுதியுடைய மாணவர் சிலருக்கு அருகிருத்தி யுரைக்கும் (உபதேசம்) வாயிலானன்றி வேறு வகையிற் கூருது போந்தார். இம்முறை இன்றும் இந்தி யர்க்குள் ஞண்டென்பதை யாவருமறிவர். ஒருவர் மற் ெருருவர்க்கு மொழிவாயிலான் மட்டும் வெளிப்படுத்தும் உண்மைகள், ஒரு காலத்தில் ஒரு குரவன் மாணவற்கு உண் மையை எடுத்துக்கூறுமுன் எதிர்பாராத வகையி லிறக்க நேரின், உலகிலில்லா தொழியும். இங்ஙனமிருக்க, தமிழ் மொழியில் மறைத்தன்மையின் பாலதாகிய உண்மை யியலைப்பற்றிய சான்றுகள் உலப்பிலாவகையில் காணக் கிடக்கின்றமைபற்றியும் அவற்றின் துணைகொண்டு அவ் வுண்மைகளைப் பெரும்பாலும் கைப்பற்ற முடியுமென்பது கருதியும் நாம் பெருமகிழ்வெய்தல் வேண்டும்.

அகரவெழுத்தைக் குறித்துத் தாயுமானவர் 'பொருள் வணக்கம்' என்னும் பகுதியிற் பின்வருமாறு கூறுகின்ருர்.

"அகரவுயி ரெழுத்தனைத்து மாகி வேரு
யமர்ந்ததென வகிலாண்ட மனைத்து மாகிப்
பகர்வனவெல் லாமாகி யல்ல தாகிப்
பரமாகிச் சொல்லரிய பான்மை யாகித்
துகளறுசங் கற்பவிகற் பங்க ளெல்லாம்
தோயாத வறிவாகிச் சுத்த மாகி
நிகரில்பசு பதியான பொருளை நாடி
நெட்டுயிர்த்துப் பேரன்பால் நினைதல் செய்வாம்"

ஈண்டுத் தாயுமானவர் யாவற்றினு முயர்ந்த பொருளை, அத னெல்லாத் தன்மையுடனும் அகர உயிருக்கொப்பிட்டு, அவ் வுயிர் ஏல்லாவெழுத்தையு மாக்கி, அவற்றினின்றும் வேறு

பட்டு நிற்குமென்று பகர்கின்றார். மற்றும், எந்நாட் கண்ணியில்,

" அவ்வுயிர்போ லெவ்வுயிரு மானபிரான் றன்னடிமை
எவ்வுயிரு மென்றுபணி யாம்செய்வ தெந்நாளோ "

என்றெழுதுகின்றார். பலருமறிந்த நூலாகிய சிவஞானசித்தியாரில், அகரம் சிவனுக்குவமையாக்கப்படுகின்றது:

" அக்கரங்க டோறுஞ் சென்றிடு மகரம்போல நின்றனன்
சிவனுஞ் சேர்ந்தே."

இதில் எல்லா உயிர்கட்குஞ் சிவனுக்கு முள்ள தொடர்பு அகரத்திற்கும் மற்றைய வெழுத்துக்களுக்கு முள்ள தொடர்பை யொக்குமென்பது விளம்பப்படுகின்றது.

திருவருட்பயனிலும் ஆண்டவனுக்கு அகரவுயிர் உவமையாகின்றது.

" அகர வுயிர்போ லறிவாகி யெங்கும்
நிகரிலிறை நிற்கு நிறைந்து."

ஈண்டும், தன்னொப்பிலா இறைவன் யாவற்றினும் புகுந்து நின்றும், தனிப்பட்டுயர்ந்தும் அகர உயிர் போல் நிற்பானென்பது கூறப்பட்டது.

திருவள்ளுவருந் தமது புகழ் செழுமிய குறளில் வாழ்த்துரைக்கும் முதற் செய்யுளில்

" அகர முதல வெழுத்தெல்லா மாதி
பகவன் முதற்றே யுலகு"

என்றார். ஈண்டுக் காட்டிய மேற்கோள்களைக் கவனிப்பின், தொன்மைத் திருவள்ளுவர் முதல், அண்மைத் தாயுமானவர் வரை நம் புலவர்களிற் சிறந்தோர் இறைவனுக்குரிய தன்மை யனைத்தையும் அகரத்திற் களித்தாரென்பது விளங்கும்.

மேற்காட்டிய மேற்கோள்களின் பொருளைக் கூறுங்கால், "எவ்வெழுத்தைக் கூட்டுவதாயினும் அதற்கு வாயை அங்காத்தல் வேண்டும்; அங்காத்தல் அகரத்தைப் பிறப்பிக்கும். இது பற்றியே அகரம் இறைவனுக் கொப்பிடப்படுகின்றது," என்று சொல்வதுண்டு. ஒலியிலக்கணத்தை ஊன்றிப்பார்த்தால் தமிழ் எழுத்துக்களில் ஐந்தில் மூன்று பங்கு கொண்ட மெய்யெழுத்துக்களெல்லாம் அகரவெழுத்து முழுமையையும் தாம் பிறப்பதற்கு வழங்க முடியாதென்பது தெரியும். இங்ஙனமாயின், அகரத்திற்கும் இறைவனுக்குமுள்ள பொருத்தம் பழுதுபடாதிருக்குமாறு அகரத்தை எடுத்தல், நலிதல், படுத்தல் என்ற முத்தொழிலுக்கேற்ப மூன்று பகுதியாய்ப் பிரிக்க வேண்டும். எடுத்தல், நலிதல், படுத்தல் என்பவை சிருட்டி, திதி, சங்காரமாம். இம்மூன்றும் முறையே அகரத்திலுள்ள பிரணவத்தின் முக்கூறுகளாய் அ, உ, ம் என்பவற்றால் குறிக்கப் பெறுகின்றன. இவற்றுள் மகரமெய்யை மாத்திர மெடுத்து ஒற்றெழுத்துக்கள் பிறப்பதற்கு வழங்குகின்றோம். அகரத்தை முதற்பொருளுக் குவமையாய்க் கூற, ஈண்டுக் குறிக்கப்பட்ட முக்கூறும் இன்றியமையாது வேண்டப்படுகின்றமையானும் இம் முக்கூறும் ஔதாராய்ச்சியி லிருந்து பெற்ற பல்வேறு முடிவுகளுக்கு நிலைக்களனுயுளவாதலாலும், மேலே யாம் கூறிய புலவர்கள் அகரத்தை யாம் காட்டியவாறு கருதினர்களென்பது ஒக்கும்.

சித்தாந்திகளி லொருவரென்பதைவிடச் சித்தர்களி லொருவரென்று கூறுவதற்குரிய திருமூலர் ஒகரம் பஞ்சாட்சரமாகும், ஒகரம் எல்லா வெழுத்துமாகும்; சுருங்கச் சொல்லின் ஒகரம் உலகமேயாகும் என்று பகர்கின்றார். பின்வருந் திருமந்திரச் செய்யுள்களால் இது விளங்கும்:—

"ஓமெனு மோங்காரத் துள்ளே யொருமொழி
ஓமெனு மோங்காரத் துள்ளே யுருவரு
ஓமெனு மோங்காரத் துள்ளே பலபேதம்
ஓமெனு மோங்கார மொண் முத்தி சித்தியே.

ஓங்காரத் துள்ளே யுதித்தவைம் பூதங்கள்
ஓங்காரத் துள்ளே யுதித்த சராசரம்
ஓங்காரா தீதத் துயிர்மூன்று முற்றன
ஓங்காரம் சிவ பரசிவ ரூபமே.

பழுத்தன வைந்தும் பழமறை யுள்ளே
விழித்தங் குறங்கும் வினையறிவா ரில்லை
எழுத்தறி வோமென் றுரைப்பர்க ளேதர்
எழுத்தை யழுத்து மெழுத்தறி யாரே.

அங்கமு மாகம வேதம தோதினும்
எங்கள் பிரானெழுத் தொன்றி லிருப்பது
சங்கைகெட் டவ்வெழுத் தொன்றையுஞ் சாதித்தால்
அங்கரை சேர்ந்த வருங்கல மாமே."

பதினுலு சித்தாந்த சாத்திரங்களும் இம்முறையே ஓகரம் எல்லாமாகுமென்று விளம்புகின்றன. திருவருட்பயனில் :

"இறைசத்தி பாச மெழின்மாயை யாவி
யுறநிற்கு மோங்காரத் துள்"

என வருவது காண்க.

மிக அண்மையில் வந்த தாயுமானவரும் இங்ஙனமே கருதுகின்றார் :

"நீங்கா துயிருக் குயிராகி நின்ற நினையறிந்தே
தூங்காமற் றூங்கினல் லாதே யெனக்குச் சுகமுமுண்டோ
வோங்கார மாமைந் தெழுத்தாற் புவனத்தை யுண்டுபண்ணிப்
பாங்காய் நடத்தும் பொருளே யகண்ட பரசிவமே"

ஆனால் இவை சங்ககாலத்திலும் அதற்குமுந்தியும் எழுதப் பட்ட நூல்களுடன் ஒப்ப நோக்கின் புதிய நூல்களென்றே

கருதப்படவேண்டும். சங்ககாலத்திலும் அதற்கு முன்னரும் எழுதப்பட்ட நூல்களுள் தமிழர்களின் கொள்கைகளைப் பற்றி விரிக்கும் நூல் ஒன்றேனும் தீயூழால் நமக்குக் கிட்டிலது. இதன் பயனாக முற்காலத்து எழுதப்பட்ட நூல்களுள் ஆங்காங்குத் தோன்றும் கொள்கைபற்றிய சிலகுறிப்புக்களை யொட்டியே நாம் ஆராய்ச்சி நிகழ்த்த வேண்டியதாயிருக்கிறது.

முருகனைப் புகழும் திருமுருகாற்றுப்படை என்ற நக்கீரரது நூல் சங்ககாலத்திலிருந்து நமக்குக் கிடைத்திருக்கின்றது. இதன் பழைமையை மறுப்பாரிலர். இந்நூலில் அகர ஓகரங்களின் உட்பொருள் விளக்கப்படுமென்று நாம் எதிர்பார்க்கலாகாது. ஆனால், இந்நூலோடு சேர்த்து அடியில் எழுதப்பட் டிருப்பவையும், நக்கீரர் செய்தவை என்று கருதப்படுபவையுமாகிய வெண்பாக்களொன்றில் சிவனுடைய ஐந்துமுகங்களும் முருகனுடைய ஆறுமுகங்களோடு ஒன்றாகக் கருதப்படுகின்றனவென்று தெரிகிறது.

" அஞ்சுமுகந் தோன்றில் ஆறுமுகம் தோன்றும்
வெஞ்சமரந் தோன்றில் வேல்தோன்றும்—நெஞ்சி
லொருகா னினைக்கி லிருகாலுந் தோன்றும்
முருகாவென் றோதுவார் முன் "

இதன் பொருளைப்பற்றிக் கருத்து வேறுபாடிருக்கலாம். ஆதலின், இதை விடுத்து நூலிலேயே யுள்ள ஒன்றைக் கவனிப்பாம். பின்வரு மிரண்டடிகளும் நூலிலுள்ளன இவை சங்க காலத்தில் தென்னிந்தியாவில் இறை வணக்கம் இந்நிலையிலிருந்த தென்பதைத் தெளிவாக எடுத்துக் காட்டுகின்றன.

" மந்திர விதியின் மரபுளி வழாஅ
அந்தணர் வேள்வியோர்க் கும்மே யொருமுகம் "

இங்கே மந்திர விதிகளிருந்தன வென்றும், அவை மரபிற் இயைந்திருந்தன வென்றும் அம்மரபு தழுவி அந்தணர் வேள்விக ளியற்றின ரென்றும் பார்க்கின்றோம்.

"நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும்"

இக்குறளில் மறைமொழி என்பது பிறரறியாமல் பேணப்படு மந்திரமாம்.

இவைகொண்டு மறைமொழி, வேள்வி முதலியவை அக்காலத்தி லிருந்தனவென்றும், பொது மக்கள் அறிவிற் கெட்டாவண்ணம் இவை பாதுகாக்கப்பட்டன வென்றும் நாமறியலாம். வேறு சங்க நூல்களிலும் இவைபோன்ற குறிப்புக்களை நாம் காட்டலாம். பழைமை ஆராய்ச்சியும் ஈண்டு நாம் கண்டவற்றை உறுதிப்படுத்துகின்றது. பல்யாக சாலை முதுகுடுமிப் பெருவழுதி என்றொரு பாண்டியன் கிறித்து பிறப்பதற்கு முன் முதல் நூற்றாண்டிலிருந்தா னென்று தெரிகின்றது. இவன் யாகங்கள் பலவியற்றி இப் பெயர் பெற்றானென்று காணக்கிடக்கின்றது.

கடைச் சங்கத்திற்கு முற்பட்டதென்று ஏற்றுக்கொள் ளப்படுந் தொல்காப்பியத்திலும் மறைப்பாலவாய குறிப்புக்க ளிருத்தலின் அந்நாளிலும் மறையோர் இந்நாளிலிருந்த வாறே ஆட்சிபெற்று விளங்கினரென்று நாம் உய்த்துணர் தல் கூடும். மரபியலில் பின்வருஞ் செய்யுளைக் காண்க:-

"நிலந்தீ நீர்வளி விசும்பொ டைந்துங்
கலந்த மயக்க முலக மாதலின்
இருதிணை யைம்பா லியனெறி வழாஅமைத்
திரிவில் சொல்லொடு தழாஅல் வேண்டும்"

இதில் பஞ்ச பூதங்களின் கூட்டம் மாயை என்று ஐயமறக் கூறியிருக்கின்றது. இஃது ஈண்டு விரிக்கப்பெற்ற மறைப் பாலதாகிய உண்மையியலுக் கொத்திருப்பதை யறிக.

எழுத்துக்களின் ஒலியைச் சொல்வதாகிய பிறப்பியலைத் தொல்காப்பியர் பின்வருஞ் சூத்திரங்கொண்டு முடிக்கின்றார்.

“ எல்லா வெழுத்தும் வெளிப்படக் கிளந்து
சொல்லிய பள்ளி யெழுதரு வளியிற்
பிறப்பொடு விடுவழி யுறழ்ச்சி வாரத்
தகத்தெழு வளியிசை யரிறப நாடி
யளபிற் கோட லந்தணர் மறைத்தே
யஃதிவ ணுவலா தெழுந்துபுறத் திசைக்கும்
மெய்தெரி வளியிசை யளவுநுவன் றிசினே ”

இவண் தொல்காப்பியர் தாம் கூறுகின்ற ஒலியியல்பு பொது மக்களால் எளிதி லுணரக்கூடிய ஒலிகளைப் பற்றியதென்றும், கடவுளைப்பற்றிக் கூறும் மறை (அந்தணர் மறை)யில் வயிற்றின் கீழ்ப்பகுதி (மூலாதாரம்)யிலிருந் தெழுகின்ற காற்றிேைசையை நாடிக் காணல் மரபாமென்றும் ஐயமறக் கூறுகின்றார்.

முன்னர்க் கண்டவாறு எழுத்துக்களின் எண், பெயர், உருவம், வகை முதலியவற்றைக் கூறும் பகுதிக்கு நூல் மரபு என்று தொல்காப்பியர் பெயரிடுகின்றார். இப்பகுதிக்கு இப் பெயரிட்டது குறித்து இளம்பூரணர், நச்சினார்க்கினியர் முதல் அரசஞ் சண்முகனார் வரையிலுள்ள எல்லா உரைகாரரும் தங்கள் கருத்துக்களை வெளியிட்டிருக்கின்றனர். அவற்றை யெல்லாம் ஈண்டுரைப்பிற் பெருகும். ஆயின், அவர் தங்கருத்துக்கள் ஒன்றிற்கொன்று பெரிதும் வேறுபடுவன வென்பதை நினைவில் வைக்கவேண்டும்.

‘ நூல் ’ என்பதன் பொருள்கள் பல:—

1. பஞ்சிலிருந்து நூற்கப்படும் நூல்
2. தச்சன் வழங்கும் அளவு நூல்

3. பார்ப்பனர் பூணூல்
4. மண நிகழும்போது அணியு நூல்
5. ஆராய்தல்
6. இலக்கியம்
7. அறிவியல்
8. ஞானப்பயிற்சி
9. வேதங்கள்

" அருணூ லு மாரணமு மல்லாது மைந்தின்
பொருணூல் தெரியப் புகும் "

இவண் அருணூலென்பது வேதமென்ற பொருளில் வந்தமை காண்க. மரபென்பது 1. பழைமை; 2. இயற்கை; 3. வழக்கம் என்ற முப்பொருளுடையது.

நூல் என்ற சொல்லாற் குறிக்கப்படுகின்ற பொருளைப் பற்றிய மரபு அல்லது வழக்கை, நூல்மரபு என்ற பகுதி விளம்புகின்றதென்பதில் ஐயமின்று. நூல் என்ற கிளவிக்கு நாம் கண்ட ஒன்பது பொருள்களுள் எப்பொருளின் மரபு கூறப்படுகின்றதென்பதுதான் கேள்வி. நாம் கண்ட ஒன்பது பொருள்களுள் முதற்கண்ணுள்ள ஐந்து பொருள்கள் மரபு என்ற கிளவியோடு பொருந்திப் பயன்படு பொருள் தரா. ஆறுவது, ஏழாவது பொருள்களாகிய இலக்கியம், அறிவியல் என்பவற்றோடு 'மரபு' பொருந்திப் பொருள் தருமாயினும், தொல்காப்பியத்தின் பிற பகுதிகளாகிய சொல் பொருள் முதலியவற்றிற்கும் இஃதொக்குமாதலால் எழுத்தைப்பற்றிக் கூறும் பகுதிக்கு மட்டில் நூல் மரபென்ற பெயர் வருதல் சாலாது. ஆதலின், எஞ்சிநிற்கின்ற எட்டாவது ஒன்பதாவது பொருள்களிலேயே நாமிதற்குக் காரணங் காட்டல் வேண்டும்.

ஒகர எழுத்தை இயற்கையில் தோன்றும் வடிவங்களோடு ஒற்றுமை செய்து காட்டினேன். ஒகரம் அகரமாவதையும், அகரம் ஒகரமாவதையும் விளக்கினேன். அகரத்திலிருந்து மூலமந்திரங்கள் பிறக்கும் முறையையுஞ் சொன்னேன். மற்றும், எழுத்துக்களின் வடிவிலிருந்து இந்தியர்களால் ஏற்றுக்கொள்ளப்படுகின்ற மறைப்பாலதாகிய உண்மையியல் பெறப்படுமாறு காட்டினேன். இதற்கு மேல் பிரணவ எழுத்துக்களாகிய அகர உகரங்களின் வடிவத்தைத் தென்னிந்தியர்களால் வழங்கப்படுந் தெய்வத்தின் உருவங்களோடு ஒற்றுமைப் படுத்தக் கூடுமாயின், 'நூல் மரபு' என்ற சொற்றொடரை 'வேத வழக்கு' என்று பொருள் செய்வது பொருந்துவதாகும். இதற்குச் சார்பாக எழுத்துக்களை மாற்றி யமைக்கு முறையில் நான்கு அகர அல்லது ஒகர வெழுத்துக்களிலிருந்து 'நூல் மரபு' என்ற சொற்றொடர் பிறப்பதை முன்னர் விளக்கி யிருக்கின்றேன். வேதங்கள் நான்கு ஒகர எழுத்துக்களிலிருந்து பிறந்தனவென்பது மரபு.

அரிசுவடி என்ற தமிழ் நெடுங்கணக்கின் பெயரும், நூல் மரபு போலவே எழுத்துக்களின் எண் பெயர் உருவம் முதலியவற்றைக் கூறுவதாகும். அரிசுவடி என்ற தொடரும் நான்கு அகர அல்லது ஒகர வெழுத்துக்களிலிருந்து வெளிப்படுவதை விளக்கியிருக்கின்றேன். தமிழிலுள்ள எல்லாச் சொற்களும் குறித்த ஒரு தொகையினவாகிய அகரங்களிலிருந்து பெறப்படுகின்ற பற்பல பகுதிகளையும், ஒன்றுங் குறையாமல் வழங்குந் தன்மை உடையனவல்லவாதலின், இத்தன்மை யுடைய ஈண்டு நாமெடுத்துக் கொண்ட சொற்களை மிகக் கருத்துடன் ஆராய்தல் வேண்டும். ஈண்டு நாமெடுத்துக்கொண்ட சொற்கள் இயல்

புப் புணர்ச்சியாக அரிசுவடி, நூல் மரபு என நின்றால் மாத்திரமே அவை நான்கு அகர வெழுத்துக்களினின்றும் பெறப்படும். அஃதன்றி அவை விகாரப் புணர்ச்சி எய்தி 'அரிச்சுவடி', 'நூன் மரபு' என நின்றால் அவ்வாறு பெறப்படா.

"நான்கு பிரணவங்களிலிருந்து நான்கு வேதங்களையுந் தோற்றுவித்தேன்" என்று பெருமை பேசிய பிரம்மனின் நான்கு தலைகளிலும் அவனைச் சிறையிடுங்கால் முருகன் குட்டினனென்று கூறும் புராணக்கதை 'அரிசுவடி', 'நூல் மரபு' என்பவற்றுடன் பொருத்த முடையதென்று நினைக்கக் கிடக்கின்றது. ஏனெனின் நூல் மரபும், அரிசுவடியுங் கூறுகின்ற எழுத்துக்களின் உருவம் முதலியவற்றி லிருந்து வேதத்திலும் அறிவியலிலு முள்ள உண்மைகள் பலவும் பெறப்படும். 'அரிசுவடி' என்பது அரியும் சுவடியும் ஆகிய இரு சொற்களாலாயது. அரிசுவடியில் முதற்கட்டோன்றும் 'அரி ஓம், நன்றாக, குருவாழ்க, குருவே துணை' என்ற சொற்களில் முதலிலிருக்கும் அரி என்ற சொல்லிலிருந்து; ஆத்திச்சூடி என்ற பெயர்க்கிணங்க அரிச்சுவடி என்ற பெயருண்டாயிற்றென்று சிலர் தவறாக முடிக்கின்றார்கள். அரி என்ற கிளவி தமிழிலுள்ள வேறெச்சொல்லைக் காட்டிலும் பெருகிய பொருளை யுடையது. அதனாற் குறிக்கப்படும் பல்வேறு பொருள்களுள் சிவன், விட்டுணு முதலிய தலையாய கடவுளர்களும், தலையாய பருப்பொருள்களும், இயற்கையாற்றுகின்ற வினைகளும் சிலவாம். இவைபற்றிய அறிவு பெரிதும் வேண்டற்பால தென்பது பற்றியும் தமிழ் எழுத்துக்கள் வாயிலாய் இவ்வறிவு கைவரப்பெறல் கூடுமென்பது பற்றியும், தமிழ் எழுத்துக்களின் தன்மை கூறும் நூலுக்கு 'அரிசுவடி' என்பது பெயராயிற்று. இதனால் தமிழ் எழுத்துக்களின் வடிவிலுந் தன்மையிலும் எல்லா

அறிவும் உண்டென்று ' அரிசுவடி ' என்ற தலைப்பு அறிவிப்பதுபோல் காண்கின்றது. இந்நூலின்கண் விநாயகர் வணக்கமாகக் கூறப்படும்,

> " அரிவரி இரகசியம் அறிந்து கூறவே
> கரிமுக னிருபதங் கருத்து ளிருத்துவாம் "

என்ற அடிகள் எழுத்துக்களின் வரியில் அல்லது வடிவில் இரகசியங்களிருக்கின்றனவென்று வெளிப்படையாய்க் கூறுகின்றன. இங்ஙனமாதலின் எழுத்துக்களில் மறைந்து கிடக்கும் பொருளை வெளிப்பட வெடுத்துரைக்கச் செய்யும் இம் முயற்சி புனைந்துரையா மெனல் பொருந்தாது. அரிசுவடியிலும் நூன்மரபிலும் கூறப்படுவனவாகிய எழுத்துக்கள் மறைப்பாலதாகிய உண்மையியலைக் குறித்து யான் விரிந்த ஆராய்ச்சிகள் நிகழ்த்தியுள்ளேன். அவற்றை வெளியிட இஃதமய மன்று.

எனது சொற்பொழிவி னிப்பகுதியை அடுத்த பக்கத்திலுள்ள படத்தைப்பற்றிக் கூறி முடிக்கின்றேன். இதைப் பார்த்தவுடன் இஃதொரு சாலப் பெரிய ஒகரம் என்று நீங்கள் சொல்வீர்களென்பது உறுதி. படத்தின் திண்ணிய வரிகளோடு நுண்ணிய வரிகளை ஊன்றி நோக்கினால் சிவனின் தட்சணாமூர்த்த வடிவந் தோன்றுகின்றது. ஒகரத்தின் வடிவம் பார்க்கின்றவர்களின் கண்ணைக் கவருமாறு இப்படம் வரையப்பட்டதாயினும், இக்கடவுளின் உருவம் மரபாக வரும் வடிவினின்றும் சிறிதும் வேறுபட்டதன்று. இக்காலத்து ஓவியவல்லா னொருவன் ஈண்டு வரையப்பெற்ற இவ்வுருவத்தைக் கண்டு "இஃதோவியத்திற்குப் பொருந்தாதில்லை," என்று இதைக் கடிவான். கைகால் முதலிய உறுப்புக்கள் இவ்வடிவத்தில் யாராலும் வைத்துக் கொண்டிருக்க முடியாத நிலையில் அமைந்துள்ளன. இம்முறையில்



தன்னுறுப்புக்களை வைத்துக்கொண் டொருவன் அமர்ந் திருக்க முயல்வானாயின், அவனுடைய கை கால்கள் உணர்ச்சியற்றுப்போம். இங்ஙனம் யான் பகர்வதால் இறைவன்பா லன்பில்லாத ஒருவன், இறைவனது நிலையில் அமர முயலுங்கால் அவன் துன்புறுகின்றானென்று யான்

கூறுகின்றேனென்று நினைக்கலாகாது. யான் மொழிவ தெல்லாம் இந்நிலையிலமர்வது கூடாதென்பதேதான். ஒருகால் உடலைப் பலவாறு வளைத்துக் காட்சி வழங்குங் குழுவினரைப் போல் ஒருவன் பன்முறை இந்நிலையி லிருந்து பயில்வானாயின் அது கூடும். ஒகரத்தின் கீழ்ப்பகுதி மேலே வரும்படி திருப்பி எழுதினால், அஃது அகரமாகு மென்பதை முன்னரே காட்டியுளேன். ஒகரத்தி னிந்தக் கீழ்ப்பகுதி சிவனது இடக்காலுக் கொப்பாவது. ஒகரத்தை அகர மாக்குவதற் கிணங்கச் சிவனது இடக்கால் செங்குத்தாய் மேலே தூக்கப்பட்டு நிற்குமாயின், அஃது ஊர்த்தவ நர்த் தன மூர்த்தமாகும்.

இந்த ஊர்த்தவ நர்த்தன மூர்த்தமென்பது தட்சண மூர்த்த நிலையிலும் மிக அரிய நிலையாகும். பொதுவாக மக்கள் அமரவும் நிற்கவுங்கூடிய நிலைக்கு முரணாய இவ்விரு வடிவங்களும், முறையே இயற்கை ஒடுங்கியிருத்தலையும், இயங்கி நிற்றலையும் சுட்டுவனவாகி ஒகர அகரங்களாற் குறிப் பிடப்பட்டு மக்கள் உணர்ந்து வணங்குமாறு கடவுளினுரு விற் கலந்து விளங்குகின்றன. ஈண்டுக் குழவி நிலையில் நாம் பார்க்கு மொன்று கருதத்தக்கது. கருப்பையிலுள்ள குழவி ஒகர அல்லது தட்சணமூர்த்த வடிவத்துடனிருக்க, பிறந்த பின் முதுகு தரையிற் பொருந்தப் படுத்திருக்கும் நிலையில் அது தன் காலை மேலே தூக்கி, ஊர்த்தவ நர்த்தன அல்லது அகர வடிவத்தோடு பெருவிரலை வாயில்வைத்து மெல்கின் றது.

தட்சணமூர்த்த அல்லது ஒகரவடிவத்தில், சிவம் அமைதி நிலைமையி லிருப்பதாகக் கருதப்படுகின்றது. இதற்கொப்ப மந்திரங்களில் அமைதி அல்லது விடுதலையை காடி ஒகரம் வழங்கப்படுகின்றது.

ஊர்த்தவ நர்த்தன அல்லது அகர வடிவத்தில் சிருட்டி, திதி, சங்காரம், துரோபவம், அனுக்கிரகம் என்ற ஐந்தொழி லாற்றுவதாகச் சிவம் கருதப்படுகின்றது.

படத்தில் நாம் காணும் ஒகரவடிதத்தோடு கூடிய தட்சணாமூர்த்தத்தில் கடவுள் வடிவின் தலைப்பகுதி விடப் படுகின்ற தென்பதைக் கவனிக்க வேண்டும். அஃதாவது, சிவத்தின் தலை ஒகரத்தி லடங்கவில்லை. ஈண்டு, நீங்கள் தமிழிலக்கணத்திற் கிசைய ஒகரம் புள்ளிபெற வேண்டு மென்பதை நினைவிற்குக் கொண்டு வருவீர்களாயின், அப் புள்ளி சிவத்தின் தலையைக் குறிப்பிடுவதாகு மென்பது கண்டு தமிழை வகுத்தவர்கள் ஒகரத்துக்குப் புள்ளிவைக்க வேண்டுமென்று கட்டளையிட்டதன் காரணத்தை யறிவீர் கள். மற்றும், புள்ளியின் வடிவம் கடவுளின் தலையி னுரு வத்தைக்கொண்டு தெளியப்படும். அப்புள்ளி மேலே விரிந்தும் அடியிற் குறுகியும் நீண்டிருக்க வேண்டும். மண்டையோட்டு ஆராய்ச்சியில் மேலே விரிந்துங் கீழே குறுகியு முள்ள வடிவங் கொண்ட தலையோடு குறித்த ஒரு வகைத் தன்மையுடைய மக்களுக் கறிகுறியாமென்று கூறப் படுகிறது. ஒருவேளை, சிவன் இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவனுவனோ என்று ஆராய்ச்சிக்காரர் கேட்கலாம். இதை யும் இதுபோன்ற பிற கேள்விகளையும் இன்னொருபொழுது ஆராய்ந்து விடையளிக்கலாமென்று நினைக்கின்றேன்.

கடவுளின் வலக்கை அபயாத்தமென்று சொல்லப்படு கின்றது. எழுத்துக்களை வகுக்கும் இரண்டாம் முறையில் உயிரெழுத்துக்களின் முதலாகிய அகரம் அபயாத்தத்தில் அடங்கு மென்பது காட்டலாம். இம்முறையில் ஔகாரம் வலத் தோளின் முடிவில் வரும். இதன்பிற்கு ஆய்த அல் லது திரிநேத்திர எழுத்தாகிய ஃ வருகின்றது. எழுத்து முறையில் இஃது உயிர்களுக்குப் பின்னும் மெய்களுக்கு

முன்னுமுளது. மெய்யெழுத்துக்கள் இடத் தோளில் தொடங்கி இடக் கையாகிய வாதாத்தத்தில் வகர ஒற்றில் முடிவுபெறுகின்றன.

மிகுந்து நிற்பனவாகிய ழ், ள், ற், ன், என்பவை கடவுளின் இடக் காலி லமைகின்றன. இடத் தொடையில் இடக் கையாலணைக்கப்பட்டு, கருமை நிறங்கொண்டு தீட்டப்பெற்ற பார்வதி அமர்ந்திருக்கின்ருள். மாயையைக் காட்டும் மெய்யெழுத்துக்க ளெல்லாம் இப்பகுதியிலேயே யுள.

இவைகொண்டு, யாண்டும் நாம் காணும் ஓகர வடிவத்தின் பற்பல பகுதிகளாற் குறிக்கப்படுகின்ற ஆற்றல்களை உய்த்துணர்தல் கூடும். மக்கள், விலங்கு முதலியவற்றினுடம்பிலுள்ள பற்பல கருவிகளியற்றுந் தொழில்களை ஓகர வடிவத்தில் வெவ்வேறு எழுத்துக்கள் பெறும் நிலைகளைக் கொண்டு ஆராயப் புகுந்தால் அதிலிருந்து நாம் காணும் உண்மைகள் அறிவியல் வகையில் மேல்நாட்டினர் நிகழ்த்திய ஆராய்ச்சிகளின் முடிபிற்கு வியத்தகு வண்ணம் ஒத்திருக்கின்றன. மேலும் இது கொண்டு அறிவியல் வகையில் செய்யப்படும் ஆராய்ச்சிக் கெட்டாத சில கருவிகளின் தொழிலையுஞ் சற்றுக் காணலாம்.

"தமிழ் எழுத்துக்களின் மறைத்தன்மை என்ற பொருள் பற்றி இதுகாறும் யான் கூறியவற்றோடு பொருத்தமுடைய பற்பல அறிவியற்பகுதிகளிற் கருத்துடையவருக்குச் சில கூறி இப்பொழுதைக்கு இச்சொற்பொழிவை முடிக்கிறேன்."

எனது ஆராய்ச்சியில் முன்னணியிலுள்ளவற்றை மேற் போந்தவாறு எடுத்துரைத்தபின், இதிற கருத்துடையோர்க்குச் சில சொல்ல வேண்டியது எனது கடமையாகின்றது. மறையில் நம்பிக்கை யுடையார்க்கு யான் தெரிவிக்க வேண்

டியதென்ன வெனின், ஈண்டு யான் காட்டிய உண்மை, 'கடவுளிடமிருந்து யான் பெற்றதொன்று,' என்று சொல்ல எத்தகை உரிமையு மெனக்கில்லை. மற்றும், யான் கூறி யவை வேதாந்தம், சித்தாந்தம், விசிட்டாத்வைதம், (அறியாவந்தம்—கடவுளைப் பற்றி நாமொன்றும் அறிய லாகாது என்ற கொள்கை) என்ற கொள்கைகளுள் ஒன்றை அரண்செய்ய, அல்லது பரப்ப எழுந்தவையல்ல. எனது நோக்கமெல்லாம், தமிழ்மொழியின் அமைப்பிலும் இலக் கணத்திலும், வரையறுக்கப்பட்ட அல்லது தெளிவாக விளங்குகின்ற ஓர் உண்மையியல் உண்டென்பதை நிறுவு வதற்குப் போதிய அடிப்படையான, அழிவில்லாத சான்றுக ளுண்டென்பதைக் காட்டுவதுதான். இவ்வுண்மை இய லைக் கண்டுபிடிக்க நமது பழைய இலக்கணமாகிய தொல் காப்பியத்தை ஆராய்ச்சி முறையில் கற்பது பயன்படும். இவ்வாறு கூறுவது புதிதன்று. வடமொழியாளரும் தம் இலக்கணங்களைப் பற்றி இக்கருத்தை வெளியிட்டிருக்கின்ற னர். இதற்கோர் எடுத்துக்காட்டுச் சாலும். சாந்தோக்கிய உபநிடதத்தில் சநத்குமாரருக்கு நாரதர் பின்வருமாறு விளம் புகின்றார். "எனக்கு இருக்கு வேதந்தெரியும்; யசுர்வேத மும், சாமவேதமும், நான்காவதாகிய அதர்வணமும் எனக் குத் தெரியும்; ஐந்தாவதாகிய இதிகாச புராணங்கள், வேத வேதமாகிய இலக்கணம்; பித்ரியா, ரசி—இவை எனக்குத் தெரியும்."

எனது ஆராய்ச்சிக் கெட்டிய அளவில் தமிழ்மொழி யின்கண் அமைந்த உண்மை இயல், கபிலரின் சாங்கியம், பதஞ்சலியின் யோகம் உள்ளிட்ட இந்துக்களின் ஆறு சாத் திரங்களையுந் தன்னகத்தே யடக்கி, அவற்றின் நிலைகளை யும் ஒற்றுமையையும் நன்கெடுத்துக் காட்டுகிறது. எனது இம்முடிபு குற்றமுடையதா யிருக்கலாம். இதுபற்றி யான்

எடுத்துக்கொண்ட ஆராய்ச்சியின் பாலுள்ள ஆவல் குன்ற வேண்டியதில்லை. தமிழ்மொழியிலமைந்த உண்மையியல், இசுலாம், சொரோத்தர் கொள்கை (பழைய பாரசீகமதம்), கிறித்தவம் ஆகிய எக்கொள்கையினைத் தழுவியதாயினு மாக; அஃது இத்தன்மையதென்று கண்டுபிடிப்பது உளத்தைப் பிணிக்குமொரு முயற்சியாகும். இவ்வாராய்ச்சி வரலாற்று நூலார்க்கும் பழமையாராய்ச்சியாளர்க்கும் பெரிதும் பயன்படுவதொன்றாகும். ஏனெனின் இதுகாறும் அவர்களறியாத ஒரு பழைய உண்மை இதனால் வெளிப்படும். யான் சொன்னவற்றில் தமிழ் உண்மையியலுக்கும் பிறவற்றிற்கு முள்ள ஒற்றுமையைக் காட்டுவதற்கு எக்கொள்கையிலிருந்தாவது ஓர் எடுத்துக்காட்டைக்கூறியிருப்பின் அதுபற்றி அக்கொள்கையின் பல பகுதிகளும் தமிழ் உண்மையியலுக் கொத்திருக்குமென்று கருதுவது பொருந்தாது. எடுத்துக்காட்டாகக் கூறிய ஒன்றில் மாத்திரமே ஒற்றுமையுண்டென்று கொள்க. அவ்வக் கொள்கையைத் தழுவியவர்கள் தமிழின்பாலமைந்த உண்மையியல் தங்களுக்குரியதோ அன்றோ வென்று ஆராய்ந்தறிவதிற் கருத்துடையராதல் வேண்டும்.

தமிழின்பாலுந் தமிழர்பாலும் மெய்யன்புடையவர்க்கு, இவ்வாராய்ச்சி தலைசிறந்ததாக வேண்டும். வட இந்திய வரலாற்றுப் புலவராகிய தத்தர் (Dutt) என்பவர் 3000 ஆண்டுகளுக்கு முன் சிந்துநதிப் பள்ளத்தாக்கிற் குடிபுகுந்த ஒரு சிறு ஆரியக் கூட்டத்தினரைப் பற்றியும், இக்காலத்திலுள்ள சாதி பாகுபாடின்றி, பெருமிதத்தை அவர்கள் வளர்க்கும் வழக்கமுள்ளவர்களாயிருந்ததைப் பற்றியும், அவர்கள் பிறகு கங்கை நதி பாய்கின்ற நாட்டிற் புகுந்து அங்குள்ள பழைய குடிகளை ஆரியராக்கினமை பற்றியும், இறுதியில் தென்னிந்திய மக்களை ஆரியப்படுத்தினமை

பற்றியும் பேசுகின்றார். தென்னிந்தியாவில் ஆரியர் புகுந்த ஞான்று சாதிகளை வெவ்வேறாகப் பிரிக்கின்ற இருப்புச் சுவர்கள் இருக்கவில்லை என்பதும், ஒவ்வொரு மகனுடைய அறிவொழுக்கங்களே அவன் இன்ன வகுப்பைச் சேர்ந்தவனென்று துணியக் காரணமாயிருந்தன வென்பதும், திராவிடர்கள் தங்களுக்கே யுரிய ஒரு நாகரிகத்தை யுடையராயிருந்தன ரென்பதும் தத்தருடைய முடிபு. இங்ஙனம் ஆரியம் பரவியதைப் பற்றி, தத்தர் கூறுவதுண்மையாயிருப்பினும், தென்னிந்தியாவில் ஆரியக்குருதியுந் தன்மையுமுடையவர்கள் மிகமிகச் சிலரே என்று சொல்லவேண்டும். இக்காலத்தில் தென்னிந்தியாவிலுள்ள பற்பல வகுப்பினரின் மண்டையோட்டு வடிவத்தை ஆராய்ந்து பார்த்தால் இவ்வுண்மை வெளிப்படும். நானொரு பிராமணனல்லாதானுகையால் இதுபற்றி யான் கூறுவதில் எவ்வகை ஐயப்பாடும் எழாமலிருக்க வேண்டுமென்று விரும்புகின்றேன். என் நண்பர்களுள் சிறந்தவர்களுந் தவறாது நின்றவர்களும் பிராமணர்கள்தாம். அவர்களை நான் பெரிதும் போற்றுகின்றேன். இக்காலத்துப் பிராமணர்களின் மூதாதையர் ஆரியர் இங்கு வந்த பொழுது, தென்னிந்தியருள் கல்வியொழுக்கங்களிற் சிறந்தவராய் விளங்கியிருத்தல் வேண்டும். இதனாலிவர்கள் பொதுமக்களால் பெரிதும் போற்றப்பட்ட ஒரு தனி வகுப்பினராயினர். தமிழன்னையின் சிறந்த மக்களாகிய இவர்கள் அவ் வன்னையின்பால் தோன்றிய பிற மக்களைத் தம்முடையவ ரென்று ஏற்றுக்கொண்டு அவர்களை உயர்த்தக் கடமைப் பட்டவரல்லரோ? உண்மையாய் இவர்களுக்குத் தாய்நாட்டில் அன்புண்டாயின் இது செய்யாரோ? பெரும்பாலான பிராமணர் பிறத தமிழருடன் தமக்கு உறவில்லை என்று சொல்லும் பான்மையுடையவர்களும், தமிழன்னையையே ஏற்றுக் கொள்ளாதவர்களும், உண்மை

யில்லாத கலப்பற்ற ஆரியப் பிறப்புத் தமக்குண்டென்று கருதுகின்றவர்களு மாயிருக்கின்றார்கள். ஆரியன் மாத்திரந் தான் துறக்கத்திலிருந்து வந்தவன் போலும்! மேலை நாட்டு ஆராய்ச்சியாளரெல்லாம் ஆரியர்கள் முதன் முதல் தோன்றியவிடம் பாபிலன் அல்லது (Babylon) பால்டிக் கடற் கரையருகேயுள்ள ஒருநாடு என்று சொல்ல ஆர்வமுடையவர் களாயிருக்கிறார்க ளென்பது குறித்துத் தத்தர் தாமே சிறிது வருந்திக் கூறுகின்றார். தென்னிந்தியாவிலுள்ள வரலாற் றாசிரியர், எழுத்து, கோவில், கட்டிடம் முதலிய கொண்டு, பழைமை ஆராய்வோர் யாவரும் பிராமணர்களே. திறமை பொருந்திய இவர்களது ஆராய்ச்சி குறித்து நாம் பெருமை யடைய வேண்டும். ஆயினும், இவர்கள் பெரும்பாலும் தங்களைத் தமிழரல்லாத ஆரியரென்று கொள்ளும் மனப் பான்மை யுடையரா யிருப்பதுமன்றித் தமிழும் தமிழரும் வடமொழியிலிருந்தே எல்லாவற்றையும் பெற்றனரென் பதை நிறுவவேண்டாஎன்று உண்மையாகக் கருதுகின்ற னர். இவர்களிலொருவர் தாமெழுதிய நூலொன்றில் (Tamil Studies) ஒவ்வொரு பக்கத்திலும் அதிகாரத்திலும் தென் னிந்தியாவிலுள்ளவர்களில் பிராமணர்களுக்கு மாத்திரம் ஆரியப் பிறப்புண்டென்பதைத் தெளிவாக நிலைநிறுத்த முயல்கின்றார். இப்பெற்றியராதலின் இவர், தமிழர் தமக்கே யுரியதென்று கூறக்கூடிய பெருமை வாய்ந்த தொன்றுமில்லை என்று கூசாமற் பேசுகின்றார். தமிழர் பெற்றவற்றுள் இழிந்தவையெல்லாம் அவர்களது முன்னோரிடமிருந்து வந்தவை. சிறந்தவெல்லாம் வட மொழியிலிருந்து பெற்றனவே என்பதிவர் கொள்கை. டாக்டர் கால்ட்வெல் தாமெழுதிய 'திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம்' என்ற நூலில் தமிழரைப் புகழ்ந்து "ஒழுக்கம் பற்றிச் சுருங்கக் கூறும் வகையில், தமிழ் வடமொழியை

வென்றது எனப் பெரும்பாலோர் நினைக்கின்றனர்," என்று கூறியுள்ளார். இதற்கு விடையிறுக்கப்புகுந்த பிராமண நூலாசிரியர் "வாழ்க்கையில் ஒழுக வேண்டிய முறையைப் பற்றி எடுத்துரைக்குந் தமிழ் நூல்கள் தொகையில் பெருகி யிருப்பதே பண்டைத் தமிழர்கள் ஒழுக்கத்திற் குறைந்தவர் கள் என்பதற்குச் சான்றாகும்," என்றெழுதுகின்றார். இதை அவர் விளக்கும் வகையைப் பார்ப்போம்.

திராவிடனுடைய பல் ஊன் தின்று தேய்ந்து போயிற் றென்பதைக் காட்டப் பொருநராற்றுப்படையில்,

" கொல்லை யுழுகொழு வேய்ப்பப் பல்லே
யெல்லையு மிரவு மூன்றின்று மழுங்கி "

என்று வரும் அடிகளை எடுத்துக்கூறி, இத்தகைய வாழ்க்கை யுடையார்க்கே,

" அருளல்ல தியாதெனிற் கொல்லாமை கோறல்
பொருளல்ல தவ்வூன் றினல் "

என்ற அறிவுரை வேண்டியதா யிருந்ததென்று பகர்கின்றார். இங்ஙன மிவர் கூறுவதால் திருவள்ளுவரது பெரிய நூலின் மாட்சி குன்றி விடவில்லை. ஆனால், தமிழர்க்குள் இவ்வகுப் பைச் சேர்ந்தவரென்று கூறலாகாத (பொருநர்) ஒருவர், ஊன் உண்பதுபற்றிக் கூறியதை எல்லார்க்கும் பொது வெனக்கொண்டு தமிழரனைவோரையு மிவர் தாக்குகின்றார். இவர் செம்மை கடைப்பிடித்தாராயின் மேற்கூறிய வற்றோடு,

" அவிசொரிந் தாயிரம் வேட்டலி னொன்றன்
உயிர்செகுத் துண்ணாமை நன்று "

என்ற குறளையுங் காட்டி, மேல் வகுப்பினராகிய பிராமணர் கள் வேதத்திற்கூறிய யாகங்கள் இயற்றுவதன் பெயரால் ஆயிரக் கணக்கான விலங்குகளின் இறைச்சியைத் தின்ற

தைக் கண்டிப்பதன் பொருட்டு, தமிழருள் தாழ்ந்த வகுப்பைச் சேர்ந்த ஒருவர் குறளி லிவ்வாறு கூறவேண்டியதாயிற்றென்பதையும் விளக்கியிருக்க வேண்டும். இவர் தம்மைத் தமிழரென்று கூறின், தமிழைத் தமதன்னையாக ஏற்றுக் கொண்டிருப்பின் மேற் போந்தவாறு இவர் மொழிந்தது தங் குற்றத்தைத் தாமே யுணர்ந்ததாகும். அக்குற்றமும் ஒரு தவறுன கருத்தாற் பிறந்ததாகும்.

அறிவுத்துறையிலேயே எல்லாவற்றையும் ஆராய விரும்புவோர், முற்காலத்தின் தன்மை இக்காலத்தில் நாம் காண்பதைக் கண்டு துணியப்படவேண்டும்; அறியப்படாததை அறியப்பட்டதன் துணைகொண்டு முடிவு கட்ட வேண்டும் என்ற கொள்கையைத் தழுவியவர்கள். இரத்தக் கலப்பால் ஆரியத் தன்மையைத் தென்னுட்டினர் பெற்றனர் என்பதுண்மையாயின், அஃதெங்ஙனம் நிகழ்ந்திருக்க வேண்டுமென்பதை இக்காலத்தில் நாம் காணக்கூடிய நிகழ்ச்சியின் துணைகொண்டுதான் நாமறியலாம். இந்தியர்களுள் மிகத் தாழ்ந்தவர்களே இந்த வகையில் தம்மை உயர்த்திக்கொள்ள உடன்படுகிருர்கள். இதன் பயனுக இக்காலத்தில் ஆரிய, இந்திய அல்லது யூரேடிய (Urasia)மக்கள் தோன்றியுளார். அருவருக்கத் தகுந்ததென்பது பற்றியும், வரலாற்ருேடு இசையாதென்பது பற்றியும், இரத்தக் கலப்பால் ஆரியர் தென்னுட்டில் பரவினுரென்பதை நாம் நீக்கி, கல்வி யொழுக்கங்களால் ஆரியம் பரவிற்றென்று கோடலே நலம். இதனுல் பிராமணர் பிராமணரல்லாதாரென்ற இரு வகுப்பினரின் தூய்மையும் போற்றப்படும். ஆரியர் மத்திய ஆசியாவிலிருந்து முதன் முதல் சிந்து நதிக் கரையிலும், பிறகு இந்தியாவின் வேறு பகுதிகளிலும் பரவினுர்களென்பதை யான் மறுக்கவில்லை. அவர்கள் மத்திய

இந்தியாவின் பழைய குடிகளாவென்பது தான் கேள்வி. இந்த ஞாலத்து வரலாற்றின் மூன்றும் ஊழியில் (Tertiary Epoch) சீனதேசத்தின் கீழ்க்கரையிலிருந்து இங்கிலாந்து வரையிலுள்ள மத்திய ஆசியாவை உள்ளிட்ட பெருநிலப் பகுதி ஒரே கடலாயிருந்த தென்றும், தமிழகமும் தென்னிந்தியாவும் நிலமாய் விளங்கிய பன்னெடுங் காலத்திற்குப்பின் மத்திய ஆசியாவும், இமயமும் கடலினின்றுங் கிளம்பின வென்று மண்ணின் கூறறிவார் துணிந்து கூறுகின்றனர். வட இந்தியாவும், மத்திய ஆசியாவும் வாழ்க்கைக்குரிய இடங்களாக மாறுவதற்குப் பல்லூழிகளுக்கு முன்னே தென்னிந்தியா அந்நிலை பெற்று விளங்கிய தென்பதை மண்ணின் கூறறியாரும், காவிரி, கிருட்டிணை, கோதாவரி, கங்கை, என்ற ஆறுகள் கடலொடு கலக்கு மிடத்திலுள்ள திட்டுகளின் உயரத்தைக் கொண்டறியலாம். காவிரி என்பது ஒரு சிறிய ஆறேயாயினும், அதன் முகத்திலுள்ள திட்டு கடல் மட்டத்திற்குமேல் 250 அடி உயர்ந்திருக்கின்றது. மற்ற மூன்று ஆறுகளிலுள்ள திட்டுகளோ 36முதல் 60 அடி உயரமே யுடையன. இஃதொன்று கொண்டு தென்னிந்தியாவின் சிறப்பு மிக்க தொன்மையை அறிதல் கூடும். உயிர்நூல் புலவரும், ஒருகாலிருந்து மறைந்த பறவை விலங்குகளை ஆராய்வோரும், உயிர் வகைகளின் பெருக்கமும் வளர்ச்சியும் தென்னிந்தியாவில் முதன் முதல் செவ்வனே நடைபெற்றன வென்று விளம்புகின்றனர். மற்றும், முதன் முதல் மனிதன் தோன்றிய விடம் கடல் கொண்ட தமிழகமாயிருக்கலா மென்று அவர்கள் கருதுகின்றனர். பறவை விலங்கு வகைகள் பெருகி வளர்தற்கு மிகவும் பொருத்தமான தட்ப வெப்ப நிலையில், முதலூழிக்கண்ணே தென்னிந்தியாவில் உயிர்தோன்றி வையக அதிர்ச்சிகள் முதலாகிய பேரிடையூறின்றி இதுகாறும் வளர்ந்து கொண்டே

வந்ததெனின், உயிர் வகைகளின் வளர்ச்சிக்குப் பொருத்த மில்லாத நிலையையுடைய மத்திய ஆசியாவில் உயிர் முதன் முதல் தோன்றியது நான்காம் ஊழியில் எனின், ஆரியர்கள் மத்திய ஆசியாவின் பழைய குடிகளென்று நினைப்பதற் கிடமியாதுளது? மூன்ரும் ஊழியின் இறுதியில் நிகழ்ந்த பெரிய ஞாலக் குழப்பத்திஞல் மத்திய ஆசியா கடலினின் றும் வெளிவந்து பன்னெடுங்காலஞ் சென்றபின், நாலாம் ஊழியிலிருந்த மக்கள் சிறிது சிறிதாகத் தென்னிந்தியாவி லிருந்து மத்திய ஆசியாவிற்குக் குடிபோயிருக்க வேண்டும். வரலாற்றிற்குட்பட்ட காலத்தில் மற்ருெரு சிறிய குழப்பத் தின் பயஞகத் தென்னிந்தியாவில் மற்ருெருபகுதி கடலாற் கொள்ளப்பட்டு இந்தியாவின் மத்தியிலுள்ள நிலம் முன்னினு முயர்வதாயிற்று.

இறுதியிற் கூறிய இக்குழப்பம் நேர்ந்தபின் இந்தியா வில் வாழ்ந்த மக்கள் ஒருவரோடொருவர் அளவளாவி யிருந்தது நின்றுபோய் வடக்கிலிருந்தவர்கள் ஆரிய நாகரிகத் தையும் தெற்கிலிருந்தவர்கள் தமிழர் நாகரிகத்தையும் தனித்தனியே வளர்த்திருக்க வேண்டும். இதன் பிறகு வடக்கிலிருந்தவர்கள் மேற்கு முகமாகவுந் தெற்கு முகமாக வும் பரவியிருக்க வேண்டும்.

இது பற்றியுந் தனியாக யான் எடுத்துரைக்க வேண் டிய சில மொழிகுறித்த உண்மைகள் பற்றியும், தென்னிந் தியாவிலிருந்து மக்கள் மத்திய ஆசியாவிற்குச் சென்ற பின்னரே, அங்கிருந்து அவர்கள் தெற்கே வந்தனர் என்று கருதக்கிடக்கின்றது. இதை ஏற்றுக்கொண்டால் ஆரியர் களைப்பற்றிய வெவ்வேறு வரலாறுகளுக் குள்ளிருக்கும் முரண்பாடு எளிதில் நீங்கும்.

---